தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீடு எண். 314

இராமதேவர் சூத்திரம்

(அஷ்டாங்க பட்சிணி, வாலை பூஜை)

வெளியீடு:

சுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

1991]

[விலை ரூ. 40-00

T09294
R003C06

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீடு எண். 314

இராமதேவர் சூத்திரம்

(அஷ்டாங்க பட்சிணி, வாலை பூஜை)

தமிழ் மருத்துவ நாவலர்

டாக்டர். எம். எஸ். ராஜன்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

வெளியீடு:

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

1991]

[விலை ரூ. 40-00

Bibliographical Data

Title of the Book	: RAMARDEVA SUTTIRAM
Editor	: Dr. M. S. RAJAN, Tranquebar.
Publisher	: M. SADASIVAM M.A., M.Lit., Director Saraswathi Mahal Library Thanjavur.
Publication No.	: 314
Language	: TAMIL
Edition	: FIRST
Date of Publication	: MARCH — 1991
Paper used	: Double Crown 10.9kg.
Size of the Book	: 7″×9½″
Printing type used	: 12Pt & 10Pt.
Number of Pages	: 230
No. of Copies	: 500
Price	: Rs. 40
Printer	: POPULAR PRINTING WORKS. Mayiladuturai.
Binding	: Card Board
Subject	: SIDHA MEDICINE

LB N1

முகவுரை

தமிழகத்தில் தஞ்சையை ஆண்ட சரபோஜி மாமன்னர் அவர்களால் சரசுவதிமகால் நூலகத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள அழியாப் பொட்டகமான கலைச்செல்வங்கள் ஆயிரமாயிரம் இங்குண்டு. அவற்றுள் முக்கியமாக மக்கள் இனம் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமென" நீடுவாழவேண்டிய கலைக் கருவூலமாக அமைந்தது "சித்தமருத்துவக்கலை"யாகும்.

தமிழோடு பிறந்த தமிழ் மருத்துவக் கலையானது தமிழ் மக்களின் அறிவின் முதிர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இயம்பக்கூடிய விஞ்ஞானக் கலையாகும். தமிழன் கண்ட விஞ்ஞானமான இக்கலை அவர்கள் உண்ணும் உணவிலேயே அடிப்படை யாக அமைந்து விட்டது. உண்ணும் உணவே மருந்துப் பொருள் கலவையாகி நீடுவாழ வழி செய்துள்ளது. எல்லா நஞ்சுகளுக்கும் முதல் முறிவாகிய மிளகும்-சீரகம் படைத்து வாழச் சீரகத்தையும் இதய - நோய்காக்கப் பூண்டும் வாழப்படைத்தார்களென்றால்-மூதாதையர்கள் கண்ட மருத்துவ விஞ்ஞானம் தனக்கு நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

சித்த மருத்துவ விஞ்ஞான நூல்கள் பலவற்றுள் இங்கு "இராமதேவர் சூத்திரம் சித்தமருத்துவத்திற்கு இன்று வரை தேடி வரும் "முப்பு" எனும் முதல் மருந்தை முடிக்கும் வகையும், செந்தூரம், பற்பம், களங்கு, கட்டு, தைலம், சுண்ணம் பலவற்றைச் செய்முறைகளைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

மற்றும் "சாதனையின்றிச் சாதிப்பார் யாருமில்லை" என்பதற்கேற்ப யோகம்-ஞானம் மூலமாக நம்மைச் சுற்றிக் கட்புலன்களுக்குக் காண இயலாத நுண்ணுலக மார்க்கத்தைக் காணவேண்டிய கண்கட்டு வித்தையாம் என நாம் கூறும் சித்துக்களைச் செய்ய மோடி அஞ்சனம் - அஷ்டகர்மக்கரு - மோகனம் ஸ்தம்பனம் - மாரணம் முதலியவற்றுக்குரிய உயிர் எழுத்துக்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். வசிய மார்க்கத்தையும் வகைப்படுத்தியுள்ளார். ஆதலால் இந்நூல் தமிழக மக்களுக்கும் உலக அறிவியல் ஆய்வாளர்களுக்கும் பயன்தரும் நல்ல நூலாகும் என நம்புகிறேன்.

23—2—91 இயக்குநர்,

தஞ்சாவூர் மு. சதாசிவம் M.A.,M.Lit.,

வேண்டுகோள்

கருணையுள்ளம்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, ''நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்.
5—3—91

மு. சதாசிவம் எம்.ஏ.,எம்.லிட்,
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

நூன்முகம்

தமிழகத்தில் சித்தர்கள் மரபு

தமிழக வரலாற்றில் சித்தர்கள் மரபு தனிச் சிறப்புடையதாகும். அவர்கள் முக்காலும் உணர்ந்த மூதறிஞர்கள், அவர்கள் கண்டுணர்ந்த யோகம், ஞானம், மந்திரம், வாதம், வைத்தியம் முதலிய முறைகளே சித்தர் நூல்களில் காணப்படுகின்றன.

உயர்ந்த தத்துவங்களையும் உண்மையையும் கொண்ட பாடல்களில் "புலவன் கட்டிய உலகமென இடைக்காலத்தில் வடமொழி-தென்மொழி கலப்பால் செல்வாக்குபெற்றிருந்த சில புலவர்கள் இடைச் செருகல்களை ஏட்டில் புகுத்தியும், பதுப்பித்தும் நாம் நம்பும்படி கடை விரித்து கலங்க வைத்துள்ளனர் என்பது கண் கூடு''.

சித்தர்கள் கடவுள், மதம், இனம், ஜாதி, சமய புரட்டுக்கள் அனைத்தை யும் கடந்து வாழ்ந்தவர்கள்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனவும் "உடம்பினுக்குள்ளே உருபொருளை காண்'' எனவும், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனவும் கூறி, உலக மாந்தரிடையே இன வேறுபாட்டை நீக்கச் செய்த உத்தமர்கள் ஆவார்கள். இடைக்காலத்து இவர்களுக்கும் ஜாதி பெயர்களை சூட்டி உள்ளனர் சாதியா சாரவாதிகள். காலம் அவர்களை சிந்திக்கச் செய்யட்டும்.

சித்தர்கள் மரபு பட்டியல் பலவாயினும், இரண்டு பட்டியல்கள் உள்ளன. 1) நவநாத சித்தர்கள் ஒன்பதின்மர். அவர்கள் வழி நின்றோர் பல கோடி, மந்திர வாதங்களில் வல்லமை பெற்றவர்களெனத் தெரிகிறது.

மற்றொரு பட்டியல், மூல வர்க்க சித்தர்கள் என்று கூறப்படுகிறது திரு மூலரை முதல்வராகக் கொண்ட சிஷ்யர்கள் பதினெட்டு பேர்களில் ஒருவர் இராமதேவர் ஆவார்.

இராமதேவர்

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என சிலர் கூறுவர். பொதுவாக சித்தர்கள் மனிதன் தனது உடலை உலகத்தில் பிணமாகக் கிடத்தாமல் உடலையும், உயிர் மயமாக்கி சிவமானவர்கள். சித்தர்கள் பல இடங்களில் ஜீவசமாதி ஆனவர்களெனவும் கொள்ளப்படுகிறது. அவர்கள் என்றும் நம்மோடு இருப்பவர் களாகவே கருதப்படுகிறது.

உலகினர் உயிர் உடலை விட்டு பிரிந்து இறையாகுவது என்ற கருத்துக்களுக்கு மாறுபட்டவர்கள். அவர்கள் தான் சித்தர்கள். அவர்கள் வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தக சித்தர் கணமாகும்.

இத்தகைய சித்தர்களில் ஒருவரான இராமதேவர் அட்டாங்க யோகமெனும் எண்வகை சித்திகளாகிய 1) அகிமா, 2) மகிமா, 3) லகிமா, 4) பிரார்த்தி, 5) பிகாமியம், 6) ஈஸ்த்துவம் 7) வகித்துவம் 8) கலிமா என்ற யோக நெறிகளில் சித்தி பெற்றவராவார்.

இவர் அகத்தியரின் சிஷ்யரான தேரையர் எனவும், தேரையரை வாதத்தில் (லோகத்தை தங்கமாக மாற்றுவது) வல்லவரெனக் கண்டு உலகம் கெட்டுவிடும் என்ற காரணத்தால், அவரது உருவை மாற்றச் செய்தனர் என்றும் தேரையரே பின்பு இராமதேவர் என்ற பெயரில் வாழ்ந்து வந்தார் எனவும் ஓர் கதை கூறப்படுகிறது.

மற்றொன்று, அவரே 'யாக்கூப்' எனப்பெயர் பெற்று மக்காவிற்குச் சென்று இஸ்லாமிய மதத்தை தழுவி அங்குள்ள நபிகளில் புகழ்பெற்று அநேக வைத்திய வாத நூல்களை அவர்களுக்கு போதித்து சித்துக்கள் விளையாடியவராக சொல்லப்படுகிறது.

இவர் எழுதிய வைத்திய நூல்கள் 1) வைத்திய சிந்தாமணி எழுநூறு, 2) சூத்திரம் ஐம்பது, 3) சுன்ன சூத்திரம் நூற்றைம்பது 4) சூத்திர சுருக்கம் ஐம்பத்தைந்து 5) வாதக்கிழங்கு முன்னூறு 6) வைத்திய சூத்திரம் ஐம்பது, 7) தண்டகம் நூற்றிபத்து 8) இடைபாகம் பத்தொன்பது மற்றும் பல நூல்களென கூறப்படுகிறது.

இங்கு இந்த இராமதேவர் சூத்திரத்தில் அஷ்ட்டாங்க பட்சனியில் வரும் முப்பத்து மூனு, முப்பத்தி நாலாவது சூத்திரங்கள் ''யாக்கூப்'' என்பதும் இவரே என்று கொள்ள வேண்டி இருக்கிறது. இந்நூலில் வாதத்தின் திறவு கோல், அஷ்ட்ட கர்ம கருவும், அஞ்சனமும், வசிய மாத்தும், சவுக்கார வழலை போக்கும் ஞானசித்தி கருவும், யோக தீட்சை முதலியவைகளை 72 தலைப்புகளில் கூறியுள்ளார்.

சித்தர்களின் பாடல்களுக்கு பட்டறிவு மிகுந்த பண்மொழி பாண்டித்தியம் பெற்ற புலவர்களால்தான் விளக்கமும் விரிவுரையும் கூற முடியும், என்றெண்ணி ஒரு சிறு குறிப்புரையோடு முடித்துள்ளேன். ஆதலால் குற்றம் களைந்து குறை பெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் தம் கடன் என வேண்டிக் கொள்கிறேன்.

இந்நூல் வெளியிட பொருளுதவி புரிந்த மைய அரசுக்கும் பன்மொழிப் புலமையும் பாண்டித்தியமும் பெற்ற இயக்குனர், திரு. மு. சதாசிவம் எம்.ஏ. எம்.லிட்., அவர்களுக்கும், மற்றும் நூலக நிர்வாக அலுவலர்க்கும் மற்றும்நூலகர் திரு. பஞ்சநாதன் எம்.ஏ., பிலிப்., எஸ்சி., அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டு தந்த மயிலாடுதுறை பாபுலர் அச்சகத்தார் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

தரங்கை,
1—10—90

தமிழ் மருத்துவ நாவலர்
எம். எஸ். ராஜன்

இராமதேவர் சூத்திரம்

இராமதேவர் அஷ்டாங்க பட்சணி வாலை பூசை

பொருள் அடக்கம்

பக்க எண்

1 சவுக்காரகுரு 3
2 சவுக்கார வழலை 3

சுண்ணம்

3 வழலை சுண்ணம் பண்ண 6
4 நவச்சார சுண்ணம் 13
5 சாரச் சுண்ணம் 14
6 துருசிச் சுண்ணம் 26
7 லிங்கமெழுகு சுண்ணம் 16
8 துருசு சுண்ணம் 26
9 தாளகச் சுண்ணம் 27
10 மூலிகை தாம்பர சுண்ணம் 59

கட்டு

11 சூதக்கட்டு 8
12 கரியுப்பு கட்டு 21
13 சாதிலிங்க கட்டு 24
14 கருவங்க கட்டு 34
15 மூலிகைமால்தேவி கட்டு 55
16 வெண்கார கட்டு 82

செந்தூரம்

17 ரசசெந்தூரம் 8
18 அயக்காந்த செந்தூரம் 12
19 காந்த செந்தூரம் 18
20 அஷ்டலோக செந்தூரம் 43
21 காந்த கிண்ணம் உருக்க 17
22 ரசமணி 169

பக்க எண்

செயநீர்

23 வெடியுப்பு செயநீர் 10
24 சாரச்செயநீரில் சூதம் அட்டை பதம் 16
25 பாஷாணங் கட்டசெயநீர் 32
26 இலவணத் திராவகம் 40

பற்பம்

27 சூதபற்பம் 29
28 தங்கபற்பம் 84

செம்பு

29 அயச்செம்பு 19
30 கல்தாமரை அயச்செம்பு 62
31 தங்க செம்பு 62

மெழுகு

32 காந்தமெழுகு 31
33 மூலிகையால் பாஷாணமெழுகு 57

தைலங்கள்

34 கல்லுப்பு தைலம் 22
35 கல்லுப்பு தைலத்தில் சூதம் பண்ண 23
36 பிண்டதைலம் 131

	பக்க எண்
37 பதங்கம்	36

மூலிகை

38 பேய்கடலை	66
39 நல்லாரை	69
40 பொற்சீந்தில்	68
41 பொன்னுங்கண்ணி	69
42 அருகண்ணி தொழுகண்ணி	70
43 சிவனார்வேம்பு	74
44 வெண்கரந்தை	72
45 வெள்ளை ஆவாரை	100
46 அஷ்டமாசிங்கி	77
47 அஷ்டாவாலை	91
48 அஷ்டகர்ம எட்டுக்கும் அட்சரம்	93
49 அஷ்டகர்மவாலை	107
50 தெய்வ வணக்கம்	155

சித்தவித்தை

	பக்க எண்
51 சிமிள்வித்தை	122
52 மோடிவித்தை	136
53 உலகத்து மோடி	138
54 ஆகாச மோடி	142
55 அக்கினி மோடி	143
56 மாரணவித்தை	161
57 வில்வித்தை	166
58 செடிமுளைக்க	149
59 கருங்குரங்கு	135
60 புருஷவசியம்	102
61 ஆதிஅட்சரசக்கரம்	86
62 அடிமுடி	86

வினோதம்

63 அக்கினிவினோதம் மானவினோதம்	146
64 பாவைவினோதம்	147
65 வினோதம்	150
66 கரிகால் வினோதம் சோருவேகதக விநோதம்	151
67 பாராங்கல் வினோதம்	153

கருவகை

68 எட்டுகர்மத்துக்கும் மை	177
69 சர்வசிய அஞ்சனம்	102
70 ஊர்கருவிற்கு	85
71 உருமாற்றக் கருமை	133

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க

இராம தேவர் சூத்திரம் - 500

ஆதியந்தமே நிறைந்த சோதி பாதம்
அகண்ட பரிபூரணத்தின் அறிவிற் கூடி
பாதியந்த முப்பொருளும் மூன்று மொன்றாய்
பரவெளியாய் நின்ற பராபரையின் பாதம்
நீதியாயி வாரணத்தின் முகவன் பாதம்
நிறைந்த மலர் வாணி குருகந்தன் பாதம்
சோதியாயி னாதாக்கள் பாதம் போற்றி
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லுவேனே (1)

சொல்லுவேன் வாதத்தின் திறவு கோலும்
சுருக்கான அஷ்டகர்மக் கருவும் நன்றாய்
அல்லுவேன் அஞ்சனமும் வசிய மாத்தும்
ஆதியென்ற சவுக்கார வழலை போக்கும்
நல்லுவேன் ஞானசித்தி மவுனவாலை
நாட்டடா கருக்குருவும் யோகை தீட்சை
மல்லுவேன் சித்தர்கள் தான் மறைத்தபொருள்களெல்லாம்
மாட்டினேன் வெளி திறந்து மைந்தா பாரே (2)

---

1. ஆதி அந்தமாக உள்ள திருவடியை போற்றி, அகண்ட பரிபூரணமான அறிவில் நின்று ஆணவம், மாயை, கண்மம் ஆகியவற்றை நீக்கும் தாயின் பாதம் போற்றி, விநாயகனின் பாதம் போற்றி, கலைவாணி, முருகன் ஆகியோரின் பாதம் போற்றி, சோதி வடிவாய் மரணமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர்களின் திருவடி களை போற்றி, சூத்திரமாக என் நூலை சொல்லுகின்றேன்.

2. இரசவாதத்தின் திறவுகோலும், அஷ்டகர்ம கருவும், அஞ்சனமும், வசியமும் அதன் மாற்றும் ஆதி பொருள் என்று கூறப்படும் முப்பூவும் ஞானசித்தி, மௌன வாலை முதலியனவும்...... யோகதீட்சை முதலிய சித்தர்கள் மறை பொருளாக, கூறியவை அனைத்தையும் வெளிப்படையாகக் கூறுவேன்.

பாரப்பா ஒருநூலைப் பார்த்துப் பார்த்து
பரிவாக ஒவ்வொன்றாய் கண்டு தேறி
தேரப்பா சூத்திரமாய் அடுக்கிச் சொன்னேன்
நேத்திரம் போல் தோணுமடா பொருள்களெல்லாம்
சாரப்பா பனிரெண்டு வருஷந்தானும்
சற்குருவை காத்தோர்க்கு இன்னூல் கிட்டும்
காரப்பா உலகத்தில் கர்மிக்கி ஈந்தால்
கழுதையெனப் பிறந்து நரகெய்துவானே (3)

எய்தாம லறிவுகொண்டு அறிவையுண்ணி
ஏகாமல் வாசியை நீயிழுத்து வாங்கி
யெய்தாமல் அன்புவினை அறுத்துச் சாடி
ஆத்தாளை பூசித்துப்பார் வுண்ணி
உய்தாமல் உலகத்தைப் பறை செய்யாமல்
ஒருவருக்கும் தெரியாமல் மவுனமான
நைதாமல் நரகத்தில் சிக்கிடாமல்
நாலறிந்து காலறிந்து நிலையில் நில்லே (4)

நில்லென்றால் வேதாந்தம் நிற்குமோ சொல்
நிர்மூட வாதியோர்க்கு வருமோ வாதம்
சொல்லென்றால் ஞானந்தான் சொல்லுவாரோ
துன்ப வினை போவென்றால் போகுமோ சொல்
அல்லென்ற விட்டகுறை வந்ததானால்
அறிவு தங்கும் நந்தி குருவாசான் சொல்வார்
நில்லென்று துன்பமத்து போன வித்தை
நிற்க வென்றா லின்னூல்தான் நிசமாம் பாரே (5)

---

3. நான் ஒவ்வொரு நூலாக பார்த்து தெளிந்து இந்நூலை சொன்னேன். இந்த நூல் நேத்திரம் போல் வழிகாட்டும். பன்னிரண்டு ஆண்டுகள் சற்குருவிடம் தொண்டு செய்து காத்திருந்தால் இந்நூல் கிட்டும். பாவங்கள் செய்வோருக்கு இந்நூலை தந்தால் கழுதையாகப் பிறந்து நரகத்தை எய்துவார்கள்.

4. அறிவை உணர்ந்து நான்கு அங்குலம் வீணாகிக் கொண்டிருக்கும் வாசியை இழுத்துப் பிடித்து பந்த பாசங்களில் சிக்காமல் அருளை பூசித்து நீ அறிந்த உண்மைகளை வெளியில் விளம்பரம் செய்யாமல் வாழ்வாயாக.

5. உண்மையை அறியாத இரசவாதிகளுக்கு வாதம் சித்திக்காது. பிறர்க்கு உபதேசம் சொல்ல மெய்ஞான உணர்வும் இவர்களுக்கு இல்லை. முன்பிறவியில் புண்ணியம் செய்து விட்ட குறை இருந்தது. ஆனால் உள்ளுணர்வில் சித்தர்களின் தலைவராகிய நந்தீஸ்வரர் உணர்த்துவார். துன்பமற்ற இடத்தில் நின்று பார்த்தாயானால் இந் நூலின் உண்மைகள் அனுபவமாகும்.

3 TO 13PAGES MISSING IN BOOK

போட்டுமே யேழுநாள் காய்ந்த பின்பு
புகழான வெடியுப்பு யப்புரேகம் ரெண்டு
ஆட்டியே செயநீரில் அரைத்துப் பூசி
அழகான செங்கலென்ற குகையில் வைத்து
மூட்டுமே மேலுமந்த சில்லால் மூடி
முயற்சியாய் யேழுசீலை மண்ணும் செய்து
தீட்டுமே தாய்பதத்தை பூசை பண்ணி
சிவா சிவா கெசபுடத்திற் செந்தூரமாமே (36)

ஆமென்ற செந்தூரம் நவலோகத்திலனைத்திடவே
வாயிரத்துக் கொண்ணாம் பாரு
தாமென்ற வனுபானத்தோடே கொண்டால்
தப்பாது நோய்க்கெல்லாம் தவிடுபொடியாகும்
போமென்ற காயசித்தி மண்வத்திலாகும்
போக்கோடே பத்தியமாய் உண்டு தேறு
நாமென்ற யிரும்பிலே வேதை கோடி
நலமான சாரத்தின் சுண்ணங்கேளே (37)

நவச்சார சுண்ணம்

கேளப்பா நவச்சாரம் பலந்தானொன்று
கெடியாகச் சொல்லுகிறேன் சூட்சமாக
வேளப்பா யிதனுடைய போக்கு தன்னை
விரித்து நான்பாட வென்றால் வெள்ளேடில்லை
நாடப்பா கோடியுக மலைஞ்சு பார்த்தேன்
நலமாக எவ்வளவு மேருவாக
சூளப்பா சாரவித்தை சுருக்கிச் சொல்வேன்
சுகமான செயநீரில் தோய்த்திடாயே (38)

---

36. செய நீரில் வெடி உப்பு, அப்ரேகம் இரண்டும் அரைத்து பூசி, செங்கல் குகையில் வைத்து ஏழு சீலைமண் செய்து கஜ புடமிடவும்.

37. அயம் செந்தூரமாகும். நவலோகத்தில் தந்தால் களிம்பு போகும். அனுபானம் அறிந்து கொண்டால் எல்லா நோய்களும் தவிடு பொடியாகும். காய சித்தி சனத்தில் உண்டாகும். இந்த மருந்தை பத்தியமாய் உண்டு நல்ல கதியை அடைய வேண்டும். அயச் செந்தூரத்தில் இன்னும் வேதைகள் பல செய்யலாம். இனி, சாரச் சுண்ணம் கேட்பாயாக!

38. நவச்சாரம் பலம் ஒன்று எடுத்துக்கொள். சாரத்தின் போக்கை நான் சொல்லுவதென்றால் ஏடுகள் போதா. கோடி யுகம் அலைந்து இதனைக் கற்றேன். சார வித்தையை நான் சுருக்கமாக சொல்லுகின்றேன். வெடி உப்பு செய நீரில் சாரத்தை,

சாரச் சுண்ணம்

தோய்த்துமே யேழுநாள் ரவியில் போடு
துப்பரவாய் காய்ந்த பின்பு எடுத்துக்கொண்டு
ஆய்த்திடவே பொரிகாரஞ் சீனாகாரம்
அப்பனே சூடனொடு வீரம் பூரம்
நயத்திடவே பழச்சாற்றா லரைத்து மைபோல்
நலமான சாரத்தின் மேலே பூசி
யோய்த்திடவே சட்டியிலே கல்சுண்ணமிட்டு
உத்தமனே சாரத்தின் கட்டி வையே (39)

வையப்பா அதன்மேலே கலச் சுண்ணமிட்டு
வாகான மேல்மூடி சீலை செய்து
அய்யப்பா அடுப்பேற்றி ஆவாரையின் விறகி
லப்பனே சாமந்தான் கமலம் போலே
மெய்யப்பா யெரித்து பின்னாற விட்டு வாங்கு
விதமான சாரமது சுண்ணமாகும்
பொய்யப்பா சொல்லவில்லைச் சாரச்சுண்ணம்
புகழான அண்டரெண்டம் நீரிப்போமே (40)

போமெனவே சரக்கான தறுபத்து நாலும்
பூட்டிடவே பஞ்சுபோல பொருமி நீரும்
வேமேதான் நவலோகம் வெளுத்து நீறாம்
வெகுசுருக்கு வெகுசுருக்கு வேதை கோடி
யாமேதான் சுண்ணத்தில் வீரம் பூரம்
அனைத்து மெள்ளவாய் நீறாலது ருசிக்கப்படா
நாமேதான் சுண்ணாம்பு சீலை செய்து
நாட்டியே பத்தெருவில் புடத்தைப் போடே (41)

---

39. தோய்த்து தோய்த்து ஏழுநாள் ரவியில் போடவும். காய்ந்த பின்பு பொரிகாரம், சீனம், சூடம், வீரம், பூரம் இவற்றை பழச்சாற்றால் அரைத்து மைபோல நலமான சாரத்தில் மேல் பூசி, ஒரு சட்டியில் கல் சுண்ணமிட்டு அதில் சாரத்தை வைத்து,

40. அதன் மேல் கல் சுண்ணமிட்டு மேல் மூடி சீலை செய்து, ஆவாரை விறகால் ஒரு சாமம் கமலாக்கினியாய் எரிக்கவும். ஆறியபின் எடுத்துப் பார்த்தால் சாரம் சுண்ண மாகியிருக்கும். இதனால் அண்டங்கள் யாவும் நீறும்

41. அறுபத்து நான்கு சரக்கும் நீறும். நவலோகங்களும் வெளுத்து நீறும். இந்த வித்தை மிகவும் சுருக்கமானதாகும். இந்த சுண்ணத்துடன் வீரம், பூரம் சேர்த்து வாய் நீரால் அரைத்து துருசுக்கு அப்பி சுண்ணாம்பு சீலை செய்து பத்து எருவில் புடமிடவும்.

துருசிச் சுன்னம்

போடவே நீரியது சுண்ணமாகும்
புகழான துருசி னிடபோக்கு மெத்த
நாடவே சூதமது விரைத்துப் போகும்
நலமான சாரத்தா லெல்லா மாச்சு
வாடவே யிதைவிட்டால் வேதைப் போச்சு
வழலையென்ற நாமமது சாரத்தாலே
தேடவே சாந்தமென்ற சுண்ணந்தன்னை
சிறப்பான பனியில் வைக்க செயநீராமே (42)

நீரான செயநீரில் வீரம் பூரம்
நிலையாக மத்தித்து வைத்துக் கொண்டு
கூறான நாகத்தை யுருக்கிச் சாய்க்க
குடிகெடுத்த புகையேழுங் கட்டிப்போகும்
மாறான நாகத் தினிடையே தங்கம்
மந்தடக்கி சூதமுடன் கெந்தி கூட்டி
பேறான குலாமல்லி சாற்றாலாட்டி
பொடி பண்ணி காசியென்ற மேருக்கேத்தே (43)

யேத்தியே வாலுகையில் தீயை மூட்டி
யெரித்திடுவாய் பன்னிரண்டு சாமந்தானும்
மாத்தியே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
வருணநிறம் போல் இருக்கும் செந்தூரமப்பா
போத்தியே யொருவருடன் பேச வேண்டாம்
புகழான நவலோகம் எல்லாம் பொன்னாம்
தேத்தியதோர் செந்தூரம் தேனிலுண்ண
சிறப்பான சட்டிக்கு வாலையாமே (44)

---

42. துருசு சுண்ணமாகும். இதனால் சூதம் கட்டும் சாரத்தினால் எல்லா வேதைகளும் கைகூடும். வழலை என்பது சாரமே. சாரச் சுண்ணத்தை பனியில் வைத்தால் செயநீராகும்.

43. இந்த செயநீரில் வீரம், பூரம் பொடித்துப்போட்டு, நாகத்தை உருக்கி சாய்க்க நாகம் கட்டும். நாகம், தங்கம் இரண்டும் சம எடை எடுத்துக்கொண்டு அதனுடன் சூதம், கந்தி சம எடை கூட்டி மல்லிகை சாற்றால் ஆட்டி காசிக் குப்பியில் வைத்து,

44. பன்னிரண்டு சாமம் எரிக்கவும். செந்தூரம் உதயசூரியன் போல் இருக்கும். நவலோகமும் பொன்னாகும். தேனில் உண்ண தேகம் வாலையாகும்.

வாலையாம் செயநீரி லின்னங் கேளு
வாதான பாசாண வர்க்க மறுபத்து நாலும்
சாலவே தோய்த்து மொள்ள வாட்டும் போது
சணத்திலே மெழுகுயாகும் வேதையாகும்
ஆலையாம் சூதத்திர செயநீர் குத்தி
யரைத்திடவே சூதமது அட்டைபோலாம்
மாலையாம் சூதத்தில் சாரணையே செய்யில்
மாசற்ற தரச்சுடரை மருவலாமே (45)

சாரச் செயநீரில் சூதம் அட்டைபதம் கல்லுப்பு லிங்க மெழுகு சுன்னம்

மருவவே லிங்கத்தில் பரித்தகடு சுற்றி
மகத்தான செயநீரில் துவைத்து வாட்டி
யுருகியே பரியெல்லாம் உள்ளே வாங்கி
உற்றதொரு லிங்கமது மெழுகுமாகும்
பருகியே வெள்ளியிலே நூற்றுக்கொன்று
பாய்ச்சிடவே பத்தரையாம் மாத்துக்காணும்
கருதியே சாரத்தின் செயநீராலே
கண்டு கொள்ளா வேதையுமாங் கண்டு பாரே (46)

கண்டுபார் கல்லுப்புச் சுன்னம் சொல்வேன்
கசகாமல் பலமொன்று நிறுத்துக் கொண்டு
பண்டுகேள் செயநீரில் தோய்த்துத் தோய்த்து
பருவமா யேழுநாள் ரவியில் போட்டு
விண்டுபார் பளிங்குபோல வெளுரிக்கட்டும்
விதமாக வதன்மேலே வீரம் பூரம்
அண்டான புழுகெடு வழலைச் சுண்ண
மப்பனே யிவை நாலும் சமனாய்க்கூட்டே (47)

---

45. சார செயநீரில் அறுபத்துநான்கு பாடணங்களையும் தோய்த்து வாட்டினால் மெழுகு ஆகும். பல வேதைகள் செய்யலாம். செயநீரை சூதத்தில் விட்டு அரைக்க கட்டும். அதை சாரணை செய்தால் குளிகையாகும். அதனால் சுடரை தழுவலாம்.

46. லிங்கத்தில் தங்கத்தகடு சுற்றி செயநீரில் தோய்த்து வாட்டினால் லிங்கம் தங்கத்தை உள்ளே வாங்கும். லிங்கம் மெழுகும் ஆகும். இதை வெள்ளியில் நூற்றுக்கு ஒன்று தந்தால் பத்தரை மாத்து காணும். சார செய நீரில் இன்னும் பல வேதைகள் செய்யலாம்.

47. கல் உப்பு ஒருபலம் சார செயநீரில் தோய்த்து தோய்த்து ஏழு நாள் ரவியில் போடவும். பளிங்குபோல் வெளுத்து கட்டும். வீரம், பூரம், புனுகு, வழலைச் சுண்ணம் ஆகியவற்றை சம எடை எடுத்துக்கொண்டு,

கூட்டியே சாரத்தின் செய நீராலாட்டி
குழம்பாக பீங்கானில் வழித்து வாங்கி
பூட்டியே உப்புதன்னை புரட்டி நன்றாய்
புகழான கடுஞ்சுன்னக் குகையில் வைத்து
மூட்டியே மேல்மூடி சீலை செய்து
முயற்சியாய் உவர்ப்பூவும் கல்லுச் சுன்னம்
தீட்டியே செய்து ரவி முகத்திலிட்டு
சிறப்பாக பத்தெருவில் புடத்தைப் போடே (48)

போடவே கல்லுப்பு சுன்னமாச்சு
புகழான வாதமதி லடங்கிப் போச்சு
நாடவே லவண வகைக்கெல்லாம் மைந்தா
நலமான முதற்குருவாம் நாடிப்பாரு
கூடவே சரக்கு வகைக்கெல்லாம் கட்டும்
குருவாகும் பிரித்திட்டால் வேதை கோடி
தேடவே சூதமது கட்டிப் போகும்
சிறப்பான காயசித்தி யோக சித்தியாமே (49)

காந்தக் கிண்ணம் உருக்க

சித்தியாம் காந்தத்தின் கிண்ணம் சொல்வேன்
செப்பரிய காந்தமது பலந்தான் பத்து
வெத்தியாம் மேனியிலை எருக்கம் பாலும்
விரவியரை காந்தத்தின் மேலே பூசி
பத்தியாய் புடம்போட்டு எடுத்துக் கொண்டு
பரிவான கல்வத்தில் நொறுக்கி யேதான்
முத்தியாய் வெண்காரம் வீரம் பூரம்
முனையான சாரமொடு கல்லுப்பஞ்சே (50)

---

48. சார செய நீரால் ஆட்டி கல் உப்பை அதில் புரட்டி, சுண்ண குகையில் வைத்து பத்து எருவில் புடமிடவும்.

49. கல் உப்பு சுண்ணமாகும். வாத முறைகளெல்லாம் இதில் ஆகும். உப்பு வகைகளெல்லாம் சுண்ணமாக்குவதற்கு இதுவே முதல் குருவாகும். எல்லா சரக்குகளும் இதில் கட்டும். சூதம் கட்டும். காயசித்தி உண்டாகும். யோக சித்தி உண்டாகும்.

50. இனி காந்த கிண்ணம் சொல்லுவேன். பத்து பலம் காந்தத்தின் மீது குப்பை மேனி இலை, எருக்கம்பால் கலந்து பூசி புடம் போட்டு எடுத்துக் கொள்ளவும். அதை கல்வத்தில் இட்டு தூளாக்கி வெண்காரம், வீரம், பூரம், சாரம், கல் உப்பு,

அஞ்சான வெள்ளையென்ற பாஷாணத்தோடு
அரிதாரம் சிலையும் பூநீருஞ் சீனம்
மிஞ்சாதே வகைவகைக்குப் பலமுங்கால்தான்
மீறாதே நிறுத்துமே கல்வத்திட்டு
துஞ்சான வெடியுப்பும் புளியும் கூட்டி
சுருதியாம் ரோமத்தின் இடையே செய்து
நஞ்சான ஊமையாம் கிளிஞ்சி சேர்த்து
நலமாக யிடித்ததனை சுண்ணமாக்கே (51)

ஆக்கியே சாரஞ்சேர் பனியில் வைக்க
அப்பனே செயநீராம் முன் மருந்தில்
தாக்கியே யரைத்து நன்றாய் குழம்பா பண்ணி
சதகமா யஞ்சு பங்கிட்டு நீயும்
பாக்கியே யரைத்து நன்றாய் காந்தத்தில் பிசறிக்கொண்டு
பரிவான வச்சிரமாங் குகையிலிட்டு
தேக்கியே மேலுமந்த சில்லால் மூடி
துயரமாய் சீலைசெய்து ஞானத்தூதே (52)

காந்தச் செந்தூரம்

ஊதவே மணிமணியாய் சத்தாய் விழும்
உத்தமனே ஆராய்ந்து பொருக்கிக் கொண்டு
நிசமான குழம்பியே பிசரி முன்போல
சீதவே யிப்படியே யைந்துதர மூது
கெடியான காந்தமது சத்துமாமே (53)

---

51. வெள்ளை பாடாணாம் அறிதாரம் மனோசீலை பூநீறு சீனம் வகைக்கு கால்பலம் எடுத்து கல்வத்தில் இட்டு வெடியுப்பும், புளியும் சேர்த்து உரோம நீர் கூட்டி கிளிஞ்சல் சுண்ணம் சேர்த்து இடித்து சுண்ணமாக்குவாயாக.

52. இந்த சுண்ணத்துடன் சாரம் சேர்த்து பனியில் வைக்க செயநீராகும். இந்த செயநீரை வெண்காரம் வீரம் பூரம் முதலியவற்றோடு சேர்த்து அறைத்து குழாம்பாக்கி ஐந்து பங்கிடுவாயாக. ஒரு பங்கை முன் சொன்ன காந்தத்தில் பிசரிக் கொண்டு வச்சிரக் குகையில் இட்டு சில்லால் மூடி சீலை மண் செய்து ஊத வேண்டும்.

53. அப்போது காந்தம் மணிமணியாக திறண்டு சத்தாகும். இவற்றை முன் சொன்னக் குழம்பில் தோய்த்து முன் போலவே உலையில் ஊத வேண்டும். காந்தம் சிறந்த சத்தாகும்.

சத்தெடுத்து மெழுகு கட்டி கிண்ணி வாத்து
சாதகமாய் பாலுண்ணு கற்பமுண்ணு
பெத்தெடுத்த தேகமது சித்தியாகும்
பேசாதே கிண்ணியிலே சூதங்கட்டும்
மைத்தொரு கிண்ணியிலே தங்கம் சேர்த்து
ஐந்திடைக்கு கெந்தகத்தை சமனாய்க்கூட்டி
உத்ததொரு சூதமதில் பாதி சேர்த்து
உறுதியாய் குலாமல்லி சாத்தாலாட்டே (54)

ஆட்டியே ஆறு சாமமான பின்பு
அப்பனே பொடி பண்ணி மேருக்கேத்து
நீட்டியே வாலுகையில் மேலே வைத்து
நிதமாக கமலம் போல் யீராறுசாமம்
தீட்டியே யாறவிட்டு யெடுத்துப் பாரு
சிவசிவா யென்ன சொல்வேன் செந்தூரமப்பா
ஊட்டியே நவலோக மாயிரத்துக் கொன்று
உறுதியாங் கற்பமது உண்ணு உண்ணே (55)

அயச் செம்பு

உண்ணவே அயச்செம்பு சொல்லக் கேளு
உத்தமனே அரப்பொடிதான் பலமோ பத்து
கன்னவே பழச்சாற்றில் சுத்தி செய்து
கழுவியெடுத்து நன்றாய் கருவைக் கேளு
பண்ணவே பருங்கொன்னை மருதோன்றி வித்து
பரிவாக செம்பாக நீட்டித்துலத்தி
யன்னவே பூப்புடத்தில் தைலம் வாங்கி
அதிலிடவும் மருந்தினைத்தான் அறையக் கேளே (56)

---

54. இந்தக் காந்த சத்தை எடுத்து கிண்ணியாக செய்துக் கொண்டு அதில் பால் வார்த்து கற்பங்கள் வைத்து உண்டால் தேகம் சித்தியாகும். காந்தக் கிண்ணியில் சூதம் கட்டும். கிண்ணியில் தங்கம் சேர்த்து அதற்கு சமம் கந்தகம் சேர்த்து அதில் பாதி சூதம் சேர்த்து மல்லிகை சார் வார்த்து.

55. ஆறு சாமம் கல்வத்தை ஆட்டி காசிக் குப்பியில் வைத்து பனிரண்டு சாமம் கமலக்கினியாக எரித்து ஆரிய பின் எடுத்து பார்க்க சிறந்த செந்தூரமாய் இருக்கும். நவலோகங்களிலும் ஆயிரத்துக்கு ஒன்று தர மாற்று ஆகும். இதுவே கற்பம் ஆகும்.

56. ஆய அரப்படி பத்து பலம் பழச்சாற்றில் சுத்தி செய்து பருமையான கொன்றை வித்து, மறு தோண்றி வித்து இரண்டையும் சேர்த்து உலர்த்தி குழி தைலம் வாங்கி

கேளப்பா பொரிகாரம் துருசிகாரம்
கெடியான கல்லுப்பு சீனம்தொட்டி
வேளப்பா வகை வகைக்குப் பலமுங்கால்தான்
வெகுளாதே துருசியொரு பலந்தான்போடு
நாளப்பா அண்ட வெள்ளைக் கருவாலாட்டி
நலமான முந்தையத்தோடே சேர்த்து
சூளப்பா அரைப்பொடியை பிசறி வைத்து
துடியாத குகையிலிட்டு சரஉலையிலூத (57)

ஊதியே யெடுத்துப்பார் சத்தாய் விழும்
உத்தமனே உடைத்து நன்றாய் தைலத்திற்பிசறி
பாதியே குகையிலிட்டு மூடியூது
பருவமாய் எடுத்து முன்போல தைலத்திற்பிசறி
ஆறியே யிப்படிதான் ஐந்துதரம் ஊது
அருண நிறம்போல இருக்கும் செம்பு மக்காள்
வாரியே செம்பினிடை தங்கங் கூட்டி
தருவான சூதமது கெந்தி சேரே (58)

சேர்த்துமே லிங்கமொரு களஞ்சிப் போட்டு
செங்கீரைச் சாற்றினாலாட்டி மைபோல
பார்த்துமே வாலுகையின் மேருக்கேத்தி
பன்னிரண்டு சாமந்தான் எரித்துவாங்கி
ஆத்துமே செந்தூரம் பவழம் போலாம்
அம்ம அம்மா நவலோகமாயிரத்துக்கோடும்
ஏத்துமே காயசித்தி ககனசித்தி
புகழான வாதத்துக் காதியாமே (59)

---

57. பொறி காரம் துருசு வெண்காரம் கல்லுப்பு, சீனம், தொட்டி பாடானம் வகைக்கு கால்பலம், துருசு என்ற உப்பு ஒரு பலம். இவற்றை முட்டை வெண்கருவால் ஆட்டி அயப் பொடியுடன் சேர்த்து பிசரி வைத்து சர உலையில் இட்டு ஊத வேண்டும்.

58. அப்போது அயம் சத்தாகும். அதை முன்கூறிய குழி தைலத்தில் பிசறி குகையில் வைத்து ஊத வேண்டும். இவ்வாறு ஐந்து முறை செய்ய வேண்டும். அயம் செம்பாகி அருணன் போல் இருக்கும். இந்த செம்பின் எடைக்கு தங்கம் சேர்த்து அதனுடன் சம எடை சூதம், கெந்தி சேர்த்து

59. ஒரு களஞ்சி லிங்கம் சேர்த்து செங்கீரை சாற்றினால் ஆட்டி காசிக்குப்பியில் வைத்து பனிரண்டு சாமம் எரித்து எடுத்தால் பவழம் போல் செந்தூரமாகும். காயசித்தி, ககனசித்தி, உண்டாகும். நவலோகம் பொன்னாகும்.

கரியுப்புக் கட்டு

ஆதியாங் கரியுப்பு கட்டு சொல்வேன்
ஆராய்ந்து பருமணியாய் பொருக்கிக்கொண்டு
பாதியாம் பலமஞ்சு நிறுத்து வைத்து
பாங்கான குதிரையடிப் பச்சிலையை வாங்கி
சாதியாம் குழிமிட்டான் இலையினோடு
சமனாக யிடித்துச் சாறதனை வாங்கி
நீதியாய் உப்புதனை தோய்த்துத் தோய்த்து
நினைவாக ஏழுநாள் ரவியில் போடே (60)

போட்டுமே கழுதையுட பச்சை லத்தி
புகழான வன்னிபட்டை சமனாய்ச் சேர்த்து
ஆட்டுமே மொழுகு போல் நையஇடித்து
அடைபோல அஞ்சுபங்கு செய்துகொண்டு
தீட்டுமே யுப்பை யொரு அடைக்குள்வை
சிறப்பாக மேலுமொரு அடையால்மூடி
காட்டுமே அஞ்செருவில் புடத்தைப் போடு
கசகாமல் எடுத்து மறுபடியும் செய்யே (61)

செய்யவே யாறவிட்டு எடுத்து முன்போல
சிறப்பாக அடையில் வைத்து அடையால்மூடி
பையவே சீலை செய்து புடத்தைப்போடு
பக்குவமா யாறவிட்டு யெடுத்துப்பாரு
மெய்யாக அடைக்குள் வைத்து முன்போல்போடு
விதமாக வைந்துதரம் போட்டுத்தீரு
அய்யய்யோ மயங்காதே முழுக் கட்டாச்சு
அப்பனே நவலோக தஞ்சுமாத்தே (62)

---

60. மணி, மணியாய் கரியுப்பை ஐந்து பலம் எடுத்துக் கொண்டு குதிரைக் குளம்படி குழிமீட்டான் இலை சமமாக சேர்த்து சாறு எடுத்து உப்பை அதில் தோய்த்து, தோய்த்து ஏழு நாள் ரவியில் போடவும்.

61. கழுதை லத்தியில் வன்னிப்பட்டை சமமாய் சேர்த்து இடித்து அடை போல் செய்துக் கொண்டு ஒரு அடையில் உப்பை வைத்து மற்றொரு அடையால் மூடி ஐந்து எருவில் புடமிடுக.

62. இவ்வாறு ஐந்து முறை புடமிடுக. கரியுப்பு முழுக்கட்டாகும். நவலோகத்தில் கொடுத்தால் ஐந்து மாற்றாகும்.

மாத்தான யுப்பதுதான் உள்ளே கொண்டால்
மகத்தான வாய்வோடு குன்மந்தீறும்
ஊத்தான கரியில் வைத்து உருக்கஆடும்
உத்தமனே தங்கமிட்டு செந்தூரித்தால்
பாத்தாலோ லோகமெல்லாம் பழுக்கும் வேதை
படுமுன்னே சரக்கெல்லாம் கட்டிப் போகும்
காத்தான நாற்பதுநாள் பத்தியமாயுண்ண
கனமான தீர்க்கமது கலத்தூணாமே (63)

ஆமப்பா மாத்திதரா புடத்துக் கெல்லாம்
அப்பனே கட்டியதோர் உப்புரெண்டு
காமப்பா பூத்தோடு ஒருபங்கு கூட்டு
கடியாது சடுதியிலே யிறங்கும் பாரு
வேமப்பா பச்சையுப்பு புடத்துக்காகா
வேதக்கம் காயசித்திக்காக வென்றும்
தாமப்பா கருவையெல்லாம் சாத்தினேன் நான்
சமத்தான கல்லுப்பு தைலங் கேளே (64)

கல்லுப்புத் தைலம்

கேளப்பா கல்லுப்பு பாக்கு போலுடைத்து
கெடியாக பலம்பத்தும் நிறுத்துக் கொண்டு
வாளப்பா புங்கம்வேர் தைலம் வாங்கி
வளமான கரந்தைச் சார் சமனாயிட்டு
வேளப்பா வெண்காரம் வீரம் பூரம்
விதமான நவச்சாரம் நாலுங்கேளு
தாளப்பா வகை வகைக்குப் பலமுங் கால்தான்
சாதகமாய் பொடித்தந்த தைலத்தில் பிசறே (65)

---

63. இதை உட் கொண்டால் வாயு குன்மம் தீரும். கரியில் வைத்து உருக்கினால் மணி போல் ஆடும். தங்கம் சேர்த்து செந்தூரித்தால் எல்லா உலோகங்களும் பழுக்கும். எல்லா சரக்குகளும் கட்டும் நாற்பது நாள் பத்தியமாய் உண்ண உடம்பு கல் தூணாகும்.

64. கட்டிய உப்பு இரண்டு பங்கு காவி கல் ஒரு பங்கு கூட்டி புடமிட தங்கம் இறங்கும். பச்சை உப்பு சேர்த்து புடமிடக் கூடாது. வேதைக்கும், காயசித்திக்கும் உயிராக உள்ள உப்புக் கட்டை இப்போதுக் கூறினேன். இனி கல்லுப்புத் தைலம் கூறுவேன்.

65. கல்லுப்பை பாக்குப் போல் உடைத்துக் கொண்டு பத்து பலம் நிறுத்து எடுத்து புங்கம் வேர் தைலம் வாங்கி கரந்தை சார் சமமாய் சேர்த்து வெண்காரம், வீரம், பூரம் நவச்சாரம் கால்பலம் பொடித்து தைலத்தில் போட்டு

பிசறியே கல்லுப்புத் தோய்த்து தோய்த்து
பேதமில்லா யேழுநாள் ரவியில் போடு
சிதறாதே காய்ந்த பின்பு கல்வத்திட்டு
சிறப்பான தைலத்தைக் குத்தியாட்டு
அசடில்லா வில்லைதட்டி காயப் போட்டு
அப்பனே பூப்புடத்தில் தைலம் வாங்கு
கசகாமல் உப்பினிட தைலம் தன்னில்
மறுபடியும் கல்லுப்பைத் தோய்த்துப் போடே (66)

போட்டுமே யேழுநாள் காய்ந்த பின்பு
புகழான தைலத்தா லரைத்துக்கட்டு
ஆட்டுமே முன்போலே தைலம் வாங்கி
அப்பனே மறுபடியும் உப்புத் தோய்த்து
காட்டுமே யேழுநாள் ரவியில் போடு
கனமான தைலத்தா லரைத்துலத்தி
ஊட்டுமே முன்போலே தைலம் வாங்கி
உத்தமனே இப்படியே ஏழுதரம் வாங்கே (67)

கல்லுப்புத் தைலத்தில் சூதம் பண்ண

வாங்கியே தைலத்தில் வீரம் பூரம்
வளமான புன்கொடு குருவண்டு நாபி
தாங்கியதோர் வழலையொரு காசு போட்டு
சாதகமாய் மத்தித்து சாத்தக் கேளு
ஓங்கியே சரக்கறுபத்து நாலும்
உத்துமெள்ள வாட்டையிலே மெழுகுமாகும்
பாங்கியே உபரசங்கள் ஈயமாகும்
படுமுன்னே நவலோகம் பழுக்குந்தானே (68)

---

66. கல்லுப்பை தோய்த்து, தோய்த்து ஏழு நாள் ரவியில் போட்டு காய்ந்த பின் கல்வத்தில் இட்டு தைலத்தை விட்டு அரைத்து வில்லைத்தட்டி காயவைத்து பூப்புடம் இட்டு தைலம் வாங்கவும். இந்த தைலத்தில் மீண்டும் கல்லுப்பை தோய்த்துப் போட்டு

67. முன் போலவே பூப்புடம் இட்டு தைலம் வாங்கவும். இவ்வாறு ஏழு முறை தைலம் வாங்கவும்.

68. இவ்வாறு வாங்கப்பட்ட தைலத்தில் வீரம், பூரம், புனுகு, குருவண்டு, நாவீ, வழலைச் சுண்ணம் ஆகியவை ஒருக் காசு எடைப் போட்டு, மத்திக்கவும். இதில் தோய்த்து வாட்டுவதால் அறுபத்து நான்கு சரக்கும் மெழுகாகும். உபரசங்கள் யாவும் ஈயமாகும். நவலோகங்கள் பழுக்கும்.

தானான சூதமது வெண்ணெய் போலாம்
　　கானான யிரும்பு கண்ணில் வழித்து வைத்து
கடிதான தவளை நெய்யில் சுருக்கு
　　தாக்கு தீத்தாக்க தாக்க
பானான யிட்டிலிபோல வெளுத்துப் போகும்
　　பரிவான குடக்கரியி லாடுந்தானே (69)

ஆடுகின்ற சூதத்தில் சாரனையே செய்யில்
　　அரை க்ஷணத்தில் அண்டரெண்டம் தாண்டியோடும்
ஊடுகின்ற சிவமாலையாகக் கோர்த்து
　　உத்தமனே அஞ்செழுத்தும் எட்டெழுத்துமோது
கூடுகின்ற கால்வழியாய் பூரணத்திற்கட்டு
　　கொள்கியே மேல்நோக்கிய முறதமுண்ணு
பாடுகுற ரெண்டையுந்தான் மவுனத்துண்
　　பராபரையே பூசித்துப் பானம் பண்ணே (70)

சாதிலிங்கக் கட்டு

பண்ணவே சாதிலிங்கக் கட்டு கேளு
　　பரிவான நெடுங்கம்பி லிங்கம் வாங்கி
கன்னவே பலமோ மொன்று நிறுத்துக் கொண்டு
　　கருவங்கம் பலமுங் கால்சூதங் கால்தான்
கன்னவே ரெண்டையுந்தான் பழச் சாற்றாலாட்டி
　　சார்வான லிங்கத்தின் மேலே பூசி
நன்னவே யரப்பொடியோ பலமுங் கால்தான்
　　நலமாக அதன்மேலே யரைத்துப் பூசே (71)

---

69. சூதம் வெண்ணைப் போல் ஆகும். உப்பு, செயநீர் ஆகிய நெய்யில் சுருக்கிட்டால் வெளுத்து போகும்.

70. இந்த சூதத்தை சாரணை செய்தால் குளிகை ஆகும். அண்டான் அண்டான் தாண்டி ஓடும். இந்த ரச மணியை சிவ மாலையாக கோர்த்து ஐஞ்சழுத்தையும், எட்டழுத்தையும் அறிந்து ஓதி வாசியை பூரண நாடியில் நிறுத்தி பராபரியையில் பூசித்து அமுதம் உண்ணுவாயாக.

71. சாதிலிங்கம் ஒரு பலம் எடுத்துக் கொண்டு கருவங்கம், சூதம் வகைக்கு கால் பலம் எடுத்து பழச்சாற்றால் ஆட்டி லிங்கத்தின் மீது பூசவும். கால் பலம் அரப் பொடியை பழச்சாற்றால் ஆட்டி மேலும் பூசவும்.

25 - 29 pages missing in book

மூடியே சீலைசெய்து அடுப்பிலேற்றி
முகியாதே தென்னனுட மட்டை கொண்டு
தேடியே கமலம் போல் நாலு சாமம்
சிறப்பாக எரியிட்டு ஆறாலாக்கி
ஆடியே தேவிபதம் பூசை பண்ணி
நலமான குருவென்று வைத்துப் போற்ற
வாடியே யிளையாதே நவலோகத்தில் மாயவே
நூத்தொன்றில் மாத்தெட்டாமே (84)

சூத பற்பம்

எட்டான தாளகத்தில் பற்பம் தன்னை
யிலபாக வனுபானத்தோடே கொண்டால்
மட்டில்லா மேகமொடு சிரந்தி யரையாப்பு
மந்தார யீளையென்ற காசரோகம்
கெட்டோ மென்றோடுமே குட்ட நோயுங்
கெடியாக மண்டலமே கொண்டாயானால்
இட்டமதடா தேகமது கல்தூணாகும்
ஈயமென்ற பேறாச்சு யிசைந்து பாரே (85)

இசைந்துபார் சூதபற்பம் சொல்லக் கேளு
என்மக்காள் சூதமொரு பலந்தான் தூக்கி
வசந்ததொரு கல்வத்திலிட்டுக் கேளு
வாகான வெள்ளையது களஞ்சி போடு
பசந்ததொரு சவ்வீரங் களஞ்சு போடு
பரையான சூடனது களஞ்சு போடு
உசந்ததொரு வெள்ளீய பற்பமொன்று
உத்தமனே யிவைநாலும் சமனாய்ப் போடே (86)

---

84. சீலை பண் செய்து அடுப்பேற்றி தென்னை மட்டை கொண்டு கமலாக் கினியாய் நான்கு சாமம் எரிப்பாயாக. ஆறவிட்டு தேவியை பூசித்து எடுத்துப் பார்க்க தாளகம் சுண்ணமாகி இருக்கும். நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று தந்தால் எட்டு மாற்றாகும்.

85. இதனை சரியான அனுபானத்துடன் உண்டால் மேகம், கிரந்தி, அரையாப்பு மந்தார காசம், ஈளை, குட்டம் முதலியன தீரும். ஒரு மண்டலம் கொண்டால் தேகம் இறுகும்.

86. இனி சூத பற்பம் சொல்லுவேன். சூதம் ஒரு பலம் கல்வத்தில் இட்டு வெள்ளை பாடாணம், சவ்வீரம், சூடன் வெள்ளீய பற்பம் வகைக்கு ஒரு களஞ்சு போட்டு

போட்டுமே கெருடனுட கிழங்குச்சாறும்
புகழான மால்தேவி கிழங்குச்சாறும்
நாட்டுமே யண்டவெள்ளை எருக்கம்பாலும்
நால்வகையும் ஒன்றாக ரேசித்தேதான்
ஓட்டியே முச்சாம மாட்டி மைபோல்
உத்தமனே உத்தமனே வில்லைத்தட்டி ரவியில் போடே
காட்டுமே சண்டாள ரோகமெல்லாம் கலந்தோடும்
காயவைத்து கண்டுலரப் போடே (87)

உலர்ந்த பின்பு யாண்டோடு கல்லுச் சுண்ணம்
முவர்பூவும் சமனாக விரவியேதான்
நலர்ந்ததொரு ஓட்டிலே கீழ்மேல்விட்டு
நலமான வில்லையைத்தான் நடுவே வைத்து
சிறந்ததொரு மேலோடு மூடியே தான்
சீலை செய்து பத்தெருவில் புடத்தைப் போடு
மலர்ந்ததொரு மல்லிகைப் பூப்போலாம் சுண்ணமாயி
பதம் பூசை பண்ணி வைத்துக் கொள்ளே (88)

கொள்ளவே நவலோகத் தீந்தாயானால்
குறையாது வெள்ளியது பத்து மாத்து
விள்ளாதே ரசபற்பம் சுண்ணமாச்சு
வெகுசுருக்கு வெகுசுருக்கு உள்ளே கொண்டால்
தள்ளுமடா பாத்திரத்தில் கிரந்தி சூலை
சண்டாள மேகமொடு கபாலகுஷ்டம்
கொள்ளவே அரிதார பற்பத்தோடே
கொண்டிடவும் நோயியேது கண்டிலேனே (89)

---

87. **கருடன் கிழங்குச்சாறு மால்தேவி** கிழங்குச்சாறு அண்டவெண்கரு வெள்ளெருக்கம் **பால் நான்கும் ரேசித்து சூதத்தில் விட்டு** மூன்று சாமம் **ஆட்டி** வில்லை தட்டி **ரவியில் உலர்த்தவும்.**

88. **அண்டோடு** கல்சுண்ணம் சமமாக கலந்து ஓட்டில் இட்டு வில்லையை வைத்து, **மேலும் அண்டோடு** கல்சுண்ணம் இட்டு மேலோடு மூடி சீலை செய்து பத்தெருவில் **புடமிடவும். இரசம் சுண்ணமாகும். இதனை, தேவியை** பூசைசெய்து எடுத்துக் **கொள்ளவும்.**

89. **இதனை நவலோகத்தில் தந்தால் வெள்ளி பத்து** மாற்றாகும். **மருந்தாக** அளவுடன் **உட் கொண்டால் கிரந்தி சூலை** மேகம் கபால குஷ்டம் **நீங்கும். அரிதார** பற்பம் **சேர்த்து உண்டால் எல்லா நோய்களும் நீங்கும்.**

கெந்தக மெழுகு

கண்டிலேன் கெந்தகத்தின் மெழுகுச் சொல்வேன்
கடிதான நெல்லிக்காய் கெந்திவாங்கி
பண்டான குமரியிலே சுத்தி செய்து
பாங்காக பலமொன்று நிறுத்துக் கொண்டு
வண்டிலே ஓட்டிலிட்டு அடுப்பிலேற்றி
வளமான சின்னிச்சார் காட்டுள்ளிச்சார்
அண்டிலே மூணுபடி சுருக்கு தாக்கு
அப்பனே சாரெல்லாம் ஆன பின்பு (90)

ஆனதொரு அயக்கரண்டி தன்னிலிட்டு
ஆதியாம் திருக்கோணத் தழிலம் வாங்கி
கானபின்பு பன்னிநெய்தான் நாலுக்கொன்று
கலந்து விட்டு வழலை நஞ்சு வீரம் பூரம்
வானபின்பு வகைவகைக்கு காசி போட்டு
மைந்தனே கடிகை யொன்றில் மத்தித்துப்பால்
மோனபின்பு கெந்திக்கு வுருக்கு தாக்கு
முயற்சியாய் ஒருசாமம் மெழுகுமாமே (91)

மெழுகெடுத்து ஆயிபதம் பூசைபண்ணி
வேதித்து நவலோகம் நூற்றுக்கொன்று
பழுத்தது பத்தரையே மாத்துக்காணும்
பணவிடைதான் அனுபானத்தோடே கொண்டால்
நழுகுயெடுத்து நோயெல்லாம் நசித்துப்போகும்
நமதில்லை திரேகமது கல்த்தூணாகும்
வழுவாது உங்களுக்கு சொல்லிவிட்டேன்
மகத்தான ஆயியுட நாதமாமே (92)

---

90. நெல்லிக்காய் கந்தகத்தை குமரிச்சாற்றில் சுத்தி செய்யவும். இதில் ஒருபலம் எடுத்து சின்னிச்சாறு, காட்டுமுள்ளிச்சாறு மூன்றுபடி, சுருக்கு தாக்கவும்.

91. பிறகு அயக்கரண்டியில் இட்டு திருக்கோணத் தைலம் பன்றி நெய் நான்குக்கு ஒன்று சேர்ந்து வழலை நஞ்சு வீரம் பூரம் வகைக்கு காசு எடை போட்டு ஒரு கடிகை தைலத்தில் மத்தித்து கெந்திக்கு ஒரு சாமம் சுருக்கிட்டால் மெழுகு ஆகும்.

92. மெழுகை எடுத்து தேவியை பூசை செய்து நவலோகங்களில் நூற்றுக்கு ஒன்று தந்தால் பத்தரை மாற்றாகும். பண எடை அனுபானத்துடன் கொண்டால் எல்லா நோய்களும் நீங்கும். தேகம் கல்தூண் ஆகும்.

நாதமென்ற கெந்தத்தை விட்டால் மைந்தா
நலமான காயசித்தி யோகசித்தியாகா
வாதமென்ற செந்தூரம் வர்ணங் காணார்
மாட்டினால் பழுக்காது மாத்தேறாது
நீதி மென்ற கோசபீசத்தில் சேரும்
நிலையான இம்மெழுகு சூதங்கட்டும்
மர்த்தென்ற கெர்ப்பந்தான் தரிக்கும்மாபோல
மைந்தனே கெந்தகத்தை மருவிப்பாரே (93)

பாஷாணங்கட்ட செயநீர்

மருவிப்பார் பாஷாணம் தன்னில் வேத
மாட்டுறேன் வெகுசுருக்கு மைந்தா பாரு
பருதியாம் பாஷாணம் பணந்தா னென்பார்
பாவிகள்தான் கட்டறியார் விபரமாக
உறுதியாய் கட்டவொரு செயநீர் கேளு
உத்தமனே வெடியுப்பு அஞ்சாங்காசல்
கருதியே பலம்பத்து நிறுத்துக் கொண்டு
கடிதான பழம்புளியும் பலந்தானெட்டே (94)

எட்டான நவச்சாரம் பலமும் ரெண்டு
இதமான சூடனது பலமும் ரெண்டு
கட்டான வெண்காரம் பலமும் ரெண்டு
கனமான துருசதுவோ பலமும் ரெண்டு
தட்டான சீனமது பலமும் ரெண்டு
தலை மண்டை யோடதுவும் பலமும் ரெண்டு
கெட்டியாய் அமுரிவிட்டு அரைத்துமைபோல்
கெடியான சட்டியிலே அரைத்து வையே (95)

---

93. **கந்தகம் இல்லா விட்டால் காயசித்தி யோகசித்தி உண்டாகாது. செந்தூரம் வர்ணம் கொள்ளாது. உலோகங்கள் மாற்று ஏறாது. இம்மெழுகினால் சூதம் கட்டும்.**

94. **ஐந்தாம் காய்ச்சல் வெடியுப்பு பத்து பலம் பழம் புளி எட்டு பலம்**

95. **சாரம் சூடம் வெண்காரம் துருசு சீனம் மண்டை ஓடு வகைக்கு இரண்டு பலம் அமுரி விட்டு அரைத்து,**

வைத்துமே அடுப்பேற்றி எரித்து வாங்கு
வளமாக வெந்ததவும் சுண்ணமாகும்
நைத்துமே பொடித்து நன்றாய் பீங்கானில் விட்டு
நாலிலொன்று சாரஞ்சேர் பனியில் வைக்க
அத்துமே செயநீர்தான் ஆறுபோலாம்
அப்பனே வீரமொடு புழுகு பூரம்
உத்துமே வழலையொரு காசு போட்டு
உறவாக மத்தித்து வைத்துக் கொள்ளே (96)

கொள்ளவே பாஷாணம் தோய்த்து வாட்டு
குறிப்பாக கட்டுண்டு மெழுகுமாகும்
மெள்ளவே சரக்கெல்லாம் கட்டிப் போகும்
விதமான சூதமது மணி போலாகும்
துள்ளவே நாகமது கட்டிப்போகும்
துடியான கருவங்கம் சாய்க்கச் சாகும்
மள்ளவே துருசதுவும் வெள்ளையாகும்
மாதியாம் பனிநீறு மறிந்துபாரே (97)

அறிந்துபார் அயனாகம் சொல்லக்கேளு
அப்பனே அரைப்பொடி பலமுமொன்று கல்வத்திட்டு
அறிந்துபார் கட்டினதோர் பாஷாணங் கால்தான்
அரிதான கல்லுப்பு பலமுங் கால்தான்
செரிந்து நின்ற வெண்காரம் பலமுங் கால்தான்
சிறப்பான செயநீரை விட்டு ஆட்டி
கறிந்துபார் குகையிட்டு மூடி யூது
கண்விட்டு ஈயம் போலாடுந்தானே (98)

---

96. சட்டியில் வைத்து அடுப்பேற்றி எரித்தால் சுண்ணமாகும். இதைப் பொடித்து நான்குக்கு சாரம் ஒன்று சேர்த்து பனியில் வைக்க செயநீராகும். இதில் வீரம் புனுகு பூரம் வழலை வகைக்கு காசெடை போட்டு மத்திக்கவும்.

97. இதில் வெள்ளை பாடாணத்தை தோய்த்து வாட்டினால் கட்டும்; மெழுகாகும். மேலும் எல்லாச் சரக்குகளும் கட்டும். சூதம் மணியாகும். நாகம் கட்டும். கருவங்கம் உருக்கி சாய்த்தால் சாகும். துருசு வெள்ளை ஆகும். இதற்கு முதல் பனி நீராகும்.

98. இனி அயநாகம் சொல்லுவேன் ஒருபலம் அரப் பொடியை கல்வத்தில் இட்டு, கால் பலம் கட்டிய வெள்ளை பாடாணம் சேர்த்து, கல்லுப்பு வெண்காரம் வகைக்கு கால் பலம் இட்டு செயநீர் விட்டு ஆட்டி குகையில் வைத்து ஊதினால் அயம் ஈயம் போல் ஆடும்.

ஆடுகின்ற அயத்தினிட வித்தை மைந்தா
அண்டர்களும் தேவர்களும் அறியமாட்டார்
தேடுகின்ற தங்கமிட்டு கெந்தியிட்டு
செந்தூரம் செயவேதை திறமாய்ப்பாரே
நீடுகின்ற மற்றதெல்லாம் வங்கத்துக்கு
நிலையாது யிரும்பை விட்டால் நெளிதமில்லை
கூடுகிற காலறிந்து கூடு கூடு
குறிப்பான கருவை யெல்லாம் கூறினேனே (99)

கூறினேன் யிரும்பிலே வேதை கோடி
கூரறிந்து பார்க்கவே யெளிதாமப்பா
தேறியதோர் லோகமென்றும் பஞ்சபூதமென்றும்
செப்பாதே காலென்றும் சரக்கென்றும்
மாறியதோர் குருவென்றும் தங்கமென்றும்
பேரப்பா மகத்தான குளிகைக்கு சாரணையீதாகும்
மாற்றியதோர் சித்தரெல்லா மிதனுக்குள்ளே
யப்பனே வாதத்துக் காதியாமே (100)

கருவங்கக் கட்டு

ஆமென்ற கருவங்கம் கட்டுச் சொல்வேன்
அரிதான தேசியிட குளம்புதன்னை
காமென்று நொருக்கியே கல்வத்திட்டு
கசகாமல் பூபுடத்தில் தயிலம் வாங்கி
தாமென்ற தொருபடிதான் தயிலத்துக்கு
தப்பாதே கடல்நுரைதான் பலமும் போடு
வேமென்று வுவர்ப்பூவும் வெண்காரம் சாரம்
விதமான வீரமொடு கல்லுப்பஞ்சே (101)

---

99. இந்த வித்தையை தேவர்களும் அறிய மாட்டார். இதில் தங்கம் இட்டு கெந்தி இட்டு செந்தூரம் செய்க. இதில் செய்யும் வேதையே வங்கத்திற்கு நிற்கும்.

100. இந்த இரும்பிலே கோடி வேதை செய்யலாம். இதுவே லோகம் என்றும் பஞ்ச பூதம் என்றும் கால் என்றும் சரக்கென்றும் குரு என்றும் தங்கம் என்றும் குளிகை சாரணை என்றும் சித்தர்களால் போற்றப்படுகிறது.

101. தேசியின் குளம்பு தன்னை நொறுக்கி பூப்புடமிட்டு தைலம் வாங்கவும். இந்த தைலம் ஒரு படியில் கடல் நுரை ஒரு பலம் போடவும். பூ நீறு, வெங்காரம், சாரம் வீரம், கல் உப்பு ஐந்துமாகும்.

அஞ்சான வகைவகைக்கு களஞ்சிபோடு
ஆதியாம் வழலையொரு கழஞ்சுபோடு
நஞ்சாக மத்தித்து வைத்துக் கொண்டு
நலமான கருவங்க முருக்கி சாய்க்க
கஞ்சான கருவங்கம் கட்டிப் போச்சு
கண்டிடைக்கு தங்கமது சமனாய் சேர்த்து
மஞ்சான வெள்ளி செம்பிலீந்தாயானால்
மயங்காது மாத்தேழும் காணுங் காணே (102)

காணவே வங்கமொரு பலத்துக்கப்பா
கடிதான தங்கமொன்று நாகமென்று
பூணவே சூதமொன்று கெந்தி ரண்டு
புகழான சூதத்தின் கெந்திரெட்டி
ஆணவே மல்லிகையின் சாற்றாலாட்டி
அப்பனே பொடிபண்ணி குப்பிக்கேத்தி
நாணவே வாலுகையின் மேலே வைத்து
நலமான கமலம் போலெரித்திடாயே (103)

எரித்துமே பனிரெண்டு சாமமானால்
என் மக்காள் குப்பியைத்தான் யிப்பால் வாங்கி
வரித்துமே யாறவிட்டு யெடுத்துப்பாரு
மாதுளம்பூ போலிருக்கும் செந்தூரந்தான்
பரிந்திடவே நவலோகம் பத்து மாத்து
பணவிடை தானுட் கொள்ள காய சித்தியாகும்
மறந்துநீ போகாமுன் தயிலந்தன்னில்
மகத்தான நாகத்தை யுருக்கிச் சாயே (104)

---

102. வகைக்கு ஒரு களஞ்சு போடவும். வழலைச் சுண்ணம் ஒரு களஞ்சு போடவும். எல்லாவற்றையும் நன்றாக கலந்த பின் கருவங்கத்தை அதில் உருக்கி சாய்த்தால் கட்டும். அதன் எடைக்கு தங்கம் சேர்த்து வெள்ளி, செம்பில் கொடுத்தால் ஏழு மாற்று காணும்.

103. ஒரு பலம் வங்கம், தங்கம், நாகம், சூதம் வகைக்கு ஒரு பலம், கந்தகம் இரண்டு பலம், ஆகியவற்றை மல்லிகையின் சாற்றால் ஆட்டி பொடி செய்து குப்பியில் வைத்து வாலுகா எந்திரத்தில் வைத்து கமலாக்னியாக எரிக்கவும்.

104. பனிரண்டு சாமம் எரிக்கவும். மாதுளம்பூ போன்ற செந்தூரமாகும். நவலோகத்தில் தந்தால் பத்து மாற்று ஆகும். பணவிடை கொண்டால் காய சித்தியாகும். முன் சொன்ன தைலத்தில் நாகத்தை உருக்கி சாய்க்கவும்.

சாய்க்கவே நாகமது கட்டிப் போகும்
தங்கமுடன் சூதமிட்டு கெந்தி கூட்டி
ஆக்கவே குலாமல்லிச் சாற்றாலாட்டி
அப்பனே பொடி பண்ணி குப்பிக்கேத்தி
வாய்க்கவே வாலுகையில் செந்தூரத்தால்
வாகான அருணனைப் போல செந்தூரமாகும்
செழிக்கவே நவலோகம் பழுக்கும் வேதை
தினம் பணந்தானுட் கொண்டால் காயசித்தியெண்ணே105

எண்ணவே தயிலத்தில் இன்னங்கேளு
இதமான சரக்கு வகையெல்லாம் சாகும்
தன்னவே சூதமது விரைந்து போகும்
தருவான குடவனைத்தான் உருக்கி சாய்க்க
மன்னவே மாத்தாறு குறையாதப்பா
மயங்காதே தாம்பி ரத்தை யுருக்கிச்சாய்த்தால்
சொன்னதொரு வுறலத்து சோதியாகும்
சூட்சமடா தேசிவித்தை சுருக்கம் பாரே (106)

பதங்கம்

சுருக்கான பதங்கமொன்று சொல்லக்கேளு
சூதந்தான் பலமொன்று கல்வத்திட்டு
மருக்காக வெள்ளையது களஞ்சி ரெண்டு
மாசற்ற வீரமது களஞ்சி ரெண்டு
குறுக்காகும் கல்லுப்பு களஞ்சி ரெண்டு
குருவான துருசதுவும் களஞ்சி ரெண்டு
தருக்காக சூடனது களஞ்சி ரெண்டு
தருவான சாரமது களஞ்சி ரெண்டே (107)

---

105. நாகம் கட்டும். இதனுடன் தங்கம், சூதம், கந்தி கூட்டி மல்லிகை சாற்றால் ஆட்டி வாலுகா எந்திரத்தில் எரித்தால் அருணன் போல் செந்தூரம் ஆகும். நவலோகங் களும் பழுக்கும். உட்கொண்டால் காயம் சித்தியாகும்.

106. இந்த தைலத்தில் எல்லா சரக்குகளும் சாகும். சூதம் கட்டும். குடவனை உருக்கி சாய்த்தால் ஆறு மாற்று ஆகும். தாமிரத்தை உருக்கி சாய்த்தால் ஊறல் அற்று போகும். இந்த தேசி வித்தையை பரிபாஷை அறிந்து பார்ப்பாயாக!

107. சூதம் ஒரு பலம் கல்வத்தில் இட்டு வெள்ளை பாடாணம், வீரம், கல் உப்பு, துருசு, சூடம், சாரம் இவைகள் இரண்டு களஞ்சி.

இரண்டான கெந்தியது களஞ்சி ரெண்டே
நேரான சீலையதும் களஞ்சி ரெண்டு
குண்ணான லிங்கமது களஞ்சி ரெண்டு
குலாவியதோர் தாளகமும் களஞ்சி ரெண்டு
யுன்றான யிவையெல்லாம் பலமொன்றாக்கி
உத்தமனே சூதத்தி லொக்கப் போட்டு
கன்றான நாய்ப்பாகல் விதை யிடித்து
கைமுறையாய் பூபுடத்தில் தயிலம் வாங்கே (108)

வாங்கியே முன்னமே மருந்திலிட்டு நீயும்
மைந்தனே வழலையொரு களஞ்சிபோடு
பாங்கியே யரைத்துருட்டி மெழுகு போலே
பக்குவமாய் சட்டிதனில் நடுவே வைத்து
தாங்கியே அயச்செம்பு கவிழ்த்து மூடி
சந்துவாய் உளுந்தரைத்து சீலை செய்து
ஓங்கியே யதன்மேலே சட்டிமூடி
யுற்பனமாயடுப்பேற்றி எரித்திடாயே (109)

எரித்திடுவாய் தீபம் போலாறு சாமம்
மிதமான பதங்கமது ஏறி நிற்கும்
வரித்திடுவாய் மயிர்க்குச்சி கட்டி வாங்கி
வளமான செம்பிலே வைத்துக்கொண்டு
நரித்திடவே தங்கமது களஞ்சி தூக்கி
தங்கமென்ற றேகசமனிடையே சேர்த்து
கரித்திடவே நவலோகம் நூற்றுக்கொன்று
காட்டினால் திருமாத்தாம் கண்டு பாரே (110)

---

108. கந்தகம், மனோசிலை, லிங்கம், தாளகம், ஆகியவை வகைக்கு களஞ்சு இரண்டு சேர்த்து நாய்ப்பாகல் விதை இடித்துப் போட்டு தைலம் வாங்கவும்.

109. விட்டு வழலைச் சுண்ணம் ஒரு களஞ்சு போட்டு அரைத்து ஒரு மண் சட்டியின் நடுவே வைத்து அய செம்பு கிண்ணியை கவிழ்ந்து வைத்து உளுந்து மாவால் சந்துவாய் மூடி, மேல் சட்டி வைத்து,

110. தீபாக்கினியாக ஆறு சாமம் எரிக்கவும். கிண்ணியில் பதங்கம் ஏறியிருக்கும். அதை மயிர்க்குச்சியால் வழித்து வைத்துக் கொண்டு களஞ்சு எடை தங்கம் சேர்த்து உருக்கி நவலோகத்திற்கு தந்தால் பத்து மாற்று ஆகும்.

பாரப்பா ரசபற்பம் சுருகமெய்த்த
　　பணவிடைதான் அனுபானத்துடனே கொண்டால்
சாரப்பா பசுமாத்து பொன்னாம் தேகம்
　　சந்திரனும் சூரியனும் ஒன்றிச் சேரும்
காரப்பா சடத்தினுள்ளே நோய்களெல்லாம்
　　கனன்று போம் ரசபற்பம் கண்டபோதே
ஆரப்பா தேகத்துக் காதி கற்பம்
　　அகவையிலே கொண்டேரும் திறமாமே (111)

ஆமென்ற குறுவழலைச் சொல்லக் கேளு
　　அப்பனே சூட்சத்தில் சூட்சமாக
போமென்ற தாரிடத்தில் போனாலுந்தான்
　　புகழாதே நோயில்லா திருக்க வேணும்
வேமென்ற வயததுவும் முப்பதுக்குள்
　　மேனியது சிவந்திருந்தால் நாதம் வாங்கி
தாமென்ற தன்னுக்குள் விந்து தன்னை
　　தாக்கதிலே சமனாகத் தாக்கிக் கொள்ளே (112)

கொள்ளப்பா அண்டவெள்ளை யெருக்கன்பாலும்
　　கெடியாக மத்தித்துக் கூடவிட்டு
வெள்ளப்பா செவிநஞ்சு உரமும் நாபி
　　விதமான புழுகோடு குருவண்டைந்தும்
தள்ளப்பா பொடித்ததிலே யிட்டு வைத்து
　　சாற்றுகிறேன் சரக்கான வகையைக் கேளு
வள்ளப்பா வீரமொடு பூரந்தானும்
　　வளமான சூடனோடு கல்லுப்பென்றே (113)

---

11. ரச பற்பம் அனு பாணத்துடன் கொண்டால் தேகம் பொன்னாகும். சூரிய சந்திரர்கள் ஒன்றாகும். உடம்பிலுள்ள நோய்களெல்லாம் நீங்கும்.

112. சிவந்த மண் பூமியில் முப்பது வயதான அண்டக்கல்லை எடுத்துக் கொண்டு அதனுடன் விந்துவை சமன் சேர்த்து,

113. அண்ட வெண்கரு, வெள் எருக்கன் பால், தெளிவு நீர் விட்டு பரிபாஷையாக சொல்லப்பட்ட செவி நஞ்சு உரம், நாபி, புணுகு, குருவண்டு ஆகியவற்றை பொடித்து போட்டு வீரம், பூரம், சூடம், கல் உப்பு,

உப்பான நவாச்சாரம் சீலையும் லிங்கம்
முடிவான துருசிரெண்டு சூதங்கெந்தி
தப்பாதே வகைக்கு வகை களஞ்சி வீதம்
சமனாக நிறுத்துமே கல்வத்திட்டு
மெய்யப்பா நாதவிந்தை விட்டு ஆட்டி
மெழுகாமே பதத்திலே வில்லை தட்டி
அப்பனே யுவரப்பூவுங் கல்லுச் சுண்ண
மரைத்துமே கவசமாய்ச் செய்திடாயே (114)

செய்திடவே யஞ்சுண்ணக் குகையில் வைத்து
திடமாக மேல்மூடி சீலை செய்து
கொய்திடவே பத்தெருவில் புடத்தைப் போடு
குளிர்ந்த பின்பு மறுபடியு மாட்டியாட்டி
அரைத்திட்டு முன்போலே புடத்தைப்போடு
அப்பனே மூன்றுதிரம் புடத்தைப் போட்டுத்தீரு
கைதீட்ட மதிசமூகமா வழலையாச்சு
காட்டிடுவாய் நவலோகம் ஆயிரத்துக்கொன்றே (115)

ஒன்றான மாத்துக்கு ஆணியுண்டோ
உற்றதொரு சரக்கெல்லாம் கட்டி நீரும்
பன்றான சூதமொரு பலந்தான் தூக்கி
பணவிடைதான் யொட்டிடவே பட்டுதீரும்
தண்டான அண்டமது சலமாய் நிற்கும்
சாறு வராத்தழைகளெல்லாம் சலமதாகும்
யன்றான பாலெல்லாம் சலமதாகும்
ஆதியென்ற நாதவிந்து செலமாமென்றே (116)

---

114. நவச்சாரம், மனோசிலை, லிங்கம், துருசு, சூதம், கெந்தி வகைக்கு ஒரு களஞ்சு சேர்த்து நாதவிந்தால் ஆட்டி வில்லை தட்டி உவர்உப்பு, கல்சுண்ணம் அரைத்து கவசம் செய்து,

115. அஞ்சு சுண்ண குகையில் வைத்து திடமாக மேல் மூடி வைத்து சீலை மண் செய்து பத்து எருவில் புடம் போடவும். இதுபோல மூன்று முறை புடம் போடவும். இந்த வழலைச் சுண்ணத்தை நவலோகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று தந்தால் மாற்று ஆகும்.

116. இதில் எல்லா சரக்குகளும் கட்டும். நீறும். ஒரு பலம் சூதத்தில் பண எடை தாக்க கட்டும். அண்டக்கல் சலமாகும். சாறுவரா தழைகளில் சிறிது இட சாறு வரும். நாத விந்து சலமாகும்.

இலவணத் திராவகம்

செலமான நவலோக மெல்லா நீறும்
    க்ஷணத்திலே யுபரசங்கள் சுண்ணமாகும்
நலமான லவணவகை சுண்ணமாகும்
    வாதமென்ற வித்தையது மசயமாச்சு
குலமான துருசதுவும் குருவாய் நிற்கும்
    குறுக்கியே சொல்லுகிறேன் வேத கோடி
கலையான திதுநாட்டைப் பார்த்துப் பார்த்து
    கங்கு கரை காணாமல் மயங்கினேனே (117)

வழங்கினேன் வழலையுட கருவை மைந்தா
    மகத்தான சித்தர்களும் சொல்லார் சொல்லார்
தயங்காதே நான்வெளியாய் சொல்லி போட்டே
    நாதி வஸ்துவாய நாதிவஸ்து ரெண்டும் ஒன்று
தயங்காதே பூரணமும் ஒன்றாய்ப் போச்சு
    தருவான யெட்டெட்டுஞ் சித்தியாச்சு
வயங்காதே சகலசித்தும் வழலையாட்டு
    மைந்தனே வாதத்துக் காதியாமே (118)

ஆதியாம் லவணமென்ற திராவகத்தை
    அறைகிறேன் மாணாக்க னறிந்து கொள்ளு
நீதியாம் வெடியுப்பு பலந்தான் பத்து
    நினைவாக கல்லுப்பு பலந்தான் பத்து
பாதியா யிந்துப்பு பலந்தான் பத்து
    பரிவான வளையலுப்ப பலந்தான் பத்து
சாதியாங் கரியுப்பு பலந்தான் பத்து
    சமத்தான கெந்தியுப்பு பலந்தான் பத்தே (119)

---

117. நவலோகம் எல்லாம் நீறும். உபரசங்கள் அனைத்தும் சுண்ணமாகும். உப்பு வகை எல்லாம் சுண்ணமாகும். துருசு சுண்ணமாகும்.

118. சித்தர்கள் சொல்லாத வழலையின் கருவை நான் சொல்லிவிட்டேன். ஆதி பொருள், அனாதி பொருள், பூரணம் ஆகியவை எல்லாம் ஒன்றேயாகும்.

119. இனி இலவண திராவகத்தை கூறுகின்றேன். வெளி உப்பு, கல் உப்பு, இந்து உப்பு, வளையல் உப்பு, கரி உப்பு, கந்தி உபபு, சவுட்டு உப்பு, பாறை உப்பு,

பத்தான சவுட்டுப்பு பலந்தான் பத்து
பாறையுப்பு பலம்பத்து நிறுத்துக் கொண்டு
கொத்தான நவச்சாரம் பலந்தானெட்டு
குறியான கடையிலுள்ள சவுக்கார மெட்டு
அத்தான சீனமது பலமீறாறு
அன்னமென்ற பேதியது பலமிரண்டு
சித்தான யுருவியுயர் வமுரியுப்பு
சிறப்பான தேசியுப்பு வகைக்கு ரெண்டே (120)

ரெண்டான வழலையுப்புப் பலமே போடு
நேரான பழச்சாறு மேனிச்சாறும்
அன்றான யெருக்கனுட பழுப்புச்சாறு
யறு .... விட்டாட்டி வில்லைத்தட்டி
நன்றாக உலர்ந்த பின்பு புடத்திலிட்டு
நலமான சக்கரமாம் இலைக்கட்டி
கன்றான சந்துவாய் பொருந்த யார்த்து
கனமான உளுந்தரைத்து சீலை செய்யே (121)

செய்துமே அடுப்பேற்றி கமலம் போலச்
சிறப்பாகத் தீமூட்டி பீங்கானில் வைத்து
உய்துமே சட்டியிலே ரணசீலை போட்டு
உத்தமனே தண்ணீரைக் குத்துவாய்நீ
யெய்துமே திராவகந்தான் இறங்கும் பாரு
அப்பனே முன்னீரை யூற்றி ஆட்டு
கொய்துமே பின்னீரை வாங்கி மைந்தா
குறியதாய் அறக்கின்ற குப்பிவாறே (122)

---

120. வகைக்கு பத்து பலம் நவச்சாரம், சவுக்காரம் வகைக்கு எட்டு பலம் சீனம் பனிரண்டு பலம் அன்னபேதி இரண்டு பலம், நாயுருவி உப்பு, அமுரி உப்பு, தேசி உப்பு வகைக்கு இரண்டு பலம்

121. வழலை உப்பு ஒருபலம், பழச்சாறு, மேனிச்சாறு, எருக்கம் பழுப்புச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி,

122 திராவகமாக இறக்கவும். முன் நீரை விட்டு பின் நீரை வாங்கவும்.

வார்த்துமே அடைத்து நன்றாய் பரப்பி
　　பாதம் வணங்கியே பதனமாய் வைத்துக் கொள்ளு
போத்துமே பாஷாண மறுபத்து நாலும்
　　பூட்டிடவே மெழுகாகும் வேதையாகும்
யேத்துமே சரக்கெல்லாம் கட்டிப்போகும்
　　இதமான துருசதுவும் சுண்ணமாகும்
காத்துமே நவலோகங் கரைந்து நீரும்
　　கடிதான சூதமது மணியுமாமே (123)

மணியெடுத்து வாயிலிட கெவனமோடும்
　　மகத்தான வேதையுமாம் ஆட்டிப்பாரு
நணியெடுத்த இரும்பதனை நன்றாய்க் காய்ச்சி
　　நலமான நீரிலே பத்து விசை தோய்க்க
யணியெடுத்து யதரதராய்ப் பிண்டு போகும்
　　அப்பனே வாரியே குகையிலிட்டு
கனியெடுத்த காரமிட்டு உருக்கிப்பாரு
　　கனமென்ற மாத்தாறு காணுந்தானே (124)

தானென்ற யுபரசங்கள் சத்துமாமே
　　தருவான உருக்கினத்துக் காதி பீடம்
வேனென்ற திராவகத்தால் வேதை கோடி
　　விரிஞ்சிட்டா லண்ட ரெண்டம் கொள்ளாதப்பா
போனென்ற சூட்சமதை அடக்கு சொன்னேனப்பா
　　புத்திமான் நீயானானால் விரித்துப்பாரு
தானென்ற பெரியோரை வணங்கிக்கேளு
　　தாயாரை பூசித்து பானம் பண்ணே (125)

---

123. இதில் பாடாணங்கள் அறுபத்து நான்கும் கட்டும். மெழுகு ஆகும். துருசு சுண்ணமாகும். நவலோகங்களும் நீறும். சூதம் மணியாகும்.

124. இந்த மணியை வாயில் இட்டால் கெவுனமாகும். இந்த நீரில் இரும்பை காய்ச்சி துவைத்தால் உதிரும். இதை வெங்காரமிட்டு உருக்கினால் ஆறுமாற்று ஆகும்.

125. உபரசங்கள் அனைத்தும் சத்தாகும். கோடானுகோடி வேதையாகும். பெரியோரை வணங்கி அவற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

43 TO 52 PAGES MISSING IN BOOK

குக்கலாம் வரித்தவனை யெருமைக் கொம்பு
        குலமான படிக்கல் வெள்ளைக் குண்ணி
மிக்கவே குதிரையுடக் குளம்பு சீவல்
        விதமான தலைமண்டை யோடுங் கூட்டி
தக்கவே யிடித்து நன்றாய்த் தைலம் வாங்கி
        சதகமாய் முன்மருந்தில் விட்டு ஆட்டி
செய்கவே தேன்மெழுகு பேரண்டெண்ணெய்
        சேர்த்து நீவாகு பேரமத்திப்பாயே (156)

மத்தித்து பதனமாய் வைத்துக் கொள்ளு
        வளமான சத்துவகை நவலோகங்கள்
எத்தித்து உருக்கயிலே குன்றியிடைபோடு
        இளகியே தண்ணீர் போலுருகும் பாரு
சித்தித்துக் கலியாது சித்தேறொட்டாது
        சேர்ந்துருகுங் கடினமாஞ் சரக்குக்கெல்லா
மத்தித்து இக்கருவைத் தொட்டு மாட்டு
        மணிபோலே நின்றாடி வேதையாமே (157)

வேதையா முருக்கினத்தை விட்டால் மைந்தா
        வெகுளாது லோகமெல்லாம் கரடு தட்டும்
வேதையாங் கடுறாசரக்கு மேதுவாகாது
        மேலான சத்துவகை குளிகையாகா
வேதையென்றால் வாதிக்கு இதுமுன் வேணும்
        மெல்லினமும் வல்லினமும் அறியச் சொன்னேன்
பாதையே இம்முறைதா னறியா விட்டால்
        பரிசுகெட்ட வாதியென்னப் பாரு பாரே (158)

---

156. வரித்தவளை, எருமைக் கொம்பு, வெள்ளை குண்ணி, குதிரைக் குளம்பு சீவல், தலை மணிடை ஓடு என்று பரிபாஷையாக கூறப்படும் பொருள்களை அறிந்து தைலம் வாங்கி முன் மருந்தில் விட்டு தேன் மெழுகு, பேரண்டத்து எண்ணெய் ஆகியவை விட்டு,

157. மத்தித்து வைத்துக் கொள்ளவும். நவலோகங்கள் உருகும் போடு குன்றி எடை போட்டால் தண்ணீர் போல் ஆகும். கடினமான எல்லா சரக்குகளும் இதில் உருகும்

158. இந்த உருக்கினம் இல்லா விட்டால் உலோகங்கள் கரடு தட்டும். சத்து வகைகள் குளிகையாகா.

பாரப்பா வழலைதொட்டு காரசாரம்
பகர்ந்தே நான்குரு முடிக்கும் பாகஞ்சொன்னேன்
காரப்பா கைமுறைக்கு ஆசான் வேணும்
காணாட்டால் என்னூலில் காணவேணும்
ஆரப்பா யிதைவிட்டு பலனாலும் பார்த்து
ஆவலா யிக்கடையிலுள்ள சரக்கைச் சுட்டு
பாரப்பா பலனில்லை யென்று மாண்பர்
பார்த்திடுவார் பரிசெனங்கள் மூலிதானே (159)

மூலிகைதான் உலகத்திற் கோடா கோடி
மொழிந்தாரே அஷ்ட சித்தும் வேதை போட
மூலிகையில் தனித்தனியே சித்தாடாது
முயன்றிடவே வேதையிட்டால் பொன்னாகாது
மூலிகையிற் சாமமெல்லாம் தீரச்செய்து
முக்கியமாய் கருவோடு குருவுஞ் சேர்ந்தால்
பாலிகையாம் வாதசித்தி குளிகை சித்தி
பகரறிய அஷ்டமா சித்தியாமே (160)

சித்தியாம் நாதக்களேது செய்யார்
திறமான குருத்தொட்டு செந்தூரந் தொட்டு
பத்தியாம் வழலையொடு முப்பு தொட்டு
பரிசிப்பார் மூலிகையால் பூக்கும் வேதை
ஏத்தியே சாமத்தைத் தீர்க்கச் செய்வார்
எடுத்ததொரு கருமமெல்லா மவர்க்கே சித்தி
சூத்தியே யிதுகண்டு உலகத்தோர்கள்
சூடத்தை யறியாமல் சொல்லுவாரே (161)

---

159. கைமுறையை தெரிந்து கொள்ள ஆசானை அணுகுக. அல்லது என் நூலை நன்றாக கற்றிடுக. கடையில் உள்ள சரக்குகளை சுட்டுப் பார்ப்பதால் பயனில்லை.

160. மூலிகைகளினால் சித்து உண்டாகாது. சாபங்கள் தீர்த்து கருவும் குருவும் சேர்ந்தால் வாத சித்தி, குளிகை சித்தி, அஷ்டமா சித்தி உண்டாகும்.

161. வழலை, முப்பூ அறிந்தால் மூலிகைகளினால் வேதை செய்யலாம். எல்லா சித்திகளும் உண்டாகும். இதை உலகோர் அறியமாட்டார்கள்.

சொல்லாமல் மூலிதொட்டு வேதையாகச்
    சொல்லுகிறேன் கற்பம் சித்திகற்பமுன்னே
சொல்லாமல் மாணாக்காள் சூட்சமாக
    சொல்லுகிறேன் சிவந்தவரிக் கத்தாழை வாங்கி
சொல்லாமல் சூதமது எடுத்துக் கொண்டு
    சுருக்கிடவே சூதமங்கே கட்டிப் போகும்
அல்லாதே சூதத்தில் சாரணையே செய்து
    அப்பனே வாதபில வைக்க கெவுனமாமே (162)

கெவுனமாந் தங்கமிட்டு கெந்தியிட்டு
    கெடியாகச் செந்தூரம் செய்யில் வேதை
மவுனமாஞ் சரக்கெல்லாங் கட்டிப் போகும்
    மரகரா நவலோக மாயிரத்துக் கோடும்
மவுனமாங் கத்தாழை சமூலம் கொண்டு
    இடித்து நீ சூரணமாய்த் தேனிற் கொள்ள
மவுனமாந் தேகமது சித்தியாகும்
    மகத்தான பஞ்சகரத்தாள் முன்னிற்பாரே (163)

மூலிகையால் மால்தேவி கட்டு

முன்னிற்பார் மண்டலமே கொண்டாயானால்
    மூதண்ட சித்தருக்கும் சித்தனாவாய்
பின்னிற்பார் தாதுவெல்லா மிறிசி கட்டும்
    பிறமம் .... பிதனை யகத்தும் கற்பமப்பா
கன்னிப்பார் தேகமெல்லா மருணகாந்தி
    கண்களுமே செவ்வரளி பூப்போலாகும்
முன்னிப்பார் மன்மத நாமென்றே யுன்னை
    மோகிப்பார் மாதரெல்லாம் மேவிப்பாரே (164)

---

162. இனி மூலிகைக் கற்பம் சொல்லுகின்றேன். சிவந்த வரி கற்றாலையை வாங்கி சூதத்திற்கு சுருக்கிட்டால் கட்டும். இதை சாரணை செய்தால் கெவுனம் உண்டாகும்

163. சூதத்துடன் தங்கம், கெந்தகம் சேர்ந்து செந்தூரமாக்கி, எல்லா சரக்குகளையும் கட்டலாம். சிவந்த கற்றாலையை சமூலம் இடித்து சூரணமாக தேனில் கொள்ள. தேகம் சித்தியாகும். பஞ்ச கர்த்தாக்கள் முன் நிற்பார்கள்.

164. ஒரு மண்டலம் மேற் கூறப்பட்ட மருந்தை உண்டால் சித்தருக்குள் சித்தனாவான். தாது எல்லாம் இறுகி கட்டும். விதிப்பயனால் ஆயுள் முடியாது. தேகம் அருணன் போல் ஆகும். கண்கள் செவ்வரளி பூப்போல் ஆகும்.

மேவவே யவர்களை நீமேவுங் காலம் விந்துவிட்டு
கெட்டலைந்து வீணே போவார்
மேவவே பொன்மாய்கை தள்ளிப் போடு
விதமான மயிலாரைத் தன்னைக் கேளு
மேவவே காலொன்று யிலைதானாலு
மேலான யாரையது கருப்பு மெத்த
தாவவே சமூலந்தான் வாங்கி மைந்தா
சாற்றுகிறேன் சரக்கான வகையைக் கேளே (165)

வகையென்ன மூலிகையை அரைத்து நன்றாய்
வளமான மால்தேவி தன்னில் பூசி
நகையாக வஞ்செருவில் புடத்தைப் போடு
நலமான செந்தூர மாகும் பாரு
துகையாக நவலோகம் நூற்றுக்கொன்று
சூட்டிடவே ஒன்பதரை சோதித்தேறும்
வகையான சரக்கெல்லாம் இப்படி செய்ய
மைந்தனே செந்தூரமாகும் பாரே. (166)

செந்தூரமானதொரு வேதை கோடி
திறமான களங்கமது மெழுகுமாகும்
செந்தூரமான தொரு சூதங்கட்டும் சிவசிவா
சூதத்தின் போக்கு மெத்த
செந்தூர மானதொரு மூலிதன்னை
சேரவே நிழலுணர்த்தி யிடித்துத் தூளாய்
செந்தூர மானதொரு சர்க்கரையை சேர்த்து
தினந்தோறும் உள்ளுக்குக் கொண்டிடாயே (167)

---

165. உன் தேகத்தைக்கண்டு பெண்கள் மோகிப்பார்கள். அவர்களுடன் கலந்து சுக்கிலத்தை விட்டாயானால் அவர்களும் நீயும் வீணாவீர்கள். பெண் மாய்கையை தள்ளி வாழ் வாயாக! மயிலாரை என்னும் மூலிகையை கால் ஒன்று இலை நான்கு கருப்பு நிறம் கண்டு, சமூலமாக எடுத்து,

166. இந்த மூலிகையை அரைத்து மால் தேவியின் மீது பூசி ஐந்து எருவில் புடமிட்டால் செந்தூரமாகும். நவலோகத்தில் தந்தால் ஒன்பதரை மாற்று ஆகும். எல்லா சரக்கு களும் இப்படியே செந்தூரமாகும்.

167. எல்லா சரக்குகளும் இந்த மூலிகையால் களங்காகும். மெழுகாகும். சூதம் கட்டும். இந்த மூலிகையை நிழலில் உலர்த்தி இடித்து தூளாக்கி சர்க்கரை சேர்த்து உள்ளுக்கு சாப்பிட,

மூலிகையால் பாஷாண மெழுகு

கொண்டிடவே மண்டலத்தில் சட்டைகக்கும்
கொள்கியே ரோமமெல்லாம் வண்டுபோலாம்
முண்டிடவே தேகமது ஊழிகாலம்
முறைத்துப்பார் கண்ணனுட கர்மமாகும்
பண்டிடவே இன்னமொன்று சொல்லக்கேளு
பகரறிய மால்தேவி விரையை வாங்கி
கண்டிடவே யிடித்து நன்றாய் வில்லைக்கட்டி
காயவைத்து பூப்புடலத்தில் தைலம் வாங்கே (168)

தைலத்தை பாஷாணமதினி லாட்டி
சாரித்து வாட்டையிலே மெழுகுமாகும்
தைலத்தை வெள்ளியங் கரண்டியிலே வைத்து
கனலிட்டு உருகையிலே மெழுகு ஈய
அயிலத்தை யொவ்வாது வெள்ளியப்பா
யரகார திசைமாத்தா மறிந்து பாரு
தைலாம் மூலியுட கிழங்குச் சாற்றை
சாதித்து சூதத்திலரைத்திடாயே (169)

அரைத்திட வெண்ணெயைப் போலாகும்பாரு
அப்பனே கரியில் வைக்க உருகியாடும்
தயத்திடவே சூதத்தில் காரசாரம்
தாக்கினா லண்டரெண்டம் கடந்து ஓடும்
தீர்த்திடவே தங்கமொடு கெந்தியிட்டு
சேர்ந்திடவே சரக்குவகை திறமாம்பாரு
பரத்திடவே மூலியினால் சரக்கெல்லாம்கட்டும்
பகராதே சரக்கெல்லாம் நிழலுலர்த்தே (170)

---

168. ஒரு மண்டலத்தில் சட்டை தள்ளும். உரோமங்கள் எல்லாம் வண்டு போல் ஆகும். தேகம் ஊழி காலம் வரை அழியாது. மால் தேவி விதையை வாங்கி இடித்து வில்லைதட்டி பூப்புடமிட்டு தைலம் வாங்கி,

169. இதை பாஷாணத்தில் ஆட்டி, வாட்டினால் மெழுகு ஆகும். வெள்ளியை உருக்கி மெழுகை தந்தால் எட்டு மாற்று ஆகும். இந்த மூலிகையின் கிழங்கு சாற்றை சூதத்தில் அரைத்தால்,

170. வெண்ணெய் போல் ஆகும். நெருப்புக்கு ஓடாது. கார சாரம் சேர்த்தால் அண்டா அண்டம் கடந்து ஓடும். இதனுடன் தங்கம், கெந்தி சேர்த்து செந்தூரிக்கலாம். இந்த மூலிகையினால் எல்லா சரக்குகளும் கட்டும்.

உலத்தியே சூரணமாய் செய்துகொண்டு
　　உத்தமனே தேனுடனே கூட்டி நெய்யும்
நலத்துநீ சேர்த்துடனே உள்ளே கொள்ளு
　　நாற்பதுநாள் கொண்டிடவே நமனோ இல்லை
கொண்டிடவே சடத்திலுள்ள நோய்களெல்லாம்
　　பறந்துவிடும் பத்தியமா யுண்டுதேரு
யலத்தியே மூலியின் வகையைக் கேளு
　　அப்பனே நால் சதுரக்கள்ளிப்பாரே (171)

கள்ளியிலே இருபிறப்பு கள்ளியுண்டு
　　கண்டுநீ கொண்டு வந்து நறுக்கிப்போடு
கள்ளியிலே யடிதொடுத்து நுனிவரைக்கும்
　　கப்போடு தவுறுமுதல் சதுரம் நாலாய்
கள்ளியிலே சரக்கு மிக சோதித்தெரி
　　கண்டு பாஷாணம் தீரக் கருவைக்கேளு
வெள்ளியிலே பாஷாணங் கட்டியாகும்
　　விதமாக வாங்கிநீ சுத்திசெய்யே (172)

செய்யவே வெள்ளாவி தன்னில் வைத்து
　　சிறப்பாக ஏழுசுத்தி செய்து கொண்டு
விள்ளவே கள்ளியிட தூரிலப்பா
　　உளி கொண்டு சதுரமாய் துளைதானாட்டி
தொய்யவே பாஷாணந் தனிலே வைத்து
　　துளைத்திட்ட சீராய் கொண்டு மேலேமூடு
பையவே சாமமது பன்னிரண்டானால்
　　பாங்குடனே வாங்கி மேற்கவசம் கேளே (173)

---

171. இதை சமூலம் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி சூரணித்து தேன் நெய் கூட்டி கொள்ள நமனில்லை. எல்லா நோய்களும் தீரும்.

172. நாற் சதுர கள்ளியை கண்டு கொண்டு வந்து வெள்ளை பாஷாணத்தை சுத்தி செய்து,

173. கள்ளியின் தூரில் பொதிந்து மூடி மேற் கவசம் செய்து பனிரண்டு சாமம் சென்று,

கவசமாம் மூவருப்பு கல்லுச்சுண்ணம்
கருவான வண்டநீர் சேத்துக்கூட்டி
கவசமாம் சிறுநீராலாட்டிப் பூசி
கட்டியே பத்தெருவில் புடத்தைப்போடே
.... வகைதானாச்சு கண்டு பார்
சுன்னத்தால் வேதை கோடி
கவசமாம் வெள்ளியொடு பொன்னுமாகும்
ஆச்சரிய மாச்சரிய மதிதம் பாரே (174)

மதிதமாங் கள்ளியிலே சூதங்கட்டு
மப்பனே சரக்கெல்லாங் கட்டிப்போகும்
மதிதமாம் சமூலந்தான் வாங்கி மைந்தனே
நிழலுணர்த்தி சூரணமாய் செய்துகொண்டு
அதிதமாஞ் சீனியொடு மிளகு கூட்டி
அப்பனே நாள்தோறுங் களஞ்சியிடை கொண்டுவாநீ
அதீதமாம் தேகமது சித்தியாகு
மப்பனே பத்தியமா யுண்டு தேறே (175)

மூலிகையால் தாம்பர சுன்னம்

தேறவே கருப்பான பசளை சொல்வேன்
தேசத்தில் மெத்தவுண்டு தேடிப்பாரு
மீறவே சமூலந்தான் வாங்கி மைந்தா
விதமாக யிடித்துச்சார் பிழிந்து கொண்டு
கூறவே வெள்ளீய முருக்கிச் சாய்க்க
குறிப்பான வெள்ளியது பத்து மாத்தாம்
தேறவே பாஷாணம் தோய்த்து வாட்ட
க்ஷணத்திலே மெழுகாகும் வேதையாமே (176)

---

174. உவர் உப்பு, கல் சுண்ணம், அண்ட நீர் ஆகியவற்றை அமுரியால் ஆட்டி மேலே பூசி பத்து எருவில் புடம் போடவும். பாடாணம் சுண்ணமாகும். வெள்ளி, பொன், சுண்ணமாகும்.

175. இந்த கள்ளியிலே சூதம் கட்டும். சரக்கு எல்லாம் கட்டும். இதை சமூலம் எடுத்து சூரணித்து சீனி, மிளகு கூட்டி களஞ்சு எடை உண்டு வந்தால் தேகம் சித்தியாகும். பத்தியம் காப்பாயாக!

176. கருப்பு பசலைச் சாற்றில் வெள்ளீயத்தை உருக்கி சாய்த்தால் வெள்ளி பத்து மாற்று ஆகும். பாஷாணம் இதன் சாற்றில் மெழுகாகும்.

ஆமெனவே சரக்கெல்லாங் கட்டிப்போகும்
 அரைத்திட்ட சூதமெல்லாம் மெழுகு போலாம்
நாமெனவே நிழலுணர்த்தி சூரணமே செய்து
 நலமான தாளிச பத்திரியும் சேர்த்து
காமெனவே தேனிலே குழப்பி நித்தங்
 கடியதொரு மண்டலமே கொண்டாயானால்
ஆமெனவே தாதுவெல்லா மிறுகிக்கட்டு
 மப்பனே தேகமது கல்தூணாமே (177)

தூணான பொடியிலே மிளகு காந்தம்
 சூட்டியே விஷந்தீண்டி வருவோர்க்கெல்லாம்
பானான சிறுநீரில் குழப்பிக் கொள்ள
 மத்ததொரு விஷங்களெல்லாமோடிப் போகும்
கோணாதே இன்னமொன்று சொல்லக்கேளு
 குறிப்பான கருந்துளசி தன்னைவாங்கி
யானாதே யிடித்துச் சார்பிழிந்து கொண்டு
 அழகான தாம்பரத்தை யூறப்போடே (178)

ஊறவே மூன்று நாளான பின்பு
 யுவர்ப்பூவும் கலச் சுண்ணம் சமனாய்க்கொண்டு
ஆறவே வருக்கம்பால் தன்னாலாட்டி
 உத்தமனே மேற்பொதிந்து புடத்தைப்போடு
மூறவே தாம்பரந்தான் சுண்ணமாகும்
 மூட்டிடவே நவலோகத் தோடும்தூரம்
மூறவே சரக்கை யெல்லாம் கட்டி நீத்தும்
 உறவான தங்கத்தை தோய்த்திடாயே (179)

---

177. எல்லா சரக்குகளும் கட்டும். சூதம் மெழுகாகும். இதை நிழலில் உலர்த்தி சூரணம் செய்து தாளிச பத்திரி சேர்த்து தேனில் ஒரு மண்டலம் கொண்டால் எல்லா தாதுக்களும் இறுகிக் கட்டும். தேகம் கல் தூணாகும்.

178. இந்த சூரணத்துடன் மிளகு, காந்த செந்தூரம் கூட்டி அமுரியில் தந்தால் விஷங்கள் யாவும் தீரும். கருந்துளசியை இடித்து சாறு எடுத்து,

179. தாமிரத்தை மூன்று நாள் ஊறப் போடவும். உவர்ப்பு, கல் சுண்ணம் சமனாய் எடுத்துக் கொண்டு எருக்கம் பாலால் ஆட்டி மேல் பொதிந்து புடமிட தாமிரம் சுண்ணமாகும். எல்லா சரக்குகளையும் இந்த மூலிகை கட்டி நீற்றும்.

தோய்த்திடவே யேழுநாளூறப் போடு
துடிப்பான சூடனோடு வீரம் சூதம்
மாய்த்திடவே வாய் நீராலரைத்துப்பூசி
அதன்மேலே யண்டத்தோல் பொசிந்து மூடி
ஓய்த்திடவே வுவர்ப்பூவும் கல்லுச்சுண்ணம்
உத்தமனே பூத்தொட்டிலிட்டு மேலாய்
தோய்த்திடவே தங்கத்தை நடுவே வைத்து
சரமாய் மேலோடு கொண்டு மூடே (180)

மூடியே பத்தெருவில் புடத்தைப்போடு
மூசியாதே தங்கமது குருவுமாகும்
ஆடியதோர் தங்கத்தால் வேதை கோடி
ஆச்சரியம் சூதத்தை கல்வத்திட்டு
நாடியே முன் சாற்றை குத்தியாட்ட
நலமான வெண்ணெயைப் போலாகும் பாரு
ஆடியே வழித்து நீயண்டங்கூட்டி
உத்தமனே யிட்டு வர்க்கம்பாலே (181)

பாலோடு வெண்கருவு மத்தித்தொன்றாய்
பாய்ச்சியே சில்லிட்டு பாகமாக
காலோடு சுண்ணாம்பு சீலை செய்து
காடையொடு புடத்திலிட கடிதா சுண்ணம்
மாலோடு சூதமது சுண்ணமானால்
மகத்தான வாதவித்தை மிச்சமாச்சு
யேலோடு பரிச்சுண்ணம் சேர்ந்ததானால்
யெமகிரி ஆயிரத்தெண் மாத்தொவ்வாதே (182)

---

180. தங்கத்தை ஏழு நாள் ஊறப்போட்டு சூடம், வீரம், சூதம் இவற்றை வாய் நீரால் அரைத்து பூசி அண்டத்துள் பொதிந்து உவர்ப்பு, கல் சுண்ணம் நடுவே வைத்து மேல் ஒடு மூடி,

181. பத்து எருவில் புடம் போட தங்கம் குருவாகும். இதனால் வேதையாகும். சூதத்தை கல்வத்தில் இட்டு. கருந்துளசி சாற்றால் ஆட்ட வெண்ணெய் போல் ஆகும். அண்ட வெண் கரு, எருக்கம்பால் தெளிவு நீரால்,

182. மத்தித்து சுண்ணாம்பு சீலை செய்து காடை புடமிட சுண்ணமாகும். இதனோடு உபரி சுண்ணம் சேர்ந்தால் ஆயிரத்தெட்டு மாற்று ஆகும்.

கல்தாமரை வேதை அயச்செம்பு

ஒவ்வாதே மூலிகையி லின்னுங் கோடி
உலர்த்திடயே சூரணமாய் செய்து கொண்டு
வவ்வாத ஓமமதி னொக்கச் சேர்த்து
பசுவாகும் நெய்தனிலே பாகம் பண்ணி
செவ்வாக நாற்பதுநாள் கொண்டாயானால்
தேகமது பச்சை வண்ண தேகம் போலாம்
மாலாக மார்பணிந்தார் மாலின் தேவி
மகத்தான லட்சுமி பொன்னானவாரே (183)

பொன்னாக இன்னமொன்று சொல்லக்கேளு
பேசிய கல்தாமரையின் மூலந்தன்னை
யன்னான அடையாளம் பார்த்து சோதி
அதுபோலே மெத்த உண்டு அகலத்தள்ளு
கண்ணான மஞ்சத்தூர் போலேயப்பா
கமலம் போல் நாலிலைதான் சொல்லக்கேளு சுத்திநிற்கும்
ஒண்ணான வரணமென்ன வெளுரிக்காணும்
முயர்ந்த கற்பூர வெள்ளிலையைப் பாரே (184)

தங்க செம்பு

வெள்ளிலையா மூலியிட கிழங்கு வாங்கி
விதமான தேசிச்சார் விட்டு ஆட்டி
வெள்ளிலையாம் குழம்பாகும் பதமாயாட்டி
வேண்டியதோர் யச்சல்லி பிசறியிட்டு
வெள்ளிலையாங்கார மிட்டு குகையிலூது
வெகுபாகு கசடத்த செம்பே யாகும்
கள்ளிலையாம் செம்பிடைக்கு தங்கம் சேர்த்து
கருவான சூதமுடன் கெந்தியூட்டே (185)

---

183. மூலிகையை சூரணம் செய்து ஓமம் சேர்த்து பசு நெய்யில் நாற்பது நாள் கொண்டால் தேகம் பசுமையாகும்.

184. கல் தாமரை மூலிகையை கண்டு மஞ்சள் வேர் தாமரை போல் நான்கு இலை இருப்பதைக் கண்டு, (வெள்ளை நிறுத்துடன் இலைகள் இருக்கும்)

185. இந்த மூலிகையின் கிழங்கில் தேசிச்சாறு விட்டு ஆட்டி குழம்பு பதத்தில் அயத்துண்டு களை போட்டு வெண்காரமிட்டு உருக்க செம்பு ஆகும். இதன் எடைக்கு தங்கம்' சூதம், கெந்தி சேர்த்து,

கெந்தியாம் லிங்கத்திற் பாதிபோடு
கெடியான செங்கீரை சாற்றாலாட்டி
கந்தியே நாசியென்ற மேருக்கேத்தி
கனமான வாலுகையின் மேலே வைத்து
செந்தியே கமலம் போல் பன்னிரண்டுசாமம்
சிறப்பாக யெரிய விட்டு ஆறவிட்டுவாங்கு
யந்தியே செந்தூரம் பவளம் போலாம்
ஆட்டிடவே நவலோக மாயிரத்துக் கொன்றீயே *(186)*

ஆயிரத்துக் கொன்றிடவே திசமாத்தாகும்
மாதியாம் தங்கத்தை தகடு வாங்கி
மாயிரத்தில் பின் குழம்பில் கெந்திகூட்டி
பாங்கான தட்டுக்கு மேலே பூசி
மேயிரத்தி .... வங் .... வேரின் பட்டை
யிடித்து நீ பொதித்து மேற்சீலை சுத்தி
நாயிரத்தின் புடம் போட்டு யெடுத்துப்பாரு
கசடத்த தங்கமது செம்புமாமே *(187)*

செம்பாகும் தங்கத்தால் வேதைகோடி
செய்ய வென்றா லென்னவே செம்பொனால்
அம்பாகும் கொடிதப்பா மூலிவேக
மாச்சரியம் பித்தளையின் தகடு பூசி
மும்பாக ஏழுதரம் பூசக் காய்ச்ச
முசியாதே நீறுண்டு பொன்னுமாகும்
செம்பாகும் சொல்லுகிறேன் காரீயத்தில்
செயமுடன் பூசி நன்றாய் புடத்தில் போடே *(188)*

---

186. பாதி எடைக்கு லிங்கம் சேர்த்து செங்கீரை சாற்றால் ஆட்டி வாதுகா எந்திரத்தில் பனிரண்டு சாமம் கமலாக்கினியாய் எரிக்க பவளம் போன்ற செந்தூரமாகும். நவலோகம் மாற்று ஆகும்.

187. தங்கத் தகட்டில் மேற் கூறப்பட்ட குழம்பில் கெந்தி கூட்டி பூசி......... மேல் சீலை சுற்றி புடம் போட தங்கம் செம்பாகும்.

188. இதனால் கோடி வேதை செய்யலாம். பித்தளை தகட்டுக்கு மேற்படி குழம்பை ஏழு முறை பூசி காய்ச்ச பொன்னாகும். காரியத்தில் பூசி புடமிட,

புடத்திலே காரீயம் செம்புமாகும்
　　பேரான சரக்கெல்லாம்........வாங்கும்
திடத்திலே செம்பிடைக்கு தங்கங் கூட்டி
　　தீயான சூதமுடன் கெந்தி சேர்த்து
அடத்திலே மல்லிகையின் சாற்றாலாட்டி
　　அழகான காசியென்ற மேருக்கேத்தி
கடத்திலே வாலுகையின் தீயை மூட்டு
　　கமலம் போல் பன்னிரண்டு சாமந்தானே (189)

சாமந்தா குளரித்திடவே செந்தூரமாகும்
　　சாற்றியதோர் நவலோக மாயிரத்துக் கொன்று
யாமந்தா னயச் செம்பு சேர்ந்துதானா
　　லடங்காத வேதையப்பா அறிந்துபாரு
காமப்பா மூலிகை தானென்ன சொல்வேன்
　　கடிதான சரக்கை யெல்லாங்கட்டிக் கொல்லும்
யாமப்பா தாம்பரத்தை யுருக்கிச் சாய்க்க
　　அரகரா சோதிமயமாகும் பாரே (190)

பார்க்கவே யதனுடைய கிழங்குதன்னை
　　பருவான குகைபோலே குடைந்து நீயும்
பார்க்கவே சூதமொரு பலத்தைவிட்டு
　　பக்குவமாய் மேல்மூடி சீலை செய்து
பார்க்கவே சட்டியிலே கருமணலையிட்டு
　　பதித்துமே கிழங்கதான் நடுவே வைத்து
தாக்கவே கல்சட்டி கவிழ்த்துமூடி
　　சந்துவாய் சீலை செய்து யடுப்பிலேத்தே (191)

---

189. செம்பாகும். இதன் எடைக்கு தங்கம் கூட்டி சூதம் கெந்தி சேர்த்து மல்லிகை சாற்றால் ஆட்டி கமலாக்கினியாய் பனிரண்டு சாமம் எரிக்க செந்தூரமாகும்.

190. இதனால் நவலோகங்கள் மாற்று ஆகும். இந்த மூலிகை சரக்கு எல்லாவற்றையும் கட்டும். தாமிரத்தை உருக்கி சாய்க்க களிம்பு போகும்.

191. இதனுடைய கிழங்குக்குள் சூதத்தை வைத்து ஒரு சட்டியில் கரு மணலுக்குள் வைத்து,

ஏத்தியே தீபம் போலெரிப்பாய் சாமம்
இருகியே சூதமது பிட்டு போலாமே
....தியே குட கரியில் உருகியாடும்
புகழான சாரணைதான் செய்து பாரு
பார்த்தியே யாகாசங் கெவுனபோடு
மண்டலத்தில் மேல்பறந்து பரப்பால் செல்லும்
குருதியே பூரணத்தில் சென்று புக்கும்
சிவ சிவா சிலம்பொலியின் நாதம் கேட்கும் *(192)*

நாதமாம் தங்கமிட்டால் வேதையாகும்
நலமான மூலிகையை யுலர்த்தி சாளாய்
போதவே வஸ்திரகாயம் பண்ணி
புகழான வாளுலுலை சமனாய் சேர்த்து
தீதமா மண்டலமே தேனில் கொள்ள
கெடியான சட்டைக்கு வாலையாகும்
போதமாம் பூரணத்தில் முற்றம் சிந்தும்
போக்கதிலே மெத்தரண்டு புகழ்ந்து பாரே *(193)*

புகழ்ந்திட யின்னமொன்று சொல்லக்கேளு
போக்கான திருக்கள்ளி சாதிக்கள்ளி
முகந்திட்ட இவ்வகையாம் சோதிதன்னில்
முளைத்திருக்கும் புல்லுருவி முறையைக்கேளு
யகந்திட்ட புல்லுருவிக் காவியென்று
அப்பனே பாதிகொண்டபா.......
மிகுந்திட்ட நீறுமாஞ் சோதியவும்
நிகழ்த்தினார் சித்தரெல்லாம் நீதிபாரே *(194)*

---

192. **தீபாக்கினியாய் எரிக்க கட்டும். இதை சாரணை செய்தால் குளிகையாகும். கவுனம் ஓடும். சிலம் பொலி கேட்கும்.**

193. **இந்த மூலிகையை உலர்த்தி வஸ்திரகாயம் செய்து வால் உளுவை சமன் சேர்த்து ஒரு மண்டலம் தேனில் கொள்ள தேகம் வாலையாகும்.**

நீதிபார் தென்னம்பூ விரிதல் போலே
நீர்க்குமப்பா சோதி நிறம் வெண்மையாக
பாதியாம் மூலியை நீ வாங்கி வந்து
பதட்டியே யிடித்துச் சார் பிழிந்து கொண்டு
சாதியாம் பாஷாணம் தோய்த்து வாட்ட
கணத்திலே கட்டுண்டு மெழுகுமாகும்
போதியாம் நவலோகம் பத்துமாத்து
போக்கறிந்து வெள்ளி போலு பொன்னுமாமே (195)

பொன்னாகும் சரக்கெல்லாம் கட்டிப்போகும்
பூட்டிடவே சூதமது மணிபோலாகும்
மின்னான முதலிதான் யிடித்துத்தூளாய்
மிதுரான சீனியொடு மிளகு சேர்த்து
நன்னான்கு கதலியுட பழத்தை யூட்டி
நாற்பது காள் கொண்டிடவே நலமாம் திரேகம்
பன்னான யீரொன்பான் ரோகந்தீரும்
பறுகடிய விஷங்களெல்லாம் பறந்து போமே (196)

பேய்க்கடலை

பறந்துதா னின்னமொரு மூலிகை தான் கேளு
பரிவான பேய்க்கடலை தன்னை வாங்கி
யுடைத்துதா னடையாளம் சொல்லக்கேளு
அதனுடைய யிலை தடியாய்க் கனத்துக் காணும்
கடந்துதான் கடலைகாய் போல காய்க்கும்
கடிதப்பா வாயிலிட்டால் கசப்புமெத்த
யிரந்து நீ புரவாதே சமூலங் கொண்டு
யென் மக்கா ளுரலிலிட்டு யிடித்து வாங்கே (197)

---

195. சோதி நிறத்துடன் தென்னம்பூ விரிதல் போல நிற்கும் மூலிகையை இடித்து சாறு எடுத்து பாஷாணத்தை தோய்த்து வாட்ட மெழுகாகும். இதனால் நவலோகங்கள் மாற்று ஆகும்.

196. எல்லா சரக்குகளும் கட்டும். சூதம் மணியாகும். இதை சூரணித்து சீனி, மிளகு சேர்த்து வாழைப் பழத்துடன் நாற்பது நாள் கொள்ள பதினெட்டு வகை குட்டமும் தீரும். விஷங்கள் அனைத்தும் தீரும்.

197. இலை தடித்து கடலைக் காய் போல் காய்க்கும் பேய்க் கடலை மூலிகையை கண்டு கொள்வாயாக! இதன் கடலை மிகவும் கசப்பு உடையது. இதை சமூலம் கொண்டு வந்து இடித்து சாறு எடுத்து,

வாங்கியே சாறினைப் பிழிந்து கொண்டு
வாகான தாம்பரத்தை யுருக்கி சாய்க்க
பாங்கியே பொன்னாகு மாறு மாத்து
அசையாது வங்கத்து புடத்துக்கப்பி
ஓங்கியே குடவனை நீ யுருக்கி சாய்க்க
முரலென்ற நீரையெல்லா முண்டுபோகும்
பாங்கியே சரக்கையெல்லாங் கட்டிக்கொண்டு
பரிசிக்க லோகமெல்லாம் பசும் பொன்னாமே (198)

பசும்பொன்னா முட்கொள்ள கா்யசித்தியாகும்
மலையாதே மூலிகையின் பரிட்சை மெத்த
பசும்பொன்னா மின்னமொரு மூலி கேளு
பகருவேன் வீளியுட வகையைக் கேளு
பசும் பொன்னாங் கருவீளியானால் நின்று
பாருநீ கிடையாட்டால் நாட்டு வீளி
பசும் பொன்னாம் இதனுடைய கிழங்கு வாங்கு
பதனமாய் மூலிகையின் தினுசுகண்டு
பாரிலே வேறு கண்டமட்டும் வெட்டி வாங்கு (199)

வெட்டியே சோதித்து பாருநீ தான்
விதமான நீர் தளத்தில் நிற்கும் மூலி
தேட்டியே மூலத்தி னுணியைப் பார்த்தால்
தேங்காய் போலிருக்குமந்த கிழங்கு வாங்கி
தட்டியே கிழங்குதனை பாக்கு போலே
தறித்துமே நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
வெட்டியே கழஞ்சிடைதான் கிழங்கை யூட்டி
விதமான லோகமெல்லாம் வெள்ளியாமே (200)

---

198. அதில் தாமிரத்தை உருக்கி சாய்க்க பத்து மாற்று உள்ள பொன்னாகும். குடவனை உருக்கி சாய்க்க கட்டும். எல்லா சரக்குகளும் கட்டும்.

199. இதை உட்கொண்டால் காயம் சித்தியாகும். இனி கிடைத்தால் கரு வீழி அல்லது நாட்டு வீழி கிழங்கு எடுத்து,

200. (இது நீர் உள்ள இடத்தில் இருக்கும் மூலத்தின் நுணியை பார்த்தால் தேங்காய் போல் இருக்கும்) பாக்கு போல் வெட்டி நிழலில் உலர்த்தி,

வெள்ளியாங் கிழங்கரைத்து குகைதான் பண்ணி
வீருதான சூதத்தை யதிலே வார்த்து
யள்ளியாயக்கரண்டி தன்னிலிட்டு
யடுப்பேத்தி மணக்காடை நெய்யை யூட்ட
துள்ளியே சூதமது உண்டையது சூதமாகும்
துடியாக வாயில் வைக்க கெவுனமாமேடும்
தெள்ளியே செந்தூரம் செய்யில்
வேதை திறமான மூலிகை சமூலங்கேளே (201)

சமூலமாம் நிழலுலர்த்தி தூளாய் பண்ணி
சாதகமா யப்புரக செந்தூரங் கூட்டி
சமூலந்தான் மண்டலமே சர்க்கரையில் கொள்ள
சார்வான திரேகசித்தி சார்பு மெத்த
சமூலந்தான் பத்தியமாய் உண்டு தீரு
சதம்கோடி யுகம் வரைக்குமிருக்குந் திரேகம்
சமூலத்தா னுண்டபேர் சாகார் சொன்னேன்
தவறாதே பொற்சீந்தி தன்னைக் கேளே (202)

பொற் சீந்தி

கேளப்பா பொற்சீந்தி தன்னைக் கேளு
கெடியான சரக்கெல்லாங் கட்டிப் போகும்
நாளப்பா குருவாகும் செந்தூரமாகும்
நவலோகம் பொன்னாகும் நாடிப்பாரு
கேளப்பா சூதமது உண்டையாகும்
கொண்டு முன்னேகாத லட்சங்கோடிபோடும்
வாளப்பா பரிசினத்தில் வேதையாகும்
வெகுளாது சீந்தியை நீ சூரணமே செய்யே (203)

---

201. கிழங்கை அரைத்து குகை செய்து சூதத்தை அதில் வைத்து எரித்து மணக்காடை நெய்யை ஊற்ற சூதம் கட்டும். கெவுனமாகும். செந்தூரமாக்கினால் வாலையாகும்.

202. இந்த மூலிகையை சமூலம் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி தூளாக்கி அப்பிரக செந்தூரம் கூட்டி சர்க்கரையில் ஒரு மண்டலம் பத்தியமாய் கொள்ள கோடி யுகம் வாழலாம்.

203. பொற் சீந்தில் மூலிகைக்கு எல்லா சரக்குகளும் கட்டும். குருவாகும். செந்தூரமாகும். சூதம் திரளும். பொற்சீந்திலை சூரணம் செய்து,

செய்யவே திரிகடுகு வில்லை பூவும்
சேர்த்துமே மண்டலந்தான் சர்க்கரையில் கொள்ள
துய்யவே சடத்திலுள்ள நோய்கள் போகும்
துரத்திவிடும் காயசித்தி சுறுக்கு மெத்த
பையவே நரைதிரையு மாறிப்போகும்
பளபளக்கு முடம்பெல்லாம் பாலையாவாய்
மெய்யான கற்பத்தின் விபரம் சொன்னேன்
மேதினியி லின்னமொன்று விளம்புவேனே (204)

நல்லாரை

விளம்புவேன் நல்லாரை தன்னைக்கேளு
விதமான ஆரையினால் சூதங் கட்டும்
தளம்பாத சரக்கெல்லாங் கட்டிப்போகும்
தனிவேதை சகஸ்திரத்துக் கோடும் பாரு
குளம்பாதே நிழலுலர்த்தி சூரணமே செய்து
கொண்டுவிடு பத்தியமா ஆவின்நெய்யில்
விளம்பாதே மண்டலத்தில் சட்டை காக்கும்
மேனியுமே யருண நிறமாகும் பாரே (205)

பொன்னுங்கன்னி

ஆகவே பொற்கையான் தன்னை சொல்வேன்
அப்பனே பாஷாண முப்புங் கட்டு
பாகமே செய்துபார் வேதையாகும்
பரியாசம் சொல்லாதே நிழலுலர்த்தி
வேகவே சூரணத்து கடுக்காய் சேரு
விதமான மிளகோடு ஆவின் நெய்யில்
ஆகவே நாற்பது நாள் கொள்ளு கொள்ளு
யாமமெல்லாந் தள்ளிவிடு மதிதமாமே (206)

---

204. திரி கடுகு, சேர்த்து ஒரு மண்டலம் சர்க்கரையில் கொள்ள எல்லா நோய்களும் போக்கும். நரை திரை மாறும். உடம்பு வாலையாகும்.

205. நல்லாரை மூலிகையால் சூதம் கட்டும். சரக்குகள் எல்லாம் கட்டும். நிழலில் உலர்த்தி சூரணம் செய்து பத்தியமாய் ஆவின் நெய்யில் கொள்ள சட்டை தள்ளும். மேனி அருணன் நிறமாகும்.

206. பொற்றலை கையாந்தகரை என்னும் மூலிகையால் பாஷாணம் உப்பு கட்டும். வேதையாகும். இதை நிழலில் உலர்த்தி, சூரணம் செய்து கடுக்காய் துாள், மிளகு சேர்த்து ஆவின் நெய்யில் நாற்பது நாள் கொள்ள தேகத்திலுள்ள குற்றங்கள் எல்லாம் போகும்.

அதிதமாம் தேகசுத்தி சுறுக்கு மெத்த
ஆச்சரியம் சட்டையெல்லாம் கக்கிப்போகும்
யதிதமாஞ் சரஸ்வதி நாவில் தோத்தும்
அவர் முன்னே அஷ்டலட்சுமி தானிற்கும்
அதிதமாஞ் சித்தரெல்லா முந்தி முந்தி
யருந்தியதோர் கற்பமிது யருந்திப்பாரு
யதிதமாம் சிற்றின்ப மாயை தள்ளி
யப்பனே பேரின்பத்தடுக்கும் வாரே (207)

அருகண்ணி தொழுகண்ணி

வாறான மூலிகையி லின்னமொன்று
வளமான யமுகண்ணி தொழுகண்ணி வாங்கி
பேறாக இடித்துச் சார் பிழிந்து கொண்டு
பேசாது சூதமது பலமே தூக்கி
தாறான அயக்கரண்டிக்குள்ளே விட்டு
தணலிலே விட்டூரு சுறுக்கு தாக்கு
வாறான சூதமது வீரிட்டுச் சாகும்
மைந்தனே சூதத்தில் சாரணையைத் தீரே (208)

தீரவே வாயில் வைக்க கெவுனமோடும்
சிவசிவா தங்கமிட்டு செந்தூரித்தால்
தீரவே வேதையில் தூரவோடும்
திறமானயது யிது நாலு தானும்
தீரவே முன் சாற்றில் தோய்த்து விட்ட
தீயாது சட்டியது குருவுமாகும்
தீரவே ரிசின்னத்திலேம மாகும்
செப்பரிய மூலிகையின் சித்தி பாரே (209)

---

207. தேகம் சுத்தியாகும். இது மிகவும் சுருக்கான வழி. சட்டை தள்ளும். சரஸ்வதி நாவில் தோன்றும். அஷ்ட லட்சுமியும் முன்னே நிற்கும். சித்தர்கள் முதன் முதலில் சாப்பிடும் கற்பம் இதுவே ஆகும். சிற்றின்ப மாய்கையை தள்ளி உண்ணுவாயாக!

208. அழுகண்ணி, தொழுகண்ணி என்னும் மூலிகையை வாங்கி இடித்து சாறு எடுத்து சூதம் ஒருபலம் அயக் கரண்டியில் விட்டு சுருக்கு தாக்கு. சூதம் கட்டும். சாரணை செய்து,

209. வாயில் வைக்க கவுனமாகும். தங்கமிட்டு செந்தூரித்தால் வேதையாகும்.

சித்திக்க சூரணமே செய்து கொண்டு
சிறியதோர் வாலுவை தேனுங் கூட்டி
முத்திக்கு மண்டலமே கொண்டாயானால்
முரன் .... ன தேகமது சிவந்துமின்னும்
எத்திக்கும் கோடானு கோடி காலம்
யிறுத்தி வைக்கும் எமனிடபேர் போச்சப்பா
யத்திக்கும் பத்தியமா யுண்டு தேறு
யப்பனே பெண்ணாசையைத் தள்ளே (210)

தள்ளவே ... சணியின் மூலிகேளு
சாற்றுகிறே னஷ்ட மா சித்தியாக
மெள்ளவே சமூலந்தான் வாங்கி மைந்தா
விதமாக யிடித்துச் சார் பிழிந்து கொண்டு
யள்ளவே கல்லுப்பு தோய்த்து வாட்ட
யரகரா கட்டியது மணியுமாகும்
துள்ளவே சூதமது கட்டிப்போகும்
துடியான பாஷாண மெழுகுமாமே (211)

மெழுகாகும் சரக்கெல்லாம் கட்டிப்போகும்
வேதையிட்டால் வெகுதூர மெட்டிப்போகும்
நழுகாதே சூரணமே செய்து கொண்டு
நலமான திரிகடுகு சேர்த்து உண்ணு
விழுகாது தேகமப்பா கோடி காலம்
விரைந்துதான் சித்தியுடன் முத்தியுண்டாம்
தழுகான சட்டைக்கு வாலையாகும்
தயங்காதே மேனியுமே தங்கமாமே (212)

---

210. மூலிகையை சூரணம் செய்து, வாலுளுவை தேனும் கூட்டி உண்டால் தேகம் சிவந்து மின்னும். பத்தியமாய் இருந்து பெண்ணாசை தள்ளி உண்ண வேண்டும்.

211. .... - .. ... மூலியை சமூலம் கொண்டு வந்து சாறு பிழிந்து அதில் தோய்த்து வாட்ட கல் உப்பு மணியாகும். சூதம் கட்டும். பாஷாணம் மெழுகாகும்.

212. எல்லா சரக்குகளும் கட்டும். இதை சூரணம் செய்து திரி கடுகு சேர்த்து உண்டால் தேகம் வாலையாகும். சித்தி முத்தி உண்டாகும்.

வெண்கரந்தை

தங்கமாம் வெண்கரந்தை தன்னைக்கேளு
சதாசிவ னாறுண்ட தொரு கற்பமாகும்
பங்கமே சரக்கெல்லாம் கட்டிப்போகும்
படுமுன்னே சூதமது மணிபோலாடும்
வங்கமே நவலோகம் தன்னில் வேதை
மாட்டிடவே ஆயிரத்துக் கொண்ணு பாரு
அங்கமாஞ் சூரணமாய் செய்து கொண்டு
அரகரா உள்ளுக்கு அருந்தக் கேளே (213)

அருந்தவே மிளகோடு ஓமஞ் சேர்த்து
அழகான தேனிலே யருந்துவாய் நீ
அருந்தியே மண்டலத்தில் சட்டைகக்கி
பளபளக்கும் உடம்பெல்லாம் பாலையாவாய்
பொருந்துமே பூரணமாம் திரேக சித்தி
புண்ணியமே செய்தவர்க்கு யெய்து மெய்தும்
அருந்தவே குளிகை சித்தி வாதசித்தி
மகத்தான அஷ்டசித்தி வருகும் பாரே (214)

வருகவே சூதமா மூலி கேளு
வளமாக யிடித்து நன்றாய் சாறுவாங்கி
கருகவே சூதத்தைக் கல்வத்திட்டு
தாக்கியரை வெண்ணெய் போலாகும் பாரு
கருகவே மத்தங்காய்க் குள்ளே வைத்து
காடையொரு புடத்தில் போட்டு வாங்கி
உருகவே கட்டியது மணியுமாகும்
ஓகோகோ கெவனத்தி லுயர்ந்து போமே (215)

---

213. சதாசிவன் உண்ட வெண்கரந்தை என்ற கற்பத்தை கேட்பாயாக! இதில் எல்லா சரக்குகளும் கட்டும். சூதம் மணியாகும். இதை சூரணமாய் செய்து,

214. மிளகு, ஓமம் சேர்த்து தேனில் ஒரு மண்டலம் உண்டால் உடம்பு வாலையாகும். புண்ணியம் செய்தவற்கு இது கிட்டும். குளிகை சித்தி, வாத சித்தி, அஷ்ட சித்தி உண்டாகும்.

215. சூதமா மூலி கொண்டு வந்து சாறு எடுத்து சூதத்தை அரைத்தால் வெண்ணெய் போல் ஆகும். ஊமத்தங்காய்க்குள் இதை வைத்து புடமிட்டால் மணியாகும். கவுனமாகும்.

உயரவே தங்கமிட்டு செந்தூரம் செய்தால்
ஒருகோடி வேதையிது ஓசத்தி மெத்த
அயரவே சரக்கான வறுபத்து நாலும்
அப்பனே மூலிகையிலது நிறுத்து மாட்ட
கயரவே கட்டியது மெழுகு மாகும்
காட்டினால் நவலோகம் தங்கமாகும்
உயரவே சூரணத்திற் தேனிற் கொள்ள
உத்தமனே தேகத்துக் குறுதிதானே (216)

உறுதியாங் கருமத்தின் மூலங்கேளு
உரலிலிட்டு யிடித்துச் சார் பிழிந்து கொண்டு
உறுதியாம் சரக்கெல்லாம் தோய்த்து வாட்ட
உருகியே கட்டுமது வேதையாகும்
உறுதியாம் நவலோகம் உடைந்து நீறும்
ஊட்டிடவே சூதமது வெண்ணெய் போலாம்
உறுதியாம் சூதத்தை கரியில் வைத்து
உருக்கிடவே திரண்டுருண்டு மணியுமாமே (217)

மணியாகுமதினுடைய வேரரைத்து
மைந்தனே அயத்தகட்டில் பூசிப்பூசி
கணியாக மூன்றுபுடம் போட்டு தீர்க்க
கசடத்த செம்பாகும் கனகமாகும்
துணிவான மூலிகையின் சமூலம் வாங்கி
யதட்டியே சூரணமாய் செய்து கொண்டு
தனியாக சர்க்கரையில் சேர்த்துக்கொள்ள
சாதிக்கும் காயசித்தி சாதித்தோரே (218)

---

216. தங்கமிட்டு இதை செந்தூரித்தால் வேதையாகும். நவலோகம் தங்கமாகும். சூரணத்தை தேனில் கொள்ள தேகம் உறுதியாகும்.

217. கரு ஊமத்தை (?) இடித்து சாறு எடுத்து சரக்குகளில் தோய்த்து வாட்ட கட்டும். நவலோகம் நீறும். சூதம் வெண்ணெயாகும். மணியாகும்.

218. இதன் வேரை அரைத்து அயத் தகட்டில் பூசி மூன்று புடமிட செம்பாகும். மூலிகையின் சமூலத்தை சூரணம் செய்து சர்க்கரையில் கொள்ள காயசித்தியாகும்.

சிவனார் வேம்பு

சாதிக்கும் சிவனார்தன் வேம்பின் மூலம்
சாற்றுகிறேன் சதாகோடி வேதையாகும்
காதிக்கும் சமூலந்தான் தைலம் வாங்கி
கடிதான சரக்கையெல்லாம் தோய்த்து வாட்ட
பேதிக்கும் கட்டியது மெழுகுமாகும்
பூட்டிடவே நவலோக மெல்லாம் பொன்னாம்
நாதிக்கும் நிழலுலர்த்தி சூரணமே செய்து
நலமான வாலுகை சமனாய்க் கூட்டே (219)

கூட்டியே தேனிலே குழைத்துக் கொள்ள
கொடிதான காயசித்தியாகும் பாரு
மாட்டியே சடத்திலுள்ள நோயெல்லாம் போம்
மைந்தனே பதினெட்டு குஷ்டந்தீரும்
நாட்டியே நரை திரையு மாறிப்போகும்
நமனிலா... கற்பந்தான் கோடி காலம்
தீட்டியே ஆதியான கொண்ட கற்பம்
சிவசிவா கற்பத்தின் சித்தியாமே (220)

சித்தியா மின்னமெத்த மூலியுண்டு
செப்பினார் மால்தோறும் சித்தரப்பா
மத்தியாம் பூமியிலுமுண்டு பாரு
மகத்தான மூலிகையா... ன....
...தத.........னாயிர....
விளம்பினேன் மூலிகையின் விபரமெல்லாம்
முத்தியாம் சாபத்தை நிவர்த்தி செய்து
...னால் அஷ்ட சித்து முயக்க — மாமே (221)

---

219. சிவனார் வேம்பு சமூல தைலத்தில் எல்லா சரக்குகளும் கட்டும். மெழுகு ஆகும். நவலோகம் பொன்னாகும். இதை நிழலில் உலர்த்தி சூரணம் செய்து வாலுளுவை சமன் கூட்டி,

220. தேனில் குழைத்து உண்ண காயசித்தியாகும். எல்லா நோய்களும் தீரும். பதினெட்டு குஷ்டம் தீரும். நரை திரை மாறும்.

221. இன்னும் அநேக மூலிகைகளை சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள். சாப நிவர்த்தி செய்து பயன்படுத்த வேண்டும்.

முயக்கியமுள்ள மூலியினால் வாதசித்தி
      முனையான காயசித்தி குளிகைசித்தி
முயக்கியமுள்ள வாதசித்தி யோகசித்தி
      ... .
முயக்கிய மாமூலி யெல்லாங் கற்பமாகும்
      மூதறிவாம் சூத பற்பம் சேர்த்துக்கொள்ளும்
செயக்கவே அயக்காந்த செந்தூரம் சேர்த்து
      சேர்த்து நீ கொண்டிடவே தேவனாமே (222)

தேவனாய் காயசித்தி சுருக்கு மெத்த
      செப்பாதே உலகமெல்லாம் சித்திரமயமாகும்
தேவனாம் கைலாசகிரி கொள்ளாது
      சிவனங்கே வீற்றிருப்பார் தேவியங்கே
தேவனாம் மூலியொடு கரகசாரம்
      திஷ்டித்தாறு கையினால் சாபம் போட்டார்
தேவனாம் பிள்ளைகளுக்காக வேண்டி
      சிவனோடு தர்க்கமிட்டு செப்பினேனே (223)

செப்பியதோ ரின்னமொரு கருவைக் கேளு
      திறமான ரசவாத வித்தைக் கெல்லாம்
ஒப்பியதோர் கொசபீச மறிய வேணும்
      உத்தமனே யில்லாட்டாலுள் கொள்ளாது
அப்பிய தோடாலு மாத்தேறாது
      ஆதியென்ற கெந்தி விட்டால் வர்ணங்காணாள்
தப்பியே போகாமல் கொசபீசம்
      சார்வாக நான் வெளியாய் சாற்றுகிறேன் (224)

---

222. மூலிகை கற்பங்களுடன் சூத பற்பம், அயகாந்த செந்தூரம் சேர்த்து உண்டால்,

223. தேவனாகலாம். விரைந்து காய சித்தி உண்டாகும். மூலிகைகளுக்கு சாபம் சிவபெருமான் இட்டார். சிவனோடு தர்க்கம் செய்து இந்த மூலிகைகளை வெளியிட்டேன்.

224. ரசவாத வித்தைக்கு கோசபீசம் தெரிய வேண்டும். இல்லாவிட்டால் மாற்று ஏறாது. கெந்தி இல்லாவிட்டால் வர்ணம் உண்டாகாது.

சாற்றுகிறேன் தங்கமது பலமுங் கால்தான்
சமத்தான சூதமது பலமுங்கால்தான்
ஏத்துகிறேன் ரெண்டு மொண்ணாய்ரேகித்தேதான்
இதமான கல்வத்திலிட்டுக் கேளு
மாத்துமே சூடனொரு களஞ்சு போட்டு
மாசத்த கெந்தியது களஞ்சு போடு
ஆத்துமே வீரமது களஞ்சு போடு
அழகான பூரணமொரு களஞ்சிதானே (225)

தானான குவையெல்லாம் ஒக்கப்போட்டு
தருவான நாதவிந்தால் சாமமாட்டி
தேனான வில்லை கட்டி ஓட்டில் மூடி
சிறப்பான அஞ்செருவில் புடத்தைப் போடு
கோனாக யெடுத்துப்பார் கல்வத்திட்டு
கோரோசனையும் புழுகுமொருகளஞ்சிதான்
பானான தேன் முலைப்பால்விட்டு ஆட்டி
பாக்களவு உண்டைசெய்து நிழலுலர்த்தே (226)

உலர்ந்த.... உ .. ல ... வைத்துக்கொண்டு
உறுதியாய் வேதை முகமுருகும் போது
அலர்ந்ததொரு உண்டை தன்னை முன்னேதாக்கு
அதின் .... கு . . . . ாட அதீதமாகும்
அல . . . தரவே உங்களுக்காய் சொன்னேன்பாரு
நாடாத கருவப்பா கோசபீசம்
குலந்தனக்கு கோடாலிகை போலப்பா
கூறினேன் சத்துருவு மித்துருவும் பாரே (227)

---

225. தங்கம் கால் பலம், சூதம் கால் பலம் ஒன்றாய் ரேசித்து சூடம், கெந்தி, வீரம், பூரணம் வகைக்கு களஞ்சு போட்டு,

226. நாத விந்தால் ஒரு சாமம் ஆட்டி வில்லை தட்டி ஓட்டில் மூடி ஐந்து எருவில் புடமிடவும். பிறகு கல்வத்தில் இட்டு புனுகு ஒரு களஞ்சு சேர்த்து தேன் முலைப்பால் இட்டு ஆட்டி பாக்களவு உருண்டை செய்து உலர்த்தவும்.

227. வேதை முகம் உருகும் போது இந்த உருண்டையை தாக்கினால்................கோச பீசமே கருவாகும்.

பாரப்பா பரியோடு சூதம் ரெண்டும்
பாங்கான கோசமுடன் வீசமாச்சு
ஊரப்பா மத்த சரக்காறு கேளு
உத்ததொரு யினமாச்சு உறுதியாச்சு
ஆரப்பா தேன் முலைப்பால முதமாச்சு
ஆதிவஸ்து மனாதிவஸ்தும் சேர்ந்ததாலே
ஊரப்பா இதைவிட்டால் வேதை போச்சு
கண்டுப்பா ரின்னூல்தான் கண்ணாடியெண்ணே (228)

அஷ்டமா சிங்கி

எண்ணவே அஷ்டமா சிங்கி சொல்வேன்
இதமான அறுபத்து நாலுமாட
பண்ணவே சரக்கெல்லாம் கட்டிப்போகும்
படுமுன்னே சூதமது மணிபோலாடும்
தண்ணவே தாரேசத்தில்லை யோடும்
சமத்தான திருக்கள்ளி சதுரத்கள்ளி
தன்னவே கொடிக்கள்ளி யெருக்கம்பாலும்
கடிதான புங்கம்பால் மரத்தின் பாலே (229)

பாலென்ற யெட்டுவகை சமனாய்க் கொண்டு
படியொன்று அளந்து வைத்து பாங்காய்க்கேளு
கேலென்ற யெட்டிவேர் மாவிலங்கி
சிறப்பான கருங்கொடு வேலிவேரும்
காலென்ற ஆயிலிய பட்டையோடு
கடிதான வேலிப்பருத்தி வேரும்
ஏலென்ற யெள்ளுக்காய் வெள்ளையோடு
விதமான நாய்க் கோட்டான் யெட்டுங்கேளே (230)

---

228. தங்கம், சூதம் இரண்டும் கோசபீசம். மற்ற சரக்குகள் அதன் இனம். தேன் மூலைப்பால் அமுதமாகும். ஆதி வஸ்து அனாதி வஸ்து என்ற முப்பூ சேர்ந்தால் வேதையாகும்.

229. இனி அஷ்டமா சிங்கி சொல்வேன். இதில் அறுபத்து நான்கு சரக்கும் கட்டும். சூதம் மணியாகும். திரிகுக்ள்ளி, சதுரக்கள்ளி. கொடிக்கள்ளி, எருக்கம் பால், புங்கம்பால், தில்லைப்பால்…… ………

230. முதலிய எட்டுவகை பா்லும் வகை ஒன்றுக்கு ஒருபடி அளந்து வைத்து எட்டிவேர், மாவிலங்க வேர், கொடி வேலி வேர், ஆயில் வேர் பட்டை, வேலி பருத்தி வேர், எள்ளுக்காய்வேர், வெள்ளை வேர், நாய்க் கோட்டான் வேர் என்ற எட்டுவகை வேர்ப்பட்டையை,

கேளென்ற யெட்டுவகை வேறுபட்டை
கெடியாக சமபாக மிடித்துலர்த்தி
வேலென்ற குழித்தைல மிறக்கியேதான்
விதமான படியொன்று அளந்து வைத்து
தானென்ற வித்துவகை சொல்லக்கேளு
சாதகமாய் எட்டிவித்து செங்கொட்டைவித்து
ஆளென்ற பேய்ப்பீர்க்கின் வித்தினோடு
அப்பனே அழிஞ்சுவித்து நேர்வாளவித்தே (231)

வித்தான ஆனையிட நெறிஞ்சி வித்து
விதமான களஞ்சிவித்து வெண்குண்ணிவித்து
அத்தான இவையெல்லாம் சமனாய் சேர்த்து
அதட்டியே யெடுத்து நன்றாய் கல்வத்திட்டு
பத்தான பூ புடத்தில் தைலம் வாங்கி
பாவகமா படியளந்து வைத்துக் கொண்டு
சித்தாக கோழியுடன் வெள்ளாடு பண்ணி
சிறப்பான யெலியோடு வெளவாலாமே (232)

ஆமென்ற மாடப்புறாவி னெச்சம்
அளவான நாயிகர்கூஷ்டம் வெளுப்புங்கூட்டி
தாமென்ற மனுடனனுடன் எட்டுங்கேளு
சாதகமாய் மலமெல்லாம் சமனாய் தாக்கி
காமென்ற அண்டவெள்ளை வற்கம்பாலும்
கலந்தரைத்து வில்லைதட்டி காயப்போட்டு
போமென்ற பூப்புடத்தில் தைலம் வாங்கி
புகழாக படியொன்று அளந்து வையே (233)

---

231. சமபாகம் இடித்து உலர்த்தி குழித்தைலம் இறக்கி ஒரு படி அளந்து எடுத்து எட்டி வித்து, செங்கொட்டை வித்து, பேய் பீர்க்கு வித்து, அழிஞ்சில் வித்து, நேர்வாழ வித்து,

232. ஆனை நெருஞ்சு வித்து, களஞ்சு வித்து, வெண் குண்ணி வித்து இவை சமனாய் சேர்த்து இடித்து தைலம் வாங்கி அளந்து வைத்து,

233. கோழி, வெள்ளாடு, பன்றி, எலி, வெளவால், மாடப்புறா, நாய், மனிதன் ஆகிய வற்றின் மலம் என்று பரிபாஷையாய் கூறப்பட்டதை குருவினால் அறிந்து, எடுத்து வெள்ளெருக்கு சயநீரால் அரைத்து வில்லைதட்டி காய வைத்து தைலம் வாங்கி படி ஒன்று எடுத்துக் கொண்டு

வைத்துமே யுப்புவகை யெட்டும்கேளு
    வாகான கல்வத்தில் விட்டுக் கொண்டு
அத்துமே தேசிநீர் விட்டு ஆட்டி
    அதீதமாய் புடம்போட்டு சுன்னமாக்கி
யுத்துமே கால்வாசி சாரம் சேர்த்து
    உற்பனமாய் பனியில் வைக்க செயநீராகும்
கத்துமே படியொன்று அளந்து வைத்து
    கடையிலுள்ள சரக்கை நீ கசந்து கேளே (234)

கசந்துகேள் கார்முகியும் கெவுரி வெள்ளை
    கடிதான வீரமொடு தாரம் கெந்தி
விசிந்து கேள் சாதிலிங்கம் சிலையோடெட்டும்
    விபரமா சமபாகம் நிறுத்துக் கொண்டு
வசிந்துகேள் கல்வத்திலிட்டு நீயும்
    வளமான குறுவண்டு கோட்டுப் பூச்சி
அதிந்துவிடும் கேள்க்காலி கொடுக்கினோடு
    அறபுள்ளி புலிநகமும் முசார முட்டையெண்ணே (235)

முட்டையாம் பேருஞ் செய்யான் யெட்டுங்கேளு
    முனையான சமபாகம் நிறுத்துக் கொண்டு
கட்டியே கல்வத்தில் ஒக்கவிட்டு
    கடியதொரு செயநீரால் சாமமாட்டி
தட்டியே மூன்றுவகை தைலத்தாலும்
    தனித்தனியே முச் சாமமாட்டித்திரு
பட்டிடவே பாலாலே சாமமாட்டு
    பக்குவமாய் குழம்புபோல வழித்து வாங்கே (236)

---

234. எட்டுவகை உப்புகளையும் தேசி நீறு விட்டு ஆட்டி, புடம் போட்டு சுண்ணமாக்கி சாரம் சேர்த்து பனியில் வைக்க செய நீராகும். இதில் ஒரு படி அளந்து வைத்துக் கொள்ளவும்.

235. கார் முகில் பாடாணம், கவுரி, வெள்ளெய், வீரம், காரம், கெந்தி, லிங்கம், மனோ சிலை ஆகியவற்றை சமபாகம் நிறுத்து கல்வத்தில் இட்டு குருவண்டு, கோட்டு பூச்சி, தேன் காலி, தேள் கொடுக்கு, அறுபுள்ளி வண்டு, புலி நகம், முசுறு முட்டை, செய்யான் முட்டை,

236. என பரிபாஷையாக கூறப்பட்ட பொருள்களை எடுத்து கல்வத்தில் இட்டு எல்லா வற்றையும் சேர்த்து மூன்று வகை தைலத்தாலும் ஒரு சாமம் ஆட்டி குழம்பு பதத்தில்,

வாங்கியே பீங்கானில் வைத்துக் கொண்டு
வளமான செவிநஞ்சு அரவின்நஞ்சு
தேங்கியே புழுகொடு வெள்ளுரமும் பூரம்
சிறப்பான வழலையொடு கருநாபி சூடன்
பாங்கியே இவையெட்டும் சமனாய்விட்டு
பவகமா யரவிவேர் கொண்டு மத்தி
தாங்கியே தாய்பதத்தில் வைத்துப்போத்து
சமத்தான பரணிதனிலடைத்திடாயே (237)

அடைத்திடவே அஷ்டமா சிங்கியாகும்
அணுவளவு தொட்டிட்டா லண்டரெண்டம் நீரும்
கடைத்திடவே சரக்கையெல்லாம் கட்டிக்கொல்லும்
கண்டவுடன் சூதமது தெண்டன்பண்ணும்
விடைத்திடவே மாரணத்துக்காதி பீடம்
வெகுசுருக்கு வெகுசுருக்கு விள்ளார் சித்தர்
படைத்திடவே சாஸ்திரத்தில் மறைத்து வைத்தார்
பயனறிய உங்களுக்காய் பகர்ந்திட்டேனே (238)

பகர்ந்திட்டேன் சித்தருடன் வாது பேசி
பரிவான ஆத்தாளை கேட்டு கேட்டு
அகத்திட்ட பிள்ளைகளே பிழைக்கவென்று
அறியாத கருவை யெல்லா மறியச்சொன்னேன்
இகழ்ந்திட்டு வீணே நீ திரிய வேண்டாம்
யென்னா....ன நோக்கறிந்து பொருளைப்பாரு
யுகத்திட்டு விந்துநிலை பத்தியேறு
உத்தமனே பொருளோடு அருளும்பாரே (239)

---

237. பீங்கானில் வைத்துக் கொண்டு செவி நஞ்சு, அரவு நஞ்சு, புணுகு, வெள்ளுரம், பூரம், வழலை, கருநாபி, சூடம் இவற்றை சம எடை எடுத்து .... வேரினால் மத்தித்து தாய்பதத்தில் வைத்து போற்றி பரணியில் வைப்பாயாக!

238. இதுவே அஷ்டமா சிங்கியாகும். அணு அளவு தொட்டால் அண்டா அண்டம் நீறும். சரக்குகள் எல்லாவற்றையும் கட்டும். சூதம் கெஞ்சிக் கட்டும். வெகு சுருக்கான வித்தையில்,

239. சித்தருடன் வாது பேசி தேவியை கேட்டு இதைத் தெரிவித்தேன். விந்து நிலையில் இருந்து இதைப் பற்றுவாயாக

தாம்பரசுத்தி

அருளான தாம்பரத்தின் சுத்தி சொல்வேன்
அப்பனே தாம்பரந்தான் பலந்தானொன்று
மருளாதே தேசிநீர் தன்னில் போட்டு
மைந்தனே யெட்டுநாளூர வைத்து
வெருளாதே புளிநடலை கிளங்குச் சோறு
மேவியதோர் பழச்சாரும் யெருமை மோரும்
அருளான இவை மூன்றும் சமனாய்க்கொண்டு
அப்பனே படிமூன்று அளந்து வாரே (240)

அளந்துமே கொடுக்காயின் பலந்தானொன்று
அதீதமாய் கருங்குண்ணி பலந்தானொன்று
இளந்துமே புளிப்பெருக்கு பலந்தானொன்று
இதமான சாரமொன்று கல்சுண்ணமொன்று
செழுந்துமே தூளாக்கி யிடித்து நன்றாய்
சிறப்பான முன்சாற்றில் கலக்கிடாயே (241)

கலக்கியே தயிர்போல கலக்கிக் கொண்டு
கனமான தாம்பரத்தை குகையிட்டு
கலக்கவே யேழுதர முருக்கிச் சாய்க்க
நாறுகின்ற வூரலெல்லாமத்துப் போகும்
பிலக்கவே யிச்செம்பில் வேதையிட்டால்
பிலமான மாத்துயரும் வர்ணங்காணும்
துலக்கவே தாம்பரத்தின் சுத்தி தன்னை
சொல்லிவிட்டேன் சூட்சாதி சூட்சமாமே (242)

---

240. இனி தாமிரத்தில் சுத்தி சொல்வேன். தாமிரம் ஒரு பலத்தை தேசி நீரில் எட்டு நாள் ஊறப்போட்டு, புளி நடலை கிழங்குச்சாறு, பழச்சாறு, எருமை மோர் ஆகியவை சமன் கலந்து,

241. கொடுக்காய் புளி, கருங்குண்ணி, புளிப்பெருக்கு, சாரம், கல் சுண்ணம் ஆகியவை சேர்த்து முன் சாற்றில் கலக்கி,

242. தாமிரத்தை உருக்கி சாய்க்க ஊறல் அற்று போகும். தாமிரசுத்தியை மிகவும் சூக்சுமமாக சொல்லிவிட்டேன்.

வெண்காரக் கட்டு

சூட்சமாம் வெண்காரக்கட்டுச் சொல்வேன்
துடியான வெண்காரம் பலந்தானொன்று
காய்ச்சுமே ஆவெருத்தின் சாணியாலே
கழுவியெடு நன்றாக கருதக்கேளு
பாய்ச்சுமே ஆதளையின் பாலை யூட்டி
பக்குவமாய் மூன்று நாளூறப் போட்டு
ஆச்சுமே முன்போலே கழுவிப்போட்டு
அப்பனே சுத்தியா மறையக்கேளே (243)

கேளப்பா வெடியுப்பு செயநீர் தோய்த்து
கெடியான ரவிதனிலே உலரப்போட்டு
நாளப்பா ஏழுநாள் தோய்த்துத் தோய்த்து
நலமாகப் போட்டுவா பாகமாக
தாளப்பா வெண்காரம் கட்டிப்போகும்
தங்கமென்ற றேக்கையதன் மேலே சுத்தி
வாளப்பா ரோமமது பொதிந்து மேலே
வளமான கரியோட்டில் முதிரவாட்டே (244)

வாட்டிடவே ரோமமெல்லாம் கருகுமட்டும்
வளமான பரியதுவும் உள்ளே வாங்கு
நாட்டிடவே தங்கயிடை சூதங்கட்டி
நலமான கெந்தியிட்டு யுருக்கி வாங்கி
ஆட்டியே வெடியுப்பு பலமுங் கால்தான்
அப்புறக வெள்ளையது பலமுங்கால்தான்
சூழவே வழலையுடன் கல்வத்தாட்டி
துடியான மணிதனக்குப் பூசு பூசு (245)

---

243. இனி வெண்காரகட்டு சொல்வேன். வெண்காரம் ஒருபலம். எருதுச் சாணிப் பாலால் நன்றாக கழுவி, ஆதளைப் பாலில் மூன்றுநாள் ஊறப்போட்டு கழுவி,

244. வெடிஉப்பு சய நீரில் தோய்த்து ஏழு நாள் உலர்த்த வெண்காரம் கட்டும். அதன்மேல் பரித்தகட்டைச் சுற்றி ரோமத்தில் பொதிந்து,

245. ரோமம் கருக வாட்டினால் வெண்காரம் பரியை உள்ளே வாங்கும். இதன் எடைக்கு சூதம், கெந்தி இட்டு உருக்கி வெடிஉப்பு, அப்பிரக வெள்ளை, வழலை ஆகியவற்றை அரைத்து மணியில் பூசி,

பூசியே சட்டியிலே மணலையிட்டு
புகழான மணியெடுத்து நடுவே வைத்து
ஆசுவா யதன்மேலே மணலையிட்டு
அமுத்தியே மேல்மூடி அடுப்பிலேற்றி
நேசியே கமலம் போல் பன்னிரண்டு சாமம்
நிதமாக யெரியவிட்டு ஆத்தி வாங்கு
மாசுதான் மாதளம்பூ வர்ணம் போலே
மைந்தனே செந்தூரமாகும் பாரே (246)

ஆகியதோர் செந்தூரம் நவலோகத்தில்
அணைத்திடவே ஆயிரத்துக்கோடும் பாரு
ஆகியே செந்தூரம் சூதத்தூட்ட
அம்மம்மா சூதமது கட்டிப்போகும்
ஆகியே சூதத்தில் சாரணையே செய்ய
அரைக்ஷணத்தில் அண்டரெண்டம் தாண்டியோடும்
வேகியே சூதத்தில் தங்கம் கூட்டி
விதமான கெந்தியிட்டு வேதைபாரே (247)

வேதையாம் சரக்கான தறுபத்து நாலும்
வெருளாதே சார கட்டுண்டு மணியுமாகும்
காதையா முபரசங்கள் சத்துமாகும்
கசடான நவலோகம் கண்விட்டாடும்
பாதையே கோடிடவே காய சித்தி
பரிவான வாதசித்தி யோகசித்தி
வாதியே யெட்டெட்டும் சித்தியாகும்
வளமான வெண்கார போக்குத்தானே (248)

---

246. ஒரு சட்டியில் மணல் நடுவே மணியை வைத்து மேல் சட்டி மூடி அடுப்பேற்றி கமலாக்கினியாய் பனிரண்டு சாமம் எரித்தால் மாதுளம்பூ போன்ற செந்தூரமாகும்.

247. செந்தூரத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு நவலோகத்திற்கு தந்தால் மாற்று ஆகும். சூதம் கட்டும். தங்கம் கூட்டி கெந்தியிட்டு செந்தூரித்து வேதை செய்யலாம்.

248 அறுபத்து நான்கு சரக்குகளும் கட்டிய வெண்காரத்தால் கட்டும். உபரசங்கள் சத்தாகும். நவலோகம் உருகும். காயசித்தி, வாதசித்தி, யோகசித்தி உண்டாகும்.

தங்க பற்பம்

போக்கான யினமொரு தங்க பற்பம்
புகலுவேன் மாணாக்காள் புகலக்கேளு
தாக்கான தங்கமொரு பலமே தூக்கி
சாதகமா யிலைபோலே தட்டிக்கொண்டு
பார்க்கவே சவ்வீரம் புனுகு பூரம்
பரிவான வழலையோடு சூதங் கூட்டி
ஆர்க்கவே வாய்நீரா லரைத்துப் பூசி
அண்டோட்டி லிட்டி மேலோடு மூடே (249)

மூடியே பத்தெருவில் புடத்தைப் போடு
முசியாதே நீரும் பின்னெடுத்துப்பாரு
ஆடியே பராபரப குருவுமானாலாகுந்
தன்னறியாரே சொல்வதென்ன
பாடியே நவலோகம் பரிசித்தாக்கால்
பழுக்குமே ஆசுவாயி பகராதென கொஞ்சம்
ஊட்டியே தினம் பணந்தானுண்ணுயுண்ணு
உத்தமனே திரேகமது கற்பாந்தமெண்ணே (250)

கற்பாந்த திரேகமாக மாகுமென்றால் கருவைக்கேளு
கண்ணாடி வட்டத்தி னொளியைப்பாரு
கற்பாந்திரமாக வென்றால் கர்மங்கொள்ளு
கனமான பூரணத்தில் கற்ப முண்ணு
கற்பாந்திரமாக வென்றால் கலைக்கட்டு
கன்னியர் மேலாசை விட்டு குகையைக்காரு
கற்பாந்திரமாக வென்றால் தாயைப் பூசி
காரணமாம் பிறபஞ்ச மாய்கை நீக்கே (251)

---

249. தங்கம் ஒருபலம் எடுத்து இலைபோல தட்டிக்கொண்டு சவ்வீரம், புனுகு, பூரம், வழலை, சூதம் ஆகியதற்றை வாய் நீரால் அரைத்து பூசி அண்ட ஓட்டில் இட்டு மேல் ஓடு மூடி,

250. பத்து எருவில் புடமிட்டால் நீரும். இதனால் நவலோகம் மாற்று ஆகும். தினமும் பண எடை உண்டால் தேகம் கற்பாந்த காலம் நிற்கும்.

251. கற்பகாலம் இருக்க வேண்டுமானால் கண்ணடி வட்டமாகிய விந்துவின் ஒளியை பார்க்கவேண்டும். பூரண கற்பத்தை உண்டு வாசியை கட்டவேண்டும். கண்ணியர் ஆசையை விட்டு மலை குகைகளில் தங்கி தாயை பூசித்து தவம் செய்ய வேண்டும்.

நீக்கவே வாதமுறைக் கருவை யெல்லாம்
நிகழ்த்தினேன் அஷ்டகர்மம் நிலைக்கச் சொன்னேன்
தாக்கவே எட்டெட்டு கர்மத்துக்கும்
சாற்றுகிறேன் அட்சரமும் சக்கரமும்
ஆர்க்கவே ஆதாரமாறுக் குள்ளே
அமந்ததொரு அஞ்செழுத்தும் எட்டும்ரெண்டும்
தீர்க்கமாய் பன்னிரண்டு எண்பத் தொன்றும்
சிக்கிநின்ற மூலமொன்று திறந்திட்டேனே (252)

ஊக்கருவிற்கரு

திறந்திட்ட கருவென்றா லெல்லாம் மைந்தா
செப்பவில்லை வெளிதிறந்து செப்பக்கேளு
அரைந்திட்ட உட்கருவும் பிறக்கருவும் பாரு
ஆகாச வெளிக்குள்ளே அமர்ந்ததப்பா
கரந்திட்ட ரெண்டு மொண்ணாயி ரேகித்தேதான்
கருவாகி யுருவாகி கருஞ்சூலாச்சு
பிறந்திட்ட பிண்டத்தை வாங்கி மைந்தா
பேசாதே நிழலுலர்த்திப் பதனம் பண்ணே (253)

அடிமுடி

பண்ணவே அடிமுடியும் அண்ட பிண்டம்
பரிவான ஆதியந்தம் விந்து நாதம்
விண்ணவே சொன்னதெல்லா மாறுவொன்றாச்சு
விள்ளாதே உலர்ந்ததே விள்ளார் சித்தர்
கன்னவே சாஸ்திரங்களனேகத் துள்ளே
கட்டினார் காதலையாய் கருச்சொல்லாமல்
நன்னவே குருவான குருவைத் தொட்டு
நாட்டனா அஷ்ட கர்ம மாடுந்தானே (254)

---

252. வாதத்தின் கரு, அஷ்டகர்மம், அறுபத்துநான்கு சித்திகள், அட்சரங்கள், சக்கரங்கள், ஆறு ஆதாரங்கள். அதற்குள் அமர்ந்த ஐந்து எழுத்துக்கள் எட்டும் இரண்டும் இன்னதென்ற விபரம் பனிரண்டு தலங்கள் ஐம்பத்தொன்று அட்சரங்கள் ஆகியவற்றை வெளிப்படையாக சொல்லியிருக்கிறேன்.

253. மறைமொழியாக சொல்லப்பட்ட உட்கரு, பிறக்கரு ஆகியவற்றை உணர்ந்து எடுத்து நிழலில் உலர்த்தி பதனம் செய்வாயாக.

254. அடி முடி, ஆதி அந்தம், அண்ட பிண்டம் என்பது விந்து நாதமே ஆகும். இதை கால் தலையாக சித்தர்கள் மறைவாக கூறியிருக்கின்றனர். இதனை குருவாக்கியத்தால் அறிவாயாக! அஷ்டகர்மம் அப்போதுதான் நிலைக்கும்.

ஆடுகிற கர்மத்துக் காதியென்ன
அப்பனே கருவோடு குருவும் வேணும்
தேடுகிற சிவம்வேணும் தியானம் வேணும்
செப்பரிய சாபத்தின் நிவர்த்தி வேணும்
நாடுகிற கரணியாசம் ஓமம் தற்பணம்
நலமான சோட்சமாம் பூசைவேணும்
மூடியதோர் கருவெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
மூசத்த விடங்கண்டா லொன்றாய் போமே (255)

போமென்ற தம்பனமும் வசிய மோகம்
புகழான பேதனமு மாரணமு மொன்றாய்
நாமென்ற திருச்சினமும் விறி... சனமும்
நலமான உச்சாடனமும் நாட்டினார்கள்
வேமென்ற அஷ்ட கர்மம் மெட்டெட்டுந்தான்
விரைந்தொன்றா யாடுதற்கு விபரங்கேளு
ஆமென்ற உடல் சக்கரத்தைக் கீறி
அப்பனே அட்சரங்க ளறிந்து போமே (256)

பீசாட்சர சக்கரம்

போடவே அடிமூலம் ஓங்கார வட்டம்
புகழான நாற்கோணம் நகாரம் போடு
தேடவே பிறகோணம் மகாரம் போடு
சிகாரமிடு அதன்மேலே கீழ்முக்கோணம்
வாடவே கண்டத்தில் வகாரம் போடு
வளமான சதாசிவனில் யகாரம் போடு
கூடவே அவரவர்கள் பே....விபீசம்
கூறுகிறேன் முந்தி முந்தி வெளியைப்பாரே (257)

---

255. அஷ்ட கர்மத்திற்கு ஆதியாகிய கருவும், குருவும் அருள்குருவால் தெரியவேண்டும். சிவபெருமானை தியானம் செய்யவேண்டும். சாப நிவர்த்தி அறிய வேண்டும். கரணியாசம், தர்ப்பணம், பூசை யாவும் மூச்சற்ற இடம் கண்டால் ஒன்றாய் போகும்.

256. தம்பணம், வசியம் முதலிய அஷ்டகர்மங்கள் ஆடுதற்கு விபரம் கேட்பாயாக! சக்கரத்தை வரைந்து அட்சரங்கள் போட வேண்டும்.

257. அடி மூலம், ஓங்காரவட்டம் நாற்கோணத்தில் நகாரம் போடுவாயாக! பிறை கோணத்தில் மகாரம், முக்கோணத்தில் சிகாரம் கண்டத்தில் வகாரம், சதாசிவனில் யாகாரம் போடுவாயாக! இதற்கே பீஜாட்சரம் கூறுகிறேன் கேட்பாயாக!

வெளியான சதாசிவத்தில் சொல்லக்கேளு
மேவியே யிடபாகம் அரி ஓமென்று
ஒளியான மகேஸ்வரனில் அரிஓம் ஸ்ரீ யென்றூணி
உத்துனின்ற ருத்திரனில் சவ்வென்றேதான்
தெளிவான மால்வீட்டில் நீலி ஓமென்று
திஷ்டிக்கும் பிரம்மனிலே ஐயென்றோது
நளியான குண்டலியில் ரீங்கார பீசம்
நாட்டுவா யரைக்கொன்று நலமாய்தானே (258)

நலமான மூலத்தி லிதழுநாலு
நன்னிலஞ் சேர்சதிரங்கோணத்தாறும் போடு
சிலமான பிறகோண மிதழ்தான் பத்து
சிகரமாய் தீக்கோணம் பன்னிரெண்டாம்
பிலமான ஆறுகோணத்திதளீரெட்டாம்
பேசரிய கண்டத்தே ரண்டதாகும்
குலமான ஆகாச வெளியாலொன்று
கூறினேன் மாறாயா கூறினேனே (259)

கூறான யிதழ்தானு மன்பத்தொன்று
கூர்ந்து நின்ற அட்சரத்தில் குறியைக்கேளு
பேரான வெளிகடந்து வெளியிக்குள்ளே
பேசாத பொருளப்பா பேணிப்பாரு
ஆறானத்தின் கீழே ஆதார வீடு
ஆங்கார நெத்தியென்று அறிந்துபாரு
தாறான உகாரமுடன் எழுத்து ரெண்டு
தாறுவான இருகண்மேல் புருவமாமே (260)

---

258. சதாசிவத்தில் இடதுபாகம் ''அரிஓம்'' மகேஸ்வரத்தில் ''அரி ஓம் ஸ்ரீ'' ருத்திரனில் ''சவ்வும்'' மணிபூரகத்தில் ''கிலிஓம்'' சுவாதிட்டானத்தில் ''அய்யும்'' மூலாதாரத்தில் ''ரீங்'' என்று நாட்டுவாயாக!

259. மூலத்தில் நான்கு இதழ், சுவாதிட்டானம் ஆறு இதழ், மணிபூரகம் பத்து இதழ், அனாகதம் பனிரண்டு இதழ், விசுத்தி பதினாறு இதழ், சதாசிவத்தில் இரண்டு இதழ், ஆகாசத்தில் ஒன்று,

260. இதழ் ஐம்பத்தொன்றாகும். இவற்றில் அட்சரங்கள் வெளிக்குள் வெளியாக பேசாத பொருளாக இருக்கின்றன அதனை காண்பாயாக! உகாரமுடன் இரண்டு எழுத்துக்கள் இருகண் புருவங்களாம்.

புருவமாம் நடுவே வைத்தொளியைப் பாரு
புகழான சுழினை யப்பா நெத்திக்கண்ணாம்
புருவமா மக்கினிக்கண் கண்டால் மோட்சம்
பொரியோடு யுலன்பொறும் பொறுத்தும்ஞானம்
புருவமாம் சூட்சத்தை யறிய வென்றால்
பூட்டினேன் ஞானவழி அன்னூறுக்குள்ளே
சுருப்பமா மூலமொடு கொங்கணரும் சற்றே
சொல்லாமற் சொல்லி வைத்தார் சூட்சம்பாரே (261)

சூட்சமாய் மற்றமற்ற சித்தரெல்லாம்
சொன்னதுவும் பழுதொன்றும் சொல்ல வேண்டாம்
சூட்சமா மகத்தீசர் ஆயிரத்தில் சொன்னார்
சுழிமேவுங் கருவதனை காணலாகும்
சூட்சமாம் சூட்சத்தை இன்னங் கேளு
சொல்லுகிறேன் புருவத்தின் கீழே மைந்தா
சூட்சமாய் அகாரமுடன் உகாரமுடன் ரீங்கார மிரண்டும்
சொல்லடா யிடக்கண் வலக்கண்ணதாமே (262)

கண்ணதாம் அகாரமுடன் உகாரம் ரெண்டும்
கருதியே யிடச்செவியும் வலச்செவியும் போடு
பண்ணவொரு உகாரமுடன் ஓங்காரம் ரெண்டும்
பரிவான வலமூக்கு மிடமூக்குமாகும்
நண்ணவொரு அகாரமுடன் ஓங்காரம் ரெண்டும்
நாட்டியே இருகண்ணும் நன்றாய்ப்பாரு
பண்ணாக அகாரமுடன் யகாரம் ரெண்டும்
பகருவேன் கீழ்வாயின் மேலுதடு ரெண்டே (263)

---

261. புருவ நடுவே சுழுமுனை அதில் அக்னி உள்ளது. இதைக் கண்டால் மோட்சம். இதன் சூட்சத்தை இந்நூலில் சொல்லியுள்ளேன் கொங்கணரும் தன்னுடைய நூலில் சொல்லாமல் சொல்லி வைத்தார்.

262 அகத்தீசர், ஆயிரத்தில் இதனை சூட்சுமமாய் சொல்லி வைத்தார். புருவத்தின் கீழே அகாரமுடன் ரீங்காரம் இரண்டும், இடக்கண் வலக்கண்ணாகும்.

263. அகாரம் உகாரம் இடச்செவி வலச் செவியாகும். உகரமுடன் ஓங்காரம் இரண்டும் வலமூக்கு இடமூக்காகும். அகாரம் யகாரம் இரண்டும் இரு உதடுகளாகும்.

இரண்டாகும் உகாரமுடன் ஓங்காரம் ரெண்டும்
நிறைந்த யிரு வாயிலுள்ளே தந்தமாச்சு
ஒன்றாகும் அம்மென்றும் பிசரிகண்டம்
உச்சியிலே ஆக்கனவன் ஊனுஊணு
கண்டதொறு அரிஓமென்ற ரீங்காரத்தோடு
காணவே சித்திரியம் அக்கனவன்றூணும்
பண்டுள்ள பேர்களா லறியப்போமோ
பகரரிய சுழினையிலே பகர்ந்தவாறே (264)

பகரவே வலக்கரந்தான் நகாரம் நாலு
பரிவுடைய விரலைந்து மிகாரம் மைந்தா
பகரவே யிடக்கரம்தான் சகாரம் நாலு
பரிவுடைய விரல் ஐந்தும் ஞகாரம் பாரு
பகரவே வலக்கரந்தா னகாரம் நாலும்
பகர்ந்த விரல் ஐந்துக்கும் நகாரம் போடு
பகரவே யிடக்கால்தான் தகாரமாகும்
பரிவுடைய விரலைந்தும் நவ்வைந்தாமே (265)

ஐந்தாகும் வலது விலாபகாரமாச்சு
அப்பனே யிடது விலா மகாரமாகும்
உய்ந்தாகுங் குலையதாம் யகாரமாச்சு
யுதரமாங் கீழ்வயிறு லகாரமாச்சு
நந்துக்கு முந்தியிதே மகாரமாச்சு
நாட்டினார் லிங்கத்தில் யகாரபிசம்
நைந்தாகும் மூலத்தில் யகாரமாச்சு
ஆதியாம் போய் குதத்தில் லகாரமாமே (266)

---

264. உகாரம் ஓங்காரம் இரண்டும் பற்கள் ....

265. வலக்கரம் நகாரம் நான்கு. விரல் ஐந்தும் இகாரம். இடக்கரம் சகாரம் நான்கு. விரல் ஐந்தும் ஞகாரம். வலக்கால் னகாரம் நான்கு. விரல் ஐந்துக்கும் நகாரம். இடக்கால் தகாரம் நான்கு. விரல் ஐந்தும் நகாரம்.

266. வலது விலா பகாரம். இடது விலா மகாரம். நெஞ்சு யகாரம். கீழ் வயிறு லகாரம். உந்தி மகாரம். லிங்கம் யகார பீஜம். மூலத்தில் அகாரம். குதத்தில் லகாரம்.

ஆமென்ற வலமுலையில் பகாரம் போடு
அழகான யிடமுலையில் சகாரம் போடு
போமென்ற மார்நடுவில் ளகாரம் போடு
புகழான நகாரங் கண்டித்துக்குழியிலூணு
நாமென்ற காரமது நெத்திமேல்
நலமான கங்கங்நென்ற உச்சியிலேபோடு
ஆமென்ற அகாரமதில் சிகாரமட்டும்
அன்பத்தோ ரெழுத்துத் தானறிந்து கொள்ளே (267)

கொள்ளவே கண்டத்தின் மேலாறும் சொன்னோம்
குறிப்பான மகேஸ்வரனா மறுகோணத்தில்
மெள்ளவே சரவணத்தின் ஆறும்போடு
விதமான ருத்திரனில் யேகமூலம்
தள்ளாத மகாரத்தின் தசம மூலம்
தருவான நகாரத்தில் கேசரியாம் மூலம்
கொள்ளவே கணேசனிலே வெளியாம் மூலம்
கருவதுவாம் ஓம்அம்ஸ்ரீங் அங்கங்கணபதியே
நமாவென்றூணே (268)

உண்ணவே யவரவர்கள் பீசங் கேளு
உத்தொரு அடியிலே மூலபீசம்
உண்ணவே பிரிதியிவில் பிறிதிவு பீசம்
உத்ததொரு அப்புவியிலே அப்புபீசம்
பூணவே அக்கனியில் அக்கனி பீசம்
உத்ததொரு வாயுவிலே வாய்வுபீசம்
யூணமா யாகாசம் மதுவே பீசம்
உறுதியா யிட்டந்த அட்சரங்கள் நாட்டே (269)

---

267. வலது முலை பகாரம், இடது முலை சகாரம். மார்நடு லகாரம். நெஞ்சுக்குழி நகாரம். நெற்றி மேல் ககாரம். கங் என்ற அட்சரம் உச்சியில் அகாரம் முதல் சிகாரம் வரை ஐம்பத்தொரு அட்சரம். இதை அறிந்து கொள்வாயாக!

268. கண்டத்தின் அறு கோணத்தில் சடாட்சரத்தையும், ருத்திரனில் ஏக மூலத்தையும், மகாரத்தில் தசம மூலத்தையும், நகாரத்தில் கேசரியாம் மூலத்தையும், கணேசனில் வெளி மூலத்தையும், "ஓம் அம் ஸ்ரீங் அங்கங் கணபதியே நமா" என்று ஊனுவாயாக!

269. இனி அவரவர்கள் பீஜாட்சரத்தை கேட்பாயாக! அடி மூலத்திலிருந்து ஆகாசம் வரை அந்தந்த பூதங்களின் பீஜாட்சரங்களை நாட்டுக.

அஷ்டாங்க வாலை

நாட்டவே யிருகரத்தில் சடாக்ஷக்ஷர மூலம்
நலமான முழந்தாளில் சுவாதிஷ்டானம்
நாட்டவே பாதவிரல் கணேசன் பீசம்
நாட்டியே அஷ்டாங்க வாலை சொல்வேன்
நாட்டவே ஸ்ரீங் அங் கிளிங்……
நால் திசையு மஷ்ட தேவதையைக்கேளு
நாட்டாத கண்டனொடு கணேசன் கந்தன்
நலமான வீரபத்திரன் வடுகன்தானே (270)

தானான அஷ்டசத்தி அஷ்டதுரகளாகி
சாமுண்டி மாலினி வராகி சாகி
நானான அஷ்டதிக்குப் பாலரொடு
நாட்டுவாயவரவர்கள் பீசம் போடு
பானான உடலாறு வரைதான் சூழ
பதித்திடுவாய் கிரகமொடு ராசிபன்னிரண்டு
தேனான நட்சத்திர தேவதைகள் பீசம்
சிறப்பான பஞ்ச பட்சி சிறக்கப் போடே (271)

போடப்பா தட்சிணாமூர்த்தி யோடு
புகழான நவசித்தர் மூலம் போடு
ஆடப்பா கைமுறைதான் அறியச் சொன்னேன்
அப்பனே கால்தலையும் சூலம்போடு
நாட்டப்பா இருகரமும் சூலம் போடு
நலமான அஷ்டதிக்கும் சூலம் போடு
வீடப்பா பிலப்பதற்கு உயிரெழுத்தைச் சொல்வேன்
விந்திட்டு வட்டத்துள் ஐயென்றானே (272)

---

270. இருகரங்களில் சடாதார மூலம் முழந்தாளில் சுவாதிட்டானம், பாத விரல் கணேசன் பீஜம் அஷ்டாங்க வாலையாகிய "ஸ்ரீங் அங் கிலிங் . …… சண்டன்" கணேசன், கந்தன், வீரபுத்திரன், வடுகன்,

271. சாமூண்டி, வராகி, அஷ்டதிக்குபலா முதலியோரின் பீஜத்தை எழுதி கிரகங்கள், ராசிகள், நஷத்திர தேவதைகள் ஆகியோரின் பீஜமும் பஞ்சபட்சியின்

272. தட்ஷணாமூர்த்தி நவசித்தர்கள் மூலம் ஆகியவற்றை போடுவாயாக! கால், தலை இருக்கரங்கள் ஆகியவற்றில் சூலம் போடுவாயாக! அஷ்டதிக்குகளும் சூலம் போடுவாயாக! விந்துப் போட்டு வட்டத்தின் நடுவில் ஐ என்னும் அட்ஷரத்தை நாட்டுவாயாக!

ஊணியதோர் சுழியிலே அஞ்செழுத்தின் மையம்
உத்தமனே சக்கரத்தின் மேல் வளையம்ரெண்டு
தோணவே நால்திசையும் நால்வாசல் விட்டு
துலங்கவே வாசலிலே விந்து போட்டு
நாணியே கும்பமது செய்ய வேண்டின்
வாசல் விந்துவுக்குள் நங்கென்றூணு
பூணவே வசியமென்றால் சொல்லக்கேளு
பூட்டுவாய் அம்மென்றே புகழ்ந்திட்டேனே (273)

புகழ்ந்திடவே மோகனத்தில் நம்மென்றுபோடு
பேரான... கருக்ஷணத்தில் வாமென்று போடு
மகிழ்ந்திட்ட பேதனமு மாரணமும் செய்யில்
வளமான மங்கொன்று மாட்டுமாட்டு
இகழ்ந்திட்ட உச்சாடனம் சிங்கென்றூணு
இயம்பிடுவாய் வெசிக்க வம்பெனரேதான்
அகழ்ந்திட்ட யிப்படியே நாலுதிக்கும்
அந்தந்த கர்மத்துக் கறிந்திடாயே (274)

அறிந்திடுவாய் சூட்சத்தில் சூட்சமாக
அடக்கி வைத்த கருவையெல்லாம் வெளியாய் சொன்னேன்
தெரிந்துதான் உங்களுக்காய் சொன்னேன் மைந்தா
செப்பரிய எந்தெந்த நூல் பார்த்தாலும்
இறந்துநீ பிறந்தாலும் என்னைப் போலே
இயம்பார்கள் இன்னமொன்று சொல்லக்கேளு
விரைந்துதான் அட்சகர்ம அத்தகட்டின் மார்க்கம்
விளம்பினார் சுந்தரந் தன்னூலைப் பாரே (275)

---

273. நான்கு திசைகளும் நான்கு வாசலிட்டு விந்துப் போட்டு அதற்குள் நங் என்று நாட்டுக! வசிகத்திற்கு அம் போடுக!

274. மோகனத்திற்கு நம் போடுக! மரணத்திற்கு மங் போடுக! உச்சாடணத்திற்கு சிங் போடுக! இவ்வாறு அந்தந்த கருமத்திற்கு அந்தந்த அட்சரங்கங்களை போடுக!

275. இவற்றை எல்லாம் அருளால் மிகவும் நுணுக்கமாக அறிவாயாக. இனி அஷ்ட கர்மத்திற்கு உரிய தகடுகளை கூறுவேன். இதன் விவரங்களை சுந்தரனாந்தர் நூலிலும் பார்ப்பாயாக!

பாரப்பா அங்குலமுமகல நீளம்
பாடினார் தகடுகளில் எந்திரம் செய்து
சீரப்பா ஐங்காயக் கருவும் பூசி
செப்பியதோர்.... .... கர்மத்துக்கு
போடப்பா அந்தந்த பலகையிலே வைத்து
பேரான ஆசனத்தில் இருந்து கொண்டு
ஆறப்பா பாலோடு பலகாரமன்னம்
அப்பனே வஸ்தோடு சுத்திவையே (276)

அஷ்ட கர்மம் எட்டுக்கு அட்சரம்

சுத்தியாய் தீபமொடு தூபம் காட்டி
சுகந்தாதி களபகந்தம் சொர்ண புஷ்பம்
முத்தியாம் சமுதையொடு ஓமதற்பணம்
முறையோடே அஷ்டதிக்கும் பந்தனம் செய்து
அத்தியாம் கரணியாசங் மங் கன்னியாசம்
அப்பனே பிராணயாமம் பரணித்து
புத்தியாம் சடாசர உபசாரத்தோடே
புகழான முப்பொலியும் பூசை செய்யே (277)

செய்யவே நமசிவாய தம்பனமாகும்
செப்பரிய வசியநம சிவாயமாகும்
உய்யவே சிவாயநம உச்சாடிக்க
உத்ததொரு வசிமநய அழைப்புக்காகும்
இய்யவே பேதனமாம் மநயவசிலென்ன
மெய்யடா நயவசிம மோகனமுமாகும்
நையவே உபநயனத்தில் வித்துவேசிக்கும்
நாடாதே மாரணத்தில் மசிவயனலென்றே (278)

---

276. தகடுகளில் பரிபாஷை உணர்ந்து ஐங்காயக் கரு பூசி உரிய நைவேதீன் வைத்து

277. தீப தூபம் காட்டி சமித்து முதலியவற்றால் ஓமம், தர்ப்பணம் ஆகியவை செய்து பூசை செய்க

278. நமசிவய தம்பணம் ஆகும். வசியநம வசிகமாகும். சிவயநம உச்சாடணம் ஆகும். வசிநமய அழைப்புக்கு ஆகும். மநயவசி பேதனம் ஆகும். நயவசிம மோகன மாகும். மசிவயந மாரணம் ஆகும்.

என்னவே சக்கரத்தைச் சொல்லக்கேளு
இயல்பாக இப்படியே யெழுதியோதி
உன்னியே வாலையுடன் யெழுத்துங்கூட்டி
ஓதவே எட்டெட்டு சித்துமாகும்
அன்னவே ஒவ்வொன்றாய் கர்மத்துக்கு
சாத்தியதா லட்சமுறு அறிந்து கொள்ளு
தன்னவே கர்மங்க ளறிந்து சொன்னேன்
தலங்களிலே சக்கரத்தைத் தாக்கிடாயே (279)

தாக்கிடுவாய் யஷ்ட கர்ம பலகையெட்டும்
தருவான ஆசனமும் மணிகள் வஸ்திரம்
பாக்கியே நாளோரை கிரக ராசி
பக்கமொடு திக்கெட்டும் மூலைதானும்
கார்க்கவே கருவூரார் கொங்கணரும் சொன்னார்
காட்டினார் நூல்தோறும் கருவைப்பாரு
சொக்கிடுவாய் தத்துவத்தில் பஞ்சபட்ச
சோகமாக நட்சத்திரக் குறிகள் தானே (280)

தானென்ற அங்கனியாசம் கரணியாசம்
தருவான தசமதையொடு ஓம்தர்ப்பணம்
தேனான நலமுத்திரை நமனியாசம்
சிறப்பான பிராணாயா மதிக்குப் பந்தம்
கோனான கும்பத்தில் காப்புங் கட்டி
குறியான சோடசாமம் பூசைதானும்
வானான கும்ப முனி தீட்சையேரணு...
மருவிப்பார் பூசைதனை வகுத்திட்டாரே (281)

---

279. இவ்வாறு வாலை எழுத்தும் கூட்டி லட்சம் உரு செய்து கர்மங்கள் செய்யவும்.

280. இவைகளுக்கு உரிய பலகை, மணிகள், வஸ்திரம், நாள், ஓரை, கிரகம், திக்கு முதலியவற்றை கருவூராறும், கொங்கணறும் சொன்னார்கள்.

281. ஓமம், தர்ப்பணம், பிராணயாமம் முதலியவற்றை கும்பமுனி தீட்சை நூலில் காணுவாயாக.

வகுத்திட்டார் கொங்கணவர் கடைகாண்டம் பாரு
மைந்தனே சக்கரத்தின் மாறல்கேளு
தொகுத்திட்டு எந்தெந்த கர்மத்துக்கும்
சொல்லியதோர் அட்சரங்கள் நின்ற வீட்டை
முகந்திட்டு முன்னேதான் நடுவில் கீறி
முறையோடே யெழுத்தரிந்து யதன் மேல்கீறு
வகைத்திட்ட மிப்படியே பறியச் சொன்னேன்
மயங்காதே யின்னமொரு வண்மைகேளே (282)

கேளும் நீ சக்கரமும் அட்சரமும் நன்றாய்
கெடியாக யெனமறிந்து மாறியோது
மீளுமே ஐங்காயம் மறைத்துப் பூச
விளம்புகிறேன் கருவையினி விரைந்து கேளுத்
தாளுமே ஆவின்பால் வசியமாகும்
கருவான கன்னி முலைபால்தான் மோகம்
மாளுமே ஒட்டிவைக்கும் செம்பவளக் கண்ணீர்
மாட்டாதே சிலேத்தும பேதனமுமாமே (283)

ஆமென்ற அழைப்புக்கு அமுரிவிந்தாம்
அப்பனே மாரணத்துக்காலம் பால்தானும்
நாமென்ற வித்துவே சனத்துக்கப்பா
நலமான தண்ணீரை நாட்டு நாட்டு
போமென்ற வேஷணைக்குத் தில்லைப் பாலாம்
புகழான திருகுக் கள்ளிப் பாலுமாகும்
வேமென்ற கருமத்தில் சமுதை ஓமம்
விதமாக அறிந்து கொள்ளும் விசிதமாமே (284)

---

282. அந்தந்த கர்மத்திற்கு உரிய அர்ச்சரங்கள் நின்ற வீட்டை நடுவில் எழுதி கர்மங்கள் செய்வாயாக

283. வசியம் முதலியவற்றிற்கு உரிய ஆவீன்பால், அமுரிவிந்து முதலியவற்றை பரிபாஷையில் மயங்காமல்

284. ஓமம் முதலியவைகளை குரு அருளால் செய்தால் எல்லாம் சித்தியாகும்.

விசிதமாம் தம்பனத்தில் சமுதையென்ன
விளம்புகிறேன் ஆலோடு நத்தைச்சூரி
விசிதமாம் நல்லெண்ணெய் ஓமம் செய்வாய்
உத்ததொரு மோகனத்தில் சொல்லக்கேளு
கசியமே அகிலோடு தேவதர்ரம்
கண்டு கொள்ளு தேங்காய் நெய்கடுகு ஓமம்
முசியவென வசியத்தில் கூவிளமும் நாயுருவி
முனையான ஆவின்நெய் ஓமஞ் சொல்லே (285)

சொல்லவே அழைப்புக்குப் பாலரசு முன்னை
துடியான பேரண்டத்தெண்ணெய் ஓமம்
மெல்லவே வேசிக்க அரசு சொல்லு
விதமான கடுகெண்ணெய் புன்னையெண்ணெய்
சொல்லவே உச்சாடனம் புரசுவன்னி
சிவசிவா தேசிநெய் ஓமம் சொல்லு
மெல்லவே பேதனத்து முளக்குறண்டி
விதமான புங்கெண்ணெய் வீசுறேனே (286)

வீசுறேன் யெட்சணிக்கு யெட்டியோடு
விதமான மழுக்காரை நிம்மெண்ணெயோடு
பேசியதோர் கர்மத்தில் வெவ்வேறாக
இறக்காக இனமறிந்து சொன்னேன் பாரு
ஆசியதோர் சுமகர்மம் அசுபகர்மம்
அப்பனே யிப்படியே யறிந்து செய்வாய்
பூசியதோர் பூட்டென்ன மாறமே செய்யில்
புகழான ஓங்கார வட்டந்தள்ளே (287)

---

285. தம்பணத்திற்கு ஆல், நத்தைசூரி சமித்து நல்லெண்ணெயினாம் ஓமம்

286. இவ்வாறு மற்றக் கர்மங்களுக்கும் பாடலில் கண்டபடி அறிக.

287. இவ்வாறு சுப, அசுப, கர்மங்களை அருள்நெறி மாறாமல் செய்க!

தள்ளியே சாத்தியமாம் பேரை நாட்டு
தவறாதே செத்தெழுத்தை கால்தலையாய்ப்போடு
விள்ளாதே ஐங்காயக் கருவும் பூசு
விபரமாயுரு நாட்ட வகையைக் கேளு
உள்ளவே உச்சியிலுங் கண்டத்தூணு
உத்தமனே மாரபுக்தி மூலத்தூணு
கள்ளமடா சொல்லவில்லை சொல்லக்கேளு
கால் தொடுத்து தலைவரைக்குங் கருத்தோடுணே (288)

ஊனுமது மருக்காரை முள்ளு கொண்டு
உத்தமனே தொட்டகரு அரசு நெஞ்சு
பூண்டாமதுவொடு மாங்கிஷங்கள்
புகழான முப்பொலியும் போதச் செய்து
நீளடா தென்முகமாயிருந்து நீயும்
நிலையான சக்கரத்தி லட்சமுறுவேத்தி
காணடா கர்மாதி சடங்களைந்துங்
கைமுறையாய் செய்ததனில் காட்டிடாயே (289)

காட்டிடவே கனவேக மண்டிச்சாடும்
கண்டு கொள்ளுமாறாலுந் தீர்க்கப்போகா
நீட்டிடவே உலகமெல்லாம் நிமிசந்தன்னில்
நினைத்தபடி மாரணமாம் நினைக்கப் போகா
பூட்டிடவே பேதனமும் முச்சாடனுமும்
போக்கோடே ஒவ்வொன்றிலெட்டுமாடும்
ஆட்டிடவே அஷ்ட கர்மக்கருவைச் சொன்னேன்
யாருந்தான் யாருந்தான் சொல்லார் களறிந்து பாரே (290)

---

288. செத்த எழுத்தை கால், தலையாய் போட்டு மூலம், உந்தி, மார்பு, தலை, ஆகியவற்றில் கருத்து வைத்து செய்க.

289. சித்தர்கள் குழூஉக்குறியாக கூறிய பொருள்களை அறிந்து சக்கரத்தில் லட்சம் உரு செய்து

290. தன் மனத்தில் தீமைகளை அழிக்க இவ்வகைக் கர்மங்களை பயன்படுத்துக

பாரேநீ சித்தர்கள் தானனேகங் கோடி
பரிவான சாஸ்திரமும் சூத்திரமும் சொன்னார்
பாரேநீ மச்சமுனி யெண்ணூறப்பா
பகர்ந்திட்டார் வாதமுறை கருவையெல்லாம்
பாரேநீ பொதியமலை அய்யர் தானும்
பாடினார் ஆயிரத்து ரெண்டுநூறு
பாரேநீ காலாங்கி மைந்தர் போகர்
பரிவான யேழுகாண்டம் படித்திடாயே (291)

படித்திட்டு சட்டமுனி தீட்சை சொன்னார்
பகரரிய கொங்கணவர் நீ கண்டாயச் சொன்னார்
அடுத்திட்ட யென்னூல்தான் ஆயிரத்தில்
ஆதியொடு தந்தவரை யழகாச் சொன்னேன்
கடுத்திட்டு சித்தர்கள்தான் பேசிக்கொண்டு
கருவென்று குகைதோறும் ஒளித்தார் பாரு
படித்திட்ட சூத்திரத்தில் வெட்டவெளியாக
பார்த்திட்டால் பொருளருளும் ஒன்றாமென்றே (292)

ஒன்றான பொருளதனை விரித்து மைந்தா
உத்தமனே பலபலவாய் சொன்னாரய்யா
ஒன்றான மவுனமென்ற யோகந்தன்னை
உற்றுப்பார் நாவினாலுரைக்கப் போமோ
ஒன்றான சுழினையிலே யூணிப்பாரு
உற்பனமாய் வெளியடக்கி ஒளியாய்க்காணும்
ஒன்றான மனக்கண்ணை மேலே நோக்கு
உறுதியாய் மவுனத்தை யறிவிலுண்ணே (293)

---

291. இதன் முழு விவரங்களையும் மச்ச முனி அகத்தியர் காலாங்கி போக ஆகியோர் நூல்களையும்

292. சட்டமுனி, கொங்கணவர் ஆகியோர் நூல்களையும் சித்தர்களால் ஒலித்து வைக்கப்பட்டுள்ள என்னுடைய நூலையும்

293. பார்த்து பலப்பலவாக சொல்லப்பட்டவை அனைத்தும் ஒன்றே என்பதை சுழி முனையில் மௌனத்திலிருந்து ஒளி வெளியால் அறிந்து

அறிவான உலகத்தே யின்னூலை கிட்டில்
ஆகாரே சித்திகமாகிப் போனார்
அறிவான இன்னூலை யார் கொடுக்கப்போறார்
ஆதியிலே விட்டகுறையாலே யெய்தும்
அறிவான அறிவுக்குள் ளடங்கவேணும்
அறிவுகுரு வல்லாது ஆசானானதுண்டோ
அறிவானுலகத்தி லுத்தமாண்பர்
அறியார்கள் பொருளறிய மாட்டார்தானே (294)

மாட்டாத பேர்களப்பா வயிறு பிழைப்புக்காக
மாநிலத்தில் பொய்கள் சொல்லி குருநானென்று
தெட்டாகத் தேடியே பொருள் பரித்து
செத்தெழுத்தை யவர்களுக்கு உபதேசித்து
தாட்டிமையாய் பெரியோரைத்தர்க்கம் பேசி
தன்னைத் தானறியாத சண்டி மாடு
கேட்டவர்கள் சிரிக்கவல்லோ உடம்பெடுத்து
கெட்டலைவார் உலகத்திலுலுத்தர்தானே (295)

தானென்ற துறவியிலே இருந்தாலென்ன
சார்வான யில்லறத்தில் வாழ்ந்தாலென்ன
ஆனென்ற மனக்குரங்கு அஞ்சுக்கொப்பில்
அப்பனே தாண்டாமல் நிறுத்தவேணும்
பானென்ற பூரணத்தை பார்க்கவேணும்
பார்த்தறிந்து நிலையில் நின்றாலவனேசித்தன்
தானென்ற ஆணவத்தை நீக்கவேணும்
தப்பினால் ஒன்றுமில்லை தாக்கிப்பாரே (296)

---

294. அறிவுக்குள் அடங்கி அறிய வேண்டும். அறிவே குரு ஆவதை அறியாத மாந்தர்கள் பரிபாஷையின் வலிமையான பூட்டை திறக்க முடியாமல் இந்த மாந்திரீக கர்மத்தில் வெற்றியடைய மாட்டார்கள்.

295. போலி குருமார்கள் பொருள் தேடுவதற்காக செத்த எழுத்தை மக்களுக்கு உபதேசித்து சிரிப்புக்கு இடமாக வாழ்வார்கள்.

296. துறவறத்தில் இருந்தாலும் இல்லறத்தில் இருந்தாலும் மனம் ஐம்புலன் வழி செல்லாமல் பூரணக் கலையில் நின்று ஆணவத்தை நீக்கியவனே ஞானியாவான்.

வெள்ளை ஆவாரை

தாக்கிப்பார் வெள்ளையாவரைச் சொல்வேன்
தருவான காயசித்தி சார்வு மெய்த
தாக்கிப்பார் பானுவிலே காப்புக்கட்டி
சந்திரனில் பொலி கொடுத்துத்தூபம்
தாக்கிப்பார் சோடச உபசாரத்தோடே
சமூலந்தான் வாங்கி வந்து நிழலுலர்த்தி
தாக்கிப்பார் பொடிப்பொடியாய் தறித்துலர்த்தி
தானதிலே பாதியொரு கலசத்திட்டே (297)

இட்டுமே நவச்சாரம் பலந்தானொன்று
இதமான கலசத்தின் நடுவே வைத்து
அட்டியே மேல்சட்டி நடுதமறு போட்டு
....
முட்டியே சந்துவாய் சீலை செய்து
முயற்சியாய் குழிவெட்டி அடிக்கலசம் வைத்து
தட்டியே புடம் போட்டு தைலம் வாங்கி
தாய்பதத்தை பூசித்துச் சாற்றக்கேளே (298)

சாத்தவே தைலத்தை பீங்கானில் விட்டு
தருவான அண்ட வெள்ளை எட்டிலொன்று
ஊத்தியே ரவியில் வைக்க சிவந்துபோகும்
உத்தமனே வீரமொடு புழுகுபூரம்
மாத்தவே வகைவகைக்கு பணவிடைதான் போட்டு
மத்தித்து சரக்குகளில் மாட்டக்கேளு
ஆத்தவே அரிதார மேழுநாள் தோய்க்க
அப்பனே செந்தூரமாகும் பாரே (299)

---

297. வெள்ளை ஆவாரை மூலிகையை ஞாயிற்றுக்கிழமை காப்புக் கட்டி தீப தூபம் தந்து சமூலம் கொண்டு வந்து உலர்த்தி,

298. ஒருக் கலசத்தில் இட்டு அதன் நடுவே நவச்சாரம் வைத்து குழித் தைலம் வாங்குக.

299. இதில் எட்டில் ஒன்று அண்ட வெள்ளை சேர்த்தால் சிவந்து போகும். வீரம் பூனுகு, பூரம், வகைக்கு பணஎடை சேர்த்து அரிதாரத்தை ஏழு நாள் தோய்த்தால் செந்தூரமாகும்.

ஆகுமே நாகத்தை யுருக்கிச் சாய்க்க
    ஆச்சரியம் நாகமது கட்டிப்போகும்
வேகுமே பாஷாணம் கட்டிப்போகும்
    விதமான சூதமது வெண்ணெய் போலாம்
போகுமே தாம்பரத்தை யுருக்கிச் சாய்க்க
    புகழான வூரலத்து வெள்ளையாகும்
பாகுமே பித்தளையைக் காய்ச்சி காய்ச்சி
    பரிவாக தோய்த்திடவே பழுக்குந்தானே (300)

பழுக்கவே உட்கொண்டால் சித்தியாகும்
    படுபத்தி வகுந்து வைத்த மருந்தைக் கேளு
நயக்கலே பாண்டத்தி லிட்டு மூடி
    நலமான குழித்தழிலம் யெரக்கியேதான்
முழுக்கான சுரோணிதத்தை கொஞ்சம் தொட்டு
    முனையான புனுகு கோரோசினையுங் கூட்டி
அழுக்கில்லா யிந்திரமாங் கோபப்பூச்சி
    அப்பனே யிவை சமயெடை யரையிரேனே (301)

அரையிறேன் வகை வகைக்கு களஞ்சி வீதம்
    ஆதியாம் தயிலத்திலிட்டு மத்தித்து
அரையிறேன் தீபமொடு தூபங்காட்டி
    வளமான சோடச உபசாரத்தோடே
வறையிறேன் ஸ்ரீரி ஓம் சகலவசியம்
    வாவா வென்று லக்ஷசமுறு யேத்தியேதான்
அறையிறேன் திலதமிட்டு செகவசிய மாகும்
    அணரோடு தேவரெல்லாம் வசியமாகுமே (302)

---

300. இதில், மாகம், பாஷாணம், சூதம், கட்டும், தாமிரம், ஊறல், அறும், பித்தளை, பழுக்கும்.

301. மருந்தாக உட்கொண்டால் உடம்பு சித்தியாகும். இதனுடன் சுரோனிதம் சேர்த்து புனுகு, கோரோசனே, இந்திர கோபம், இவை வகைக்கு களஞ்சி சேர்த்து,

302. தைலத்தில் மத்தித்து தீப தூபம் காட்டி ஸ்ரீரி ஓம் சகலவசியம் வாவா வென்று லட்சம் உரு செய்தால் உலகம் வசியமாகும். தேவர்கள் வசியமாவர்.

புருஷ வசியம்

வசியமாம் தயிலத்தி லின்ன மொன்று
வகை சொல்வேன் வெள்ளையிலே கருஞ்சாவலப்பா
வசியமாம் பிலத்துடனே றத்தம் சேர்த்து
மங்கையற்கள் நெத்தியிலே திலகம் போட
வசியமாம் புருசறெல்லாம் வசியமாகும்
மைந்தனே யிவளுடைய கருவும் கூட்டு
வசியமாம் மூலிதன்னை பறியில் தாக்கு
மயிற் முடியில் கட்டிடவே வசியமெண்ணே (303)

சரவய அஞ்சனம்

எண்ணவே அஞ்சனத்தை சொல்லக்கேளு
யிலபான கருங்கழுதை கண்ணினோடு
வெண்ணவே தேவாங்கு கண்ணும் பித்தும்
வாகான கருங்குருவி காக்கை கண்ணும்
நண்ணலே சுந்திரியும் சமூலத்தோடு
நலமான தலைபிள்ளை கொடியின் மூலம்
அன்னவே மினவெட்டி எட்டுங் கேளு
அப்பனே சமபாகம் நிறுத்துலத்தே (304)

உலத்தி ஆடுதொடா மூலி வேரும்
உத்தமனே கீழ்க்காயின் நெல்லி வேரும்
வுலத்தியே யேறனிஞ்சி வித்து மூலம்
ஆதினில் யாவரைவேர் மூலியோடு
பிலத்தியே யிலை ஐந்தும் தயிலம் வாங்கி
பேறான முன்மருந்தி லிட்டு ஆட்டி
நலத்தியே குழியானை சிரங்கைப் போட்டு
நலமான தயிலத்தி லரைத்திடாயே (305)

---

303. பாடலில் சொன்ன பரிபாஷை உணர்ந்து திலகமிட புருஷ வசியம் ஆகும்

304. பாடலின் சொன்ன பரிபாஷை உணர்ந்து அஞ்சனம் செய்ய

305. தைலத்தில் ஆடுதீண்டா பாலைவேர் முதலியவற்றின் தைலம் வாங்கி முன் சொன்ன மருந்து சேர்த்து

அரைத்துமே தயிலத்து முன்ன உண்ண
ஆட்டியே காயவைத்து தூளாயி பண்ணி
உலத்தியே கன்னி முன் விலக்கச் சீலை
ஊட்டியே திரியாகத் திரித்துக் கொண்டு
புரைத்துமே காறாமை யோட்டினுள்ளே
புகழான திரிபோட்டு தீபமேத்தி
கரைத்துமே காரெள்ளின் தயிலத்தா லெரித்து
கண்சட்டி தூரிலே மையை வாங்கே (306)

மைவாங்கி புத்துத்தேன் விட்டு மத்தி
மாயிபதம் பூசைபண்ணி வைத்துக் கொண்டு
உய்யவே ஆரகையி லிட்டாலுந்தான்
உத்தமனே பாதாளத்தோடும் தூரம்
செய்யவே சித்தெரண்டத் தெண்ணை
சிறப்பாக அங்கையிலே தடவிக் கொஞ்சம்
கொய்யவே மையமேலிட்டுப் பாரு
கொடுப்பைச்சார் தூவாலையிட்டு முழுகுவாயே (307)

வாயென்ற ஆவின்வெண்ணை மூலிப் பாலோடு
மத்தித்துக் கண்ணிலிட்டு மையைப் பாரு
ஆவென்ற பாதாள நிதிகள் தோத்தும்
அப்பனே பூதமொடு கணங்கள் தோத்தும்
போமென்ற பூமியிலே உள்ளதெல்லாம் தோத்தும்
புகழான சற்வ அஞ்சனமு மாகும்
காவென்ற அஞ்சனத்தை வெளியாய் சொன்னேன்
காட்டாதே கைகண்ட வித்தைபாரே (308)

---

306. பாடலில் கண்டபடி மை செய்து

307. அணிந்து பார்த்தால் பாதாளம் தெரியும்

308. பாதாளத்தில் உள்ள நிதிகள் அவற்றைக் காக்கும் பூதகணங்கள் தெரியும்

வித்தையிலே மாத்தமென்ற வித்தை மைந்தா
மேலான வித்தையடா விளம்பக் கேளு
அத்தர்ன கரு ஆமணக்கு வித்தும்
ஆதியென்ற பேய்ப்பீர்கின் வித்தினோடு
வெத்தான சிவன்வேம்பு சமூலம் வாங்கி
பேராக நிழலுலர்த்தி சமனாயி மூன்றும்
சித்தான பூப்புடத்தில் தயிலம் வாங்கி
சிறக்கவே மருந்தை யினி செப்பக் கேளே (309)

கேளப்பா கரும்பூனை கண்ணும் பித்தும்
கெடியான தேசினோடு பித்துதானும்
வாளப்பா பச்சோந்தி உலர்ந்த தூளும்
வளமான காரட்டை முறகருவுங் கூட்டி
வேளப்பா தயிலத்தி லரைத்துலர்த்தி
விதமான சீலையிலே யூட்டியேதான்
நாளப்பா திரியாக்கி யிருப்பகலில் போட்டு
நலமான சுடலைநெயி தீபமேத்தே. (310)

யேத்தியே கோதுபடா மண்டையோட்டில்
யிதமான மைவாங்கி யியம்பக்கேளு
மாட்டியே முப்பொலியின் ரத்தம் தானும்
மகத்தான விந்துவதில் பாதி சேர்த்து
ஆக்கியே மத்தித்து சிமிளில் வைத்து
அறுளான சிவன்பாதம் ஆயிபாதம்
போத்தியே அம்மென்று திலதம் போடு
பூதலத்தோர் காணரிது புகழ்ந்து பாரே (311)

---

309. கரு ஆமணக்கு முதலாக பாடலில் சொல்லப்பட்ட பொருள்களின் தைலம் வாங்கி

310. கறும் பூனைக்கண் என்று மறைத்து சொல்லப்பட்ட பொருள்கள் முதலானவற்றை துணியில் பூசி திரியாக்கி

311. மை தயாரித்து அதனுடன் (உயிர்க்கொலை செய்யாது) பரிபாஷையாக பாடலில் கூறப்பட்ட பொருள்களை சேர்த்து திலகம் அணிந்துக் கொண்டால்

பாறென்ற தன்னைத்தா னாருங்காணார்
    பாரேநீ காணவென்றால் பகரக்கேளு
காரென்ற கண்ணாடி வட்டப்பூச்சி
    காசினியில் மெத்த உண்டு பிடித்து வந்து
சீறென்ற ஓட்டிலிட்டு கருக்கிக் கொண்டு
    சிறப்பான ஆள்காட்டி கண்ணும் பித்தும்
ஊறென்ற செவ்வகத்தி பூச்சாத்தில் மத்தி
    உத்தமனே மூக்குணுணி மீதிலூணே. *(312)*

ஊணலே மந்திறந்தான் ஊ ஆவென்ற
    ஒளியாது உருமாத்தும் வெளியாய்த் தோணும்
ஆணலே எந்தெந்த அஞ்சனமும் பாற்சில்
    அப்பனே யிறுகடைக் கண்புருவ மையம்
உண்ணவே யிக்கருவை னாட்டிப் பார்த்தால்
    ஓடாத அஞ்சனமு மோடும் தூரம்
காணலே உங்களுக்காயி சொன்னேன் மைந்தா
    கண்டுபா ரின்னூலின் கருவைத்தானே *(313)*

கருவான வசியமொன்று சொல்லக்கேளு
    கதிர் சிவந்த முலமுடன் கூவிளத்தனை மூலம்
உருவான சீதேவி மூலத்தோடு
    ஓரிதளின் மூலமொடு வெள்ளெரிக்கின் மூலம்
அறுவான ஐந்துவகை மூலந்தானும்
    ஆதித்தவார நாள் காப்புக் கட்டி
வான சாமத்துக் கொரு மூலியாகப்
    பகர்ந்திட்ட மூலி அஞ்சும் சாமஞ்சே *(314)*

---

312. ஒருவரும் காணாமல் உலவலாம் பாடலில் மறைபொருளாக கூறப்பட்ட பொருள்களை சேர்த்து.

313. அஞ்சனம் செய்து புருவ மையத்தில் இட்டுப் பார்த்தால் எல்லாப் பொருள்களும் மறைவுயின்றித் தெரியும்.

314. கதிர் சிவந்த மூலிகையின் வேர் முதலான ஐவகை வேர்களையும் பாடலில் சொல்லியவாறு காப்புக்கட்டி எடுத்து

அஞ்சாகும் சாமத்துக் அஞ்சுமூலி
அப்பனே வெவ்வேறே காப்புக்கட்டி
தஞ்சமாம் பொலிகுடுத்து தீபதூபம்
சாமமது நீக்கியே பிடிங்கி வந்து
மிஞ்சாதே செவ்வாலி னரணை யொன்று
நீறாம லிந்திரமாங் கோபமொன்று
அஞ்சாதே செங்கருடன் முட்டை யொன்று
ஆகயிவை யெட்டுமோர் சமனாய்ச் சேரே (315)

சேர்க்கவே யீணாத கெடேரி சாணி
செப்பரிய அமாவாசை பவுரணையிலாதல்
சேர்க்கழிலே பூமியிலே வீழு முன்னே
குருகரத்தி லேந்தி போதோ மென்றுனறி
சேர்க்கவே மூலியெட்டும் பொருந்துலத்தி
சிறப்பாக நீத்தியதை குறுநீறாக்கி
சேர்க்கவே யின்னமொறு கருவைக்கேளு
சிவா சிவா குயில்வலம் கொண்ட மாதே (316)

மாதுதா னதிக் குழியில் மதித்த சாம்பல்
வாங்கியே முன்னீத்தில் வனமாயிச் சேர்த்து
மாதுதான் முறகருவும் கொஞ்சம் தொட்டு
மைந்தனே ஆவின்பால்........லத்தி
மாதுதான் சாம்பராணி தயிலம் மூட்டி
.... உடல் கூறு .... க ரத்தை கீறி
மாதுதான் சக்கரத்தில் வசிய மோதும்
மவுனத்தை கண்ணாடி மரிவிப்பாரே (317)

---

315. சாபம் நீக்கி இந்திரக் கோபம் முதலானவை சேர்த்து

316. அமாவாசை பௌர்ணமியில் ஈணாத பசுவின் சாணம் எடுத்து மேற் கூறப்பட்ட பொருள்களுடன் சேர்த்து நீறாக்கி

317. பாடலில் கூறப்பட்ட பொருள்களைச் சேர்த்து மௌனத்தில் நின்று

அஷ்ட கற்மம் வாலை

மரிவியே ஸ்ரீரிங் அங் கிலிங் யங்சிறன வென்று
மாட்டடா சோடச உபசாரத்தோடே
சாறுதியா யிலஷ்ச முறுவேத்தியே தான்
சொல்லரிய வில்வகுடுக்கை யிலடைத்து
உறுதியாம் பிறைநுதலி லடைத்து கொள்ள
ஓகோகோ உலகமெல்லாம் வசியமாகும்
பரிதியே பகையெல்லாம் நசித்துப் போகும்
பராபரனும் வந்துமக்கு பதமீயிவாரே (318)

வெண் சாரை

யீயவே வெண்சாரை கருவைக்கேளு
யேக உயிர் பூரணமா யிருந்த சூஷனும்
மாயவே சித்தர்கள் தான் சொல்லார் சொல்லார்
மயேந்திறத்தி லல்லாது புவியிலில்லை
யேயவே யிதையரிந்தா லலுக மெல்லாம்
யிறப்பேது பிறப்பேது யிட்டார் சாபம்
ஆயவே னான் வெளியாய்ச் சொன்னேன் மைந்தா
ஆச்சரியம் கண்டறிந்தா லதிகமாமே (319)

ஆதிதமாம் சாரை நல்லபாம்பு ரெண்டு
அப்பனே பிணைச்சலா யணைதல் கண்டு
அதிதமாம் தம்பித்து பிடித்து வந்து
ஆச்சரியம் மண் குடத்திலடைத்து மூடி
அதிதமாம் தம்பனமு மாரணமு மோது
அன்பான மாலையுச்சி காலை மூன்றும்
அதிதமாமி நாளொன்றுக் குறுதான் லக்ஷம்
அடைத்த நாள் முதலெட்டுநாள் தான் ஓதே (320)

---

318. ஸ்ரீரிங் அங் கிலிங் யங் சிறன் என்று லட்சம் உரு ஏத்தி சோடச உபசாரம் செய்து வில்வக் குடுக்கையில் அடைத்து வைத்துக் கொண்டு நெற்றியில் அணிய உலக மெல்லாம் வசிகமாகும்.

319. வெண்சாரை என்று சித்தர்கள் நுணுக்கமாக மறைத்துச் சொன்ன பொருளை எடுத்து

320. நல்ல பாம்பு என்று மறைவாக சொன்னப் பொருளையும் எடுத்து மண் பாண்டத்தில் இட்டு காலை, மதியம், மாலை மூன்று வேளையும் தம்பணம் மாறணம் லட்சம் முறை எட்டு நாள் ஓதுக.

ஓதவே விஷமடங்கி ஒடிங்கிச் சாகும்
உத்தமனே ஒண்ணையொன்று பிரியாதப்பா
சிதவே யின்னமொறு கறுவைக் கேளு
கெறுடக் கொடி மூலம் வெள்ளெருக்கின் மூலம்
சோதவே வெள்ளவரி சீவனார் வேம்பு
கொடியாலம் விழுது பொர்க்கொண்ணை மூலம்
நிதவே சிவவன்னியின் மூலத்தோடு
நீதமாம் கூவிளத்தின் பழமாம் மெண்ணே (321)

பழமான யிவையெட்டும் கல்வத்திட்டு
பாங்கான முறகருவுங் கூடக்கூட்டி
வளமான நாதவிந்து சமனாயி கொண்டு
வாழ்திடுவா யாவின்பால் வெள்ளாட்டுப் பாலும்
குலமான குமரிச்சார் மூன்றுங் கேளு
கூட்டியே படிமுக்கா லளந்து விட்டு
நலமாகவே யறைத்து குழம்பாயி பண்ணி
நாகத்தின் குடத்திலே வாத்திடாயே. (322)

வாத்துமே மேல்சட்டி கவுழ்த்து மூடி
வாகான ஆலடியி லனந்த வானமாதல்
பேர்த்துமே புனல் மிடுகு திலத்திலாதல்
பேரான னாலுமுழக் குழிதான் வெட்டி
மாத்துமே மொழுகி நன்றாயி காயப்போட்டு
மைந்தனே கதிர்னாளில் மதித்த சாம்பல்
ஆத்துமே குசவனிட சூளை சாம்பல்
லப்பனே தனித்திருந்த புத்துமண்ணே (323)

---

321. பிறகு பாடலில் சொல்லப்பட்ட பொருள்களை சேர்த்து

322. பாடலில் சொல்லப்பட்ட நாதவிந்து முதலான பொருள்களை குரு அருளால் உணர்ந்து மண் குடத்தில் வார்த்து

323. மேல் சட்டி மூடி பாடலில் கூறப்பட்டவாறு ஞாயிற்றுக் கிழமை குழி வெட்டி அடியில் சாம்பல் முதலியவைகளை பரப்பி

மண்ணென்ற அடியிலே பரத்தியேதான்
மகத்தான அதின்மேலே சாம்பலிட்டு
நன்னென்ற நவகோண மிட்டிதற்குள்
னாட்டுவாய் சடாவிசரமும் ரீங்கென்றூட்டு
விண்ணென்ற காஷடமது கவுழ்த்து மேலே
விதமான னாகத்தின் குடத்தை வைத்து
பண்ணென்ற குடத்தின் மேல் சட்டித்தூரில்
பணம்போலே தம்பிட்டு பலகை பாலே (324)

பாவியதோர் பலகையிலுமதமரும் போட்டு
பாவகமா யதின்மேலே மண்திரனை போட்டு
பூவையே திரனை முத்துப் பலகையொன்றாயி
பொருந்தவே தமரிட்டு குடத்து வாயுமட்டும்
தாவவே சிலாக்கையிட்டு மையம் பாரு
சாயமல் கோணாமல் சமனாயி பாத்து
மேவவே யதின்மேலே கணபதியை வைத்து
விறத்தியாய் செபம் செபிக்க விசித மாமே (325)

விசிதமாம் செபித்திடவே யின்னங்கேளு
மேலான வெள்ளைத்தாமரை னூல் வாங்கித்
விசிதமாம் பதித்த குடத்தாவில் பூட்டி
மீதுனூல் தமர் வாசல் மேலே கொண்டு
விசிதமாங் கீணேசனிரு தாளணிய நூல்
விலங்கிட்டு னூலேணி விதம் போலப்பா
விசிதமாம் ஐங்கறனை கீழ்முகமாயி வைத்து
வித்திருக்கும் வலப்பாகம் வெள்ளாவி னாட்டே (326)

---

324. நவ கோணம் இட்டு பாடலில் கூறப்பட்டவாறு குடத்தை வைத்து

325. பலகை முதலியவன அமைத்து கணபதியை வைத்து எரித்து

326. வெள்ளைத் தாமரை நூலைக் குடத்தில் கட்டி ஐங்கரனை கீழே வைத்து.

னாடியே வித்து வேக்ஷத்தை சொல்லு
நலமான ஒரெழுத்தை மவுனத்துண்ணி
னாடியே சடாச்சரமும் மூலங் கூட்டி
னானொன்று கசிறவுப கல்லாறு வேளை
னாடியே யாறுவறை சூக்ஷத்தாலே
நன்றாக வடமுகமாயிருந்து நீயும்
னாடியே லக்ஷசமுறு ஓது ஓது
னாகமது ரெண்டு மென் றாயி பொருந்திப் போமே (327)

பொருந்தியே மண்டலதா னிப்படியே யோத
பூரணமா யுடலுயிரும் மொன்றாயி போகும்
தருந்தவே குடத்தோடே யிப்பால் வாங்கி
பாருநீ சோதினையே பரிந்து கூடும்
பொருந்தவே யிக்கருவைப் பதனம் பண்ணு
பூதலத்தோ ரறியாத புதுமைதானே (328)

புதுமையுள்ள கருவாலே யெல்லாம் சித்தி
பூரணமும் முன்னாகில் பொருந்தி யாடும்
புதுமையுடன் னுட்கொண்டால் காய சித்தி யாகும்
பூட்டுகுறே னடியிலே மயானச் சாம்பல்
புதுமையுள்ள பூதியதில் கலந்துக் கொண்டு
பூசிடவே யக்ஷணமா சித்தியாமே
புதுமையுள்ள பூதியினால் கோடி வித்தை
புரந்தாடும் சிவசூட்சம் பொருளைப் பாரே (329)

---

327. மௌனத்தை உண்ணி வித்துவியடணத்தை சொல்லி வட முகமாக இருந்து லட்சம் முறை ஜெபித்து.

328. ஒரு மண்டலம் பூசித்தால் உடல் உயிர் ஒன்றாகும். இக் கருவை பத்திரப்படுத்து வாயாக.

329. இந்தக் கருவினால் எல்லாம் சித்தியாகும். உட்க் கொண்டால் தேகம் சித்தியாகும். அட்டமா சித்தி உண்டாகும்.

பொருளான சிறசோடும் புத்து மண்ணும்
புரிசுடலை சாம்பலுடன் மூன்றுங் கேளு
பொருளான சூட்சமடா யாருஞ் சொல்லார்
போக்கோடே அடிமுடியும் நடுவுமாகும்
பொருளான மூன்று மொன்றா யறிந்தால்
முத்தி புரியவிட்ட சுழிளையிலே மேவிப் பாறு
பொருளான தீபபொருளேயல்லால் வேரே
புகலுகுற சித்தாதியார் தான் காணே (330)

காணாத கருவையெல்லாம் வெளியாச் சொல்வேன்
காசினியி லந்தந்த கருவை செய்யில்
ஆணாத முன்சொன்ன பொருள்தான் மூன்று
மப்பனே குழிவெட்டி பதித்து முன்போல
கோணாத னால்மூலை திரணைப் போட்டு
குரிப்பான யீசானிலே யாவினாட்டி
பூணாது மேலிருந்து சேவிக்க முத்தி
புகழ்ந்திட்டேன் வெகு சுருக்கு புகழ்ந்திட்டேனே (331)

புகழ்ந்திட்ட வாடையொன்று சொல்லக் கேளு
பூதரவாயி அய்ந்து திங்கள் குள்ளே பிண்ட
மகர்ந்திட்டு யின்பமுத்து ஆகிபாரு
அப்பனே கடுஞ்சுலாகாது சொன்னேன்
கரைந்திட்ட மூன்று திங்கள் அஞ்சு திங்கள் குள்ளே
கரைந்துதான் போகாமல் பிண்டம் வாங்கி
முகந்திட்ட பாண்டத்தி லிட்டு நீயும்
முசியாதே தேகப்பூட்டு பூச்சிக்கேளே (332)

---

330. அடி நடு முடியாக உள்ளப் பொருளை சுழி முனையில் தீபம் கண்டு உணர்வாயாக

331. எல்லாக் கருவையும் செய்வதற்கு அடி, நடு, முடியே அடிப்படையாகும். இதனை அறிந்தால் முக்தி இது வெகு சுருக்கான பாதையாகும்.

332. ஐந்து திங்களுக்குள் கரையாத பிண்டத்தை வாங்கி பண்டத்தில் போட்டு

பூச்சியிலே யறுபத்து ஒன்றுச் சொல்வேன்
　　புகழான பச்சை பாம்பொன்று போடு
பாச்சிடுவா யாவின்பால் படிதான் னாலு
　　பகரரிய வஸ்துவிலே படிதான் மூன்று
தாக்கியே யமுரியது படிதான் மூன்று
　　தறுவான மத்தஞ்சாற் படிதான் னொன்று
ஆச்சியே பேய்க்கருப்பன் சாறுபடியொன்று
　　அமுந்து விட்டு மேல்மூடி யடுப்பி லேத்தே (333)

அடுப்பேத்தி எரித்து நீ பதத்தைப் பாரு
　　அப்பனே யிளகிமேல் வாசங்கொள்ளும்
கடுப்பேத்த ரவிதனிலே காயிந்து தூளாயி
　　கசக்காதே பேய்ச்சுரையின் குடுக்கையிலே யடைத்து
துடைப்பேத்த வாடைக்கி சரக்கை கேளு
　　சொல்லரிய பசுமஞ்சள் பச்சை மஞ்சள்
வடுப்பேத்தக் குளவிந்தம் கஸ்தூரி மஞ்சள்
　　வளமான வங்காளப் பச்சை யென்னே (334)

பச்சையா மலர்க்காயும் தேவதாரம்
　　பரிவான அகிலோடு செஞ்சந்தனாதி
கொச்சையாம் கிளியூறல் கருவாய்ப்பட்டை
　　கொடியா னன்னாரி வேர் கோரசனை கிழங்கும்
யிச்சையாம் சென்னகரை பட்டையோடு
　　யிருவேலி நற்ழலா கிழங்குச் சோலம்
பச்சையாம் வெட்டிலாம் பிச்சு வேரும்
　　பகரரிய கோஷ்ட்ட மதிமதுரமாமே (335)

---

333. பச்சை பாம்பு முதலாக பரிபாஷையாக கூறப்பட்ட பொருள்களையும் ஊமத்தஞ் சாறு முதலிய பொருள்களையும்

334. சேர்த்து எரித்து ரவியில் காய வைத்து தூளாக்கி பேய்ச்சுரை குடுக்கையில் வைத்து பச்சை மஞ்சள் முதலான பொருள்களையும்

335. தேவதாரு அகில் முதலானப் பொருள்களை சேர்த்து

மதுரமென்ற கசகசா தாளிசபத்திரி
மஞ்சிகூட்டி அரிதாரம் சாரப்பூரும்
மதிரமென்ற தற்கோலம் யேலம் லவங்கம்
மைந்தனே சாதிக்காய் கிராம்பு பத்திரி
மதிறமென்ற செங்கழு நீற் கோஷ்ட்டம்
மண்ணாறும் குங்குமப்பூ சாரப்பூவு
மதிறமென்ற செண்பகப்பூ சிறுநாகப் பூ
மாசத்த தாழம்பூ செம்பரித்தி பூவே (336)

பூவான துடரியொடு பிரியா நங்கை
புகழான நிலப்பனையும் முத்தக்காசும்
தேவான சிவகரந்தை கற்பூரவள்ளி
செங்கதிரோன் வித்துமதிற் சிறந்த மூலம்
மாவான தொட்டான் கணங்கனோடு
வாடிபாசாலங் காயுடனே செந் தொட்டிக் காயும்
கோவான கீழ்க்காயும் நெல்லியோடு
குறியதோர் யிடைப்பாகம் கண்டு கொள்ளே (337)

கொள்ளவே யிடித்து நன்றாய் தூளாய் பண்ணி
கூட்டுவாய் புனுகு கோரோசினை கற்பூரம்
கொள்ளவே களம்ப கஸ்தூரி சூடன்
குறிப்பான சவ்வாது நற்பாணி கெந்தம்
கொள்ளவே அத்தர் வகை எட்டுங் கேளு
கொசிகியே பன்னீறும் நெரிஅரிசிப் பாலும்
கொள்ளவே பூவெண்ணை சம்மங்கி யெண்ணை
கொடியான சாம்பராணித் தயிலம் வாங்கே (338)

---

336. கசகசா முதலான பாடலில் சொல்லப்பட்ட பொருள்களைச் சேர்த்து

337. பெரியா நங்கை முதலாக சொல்லப்பட்ட பொருளை சேர்த்து

338. இடித்து தூளாக்கி புனுகு கோரோசனை கற்பூரம் முதலிய பொருள்களை சேர்த்து

தயிலமென்ற யிந்திரமாம் கோபப்பூச்சி
சத்தித திருச்சங் கயித்து மஞ்சனையி னோடு
தயிலமாம் மிவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து
சாறித்து முன்பொடியிற் பாதிகூட்டி
தயிலமாம் பொடியினுடன் சக்கரத்தைக் கீறி
சாத்துவாயி மோகனத்தை லக்ஷசமுறு வப்பா
அகிலமென்ற தரணிமுழு தீந்தாலுந்தான்
ஆச்சரிய மிவ்வாடைக் கொவ்வா தென்றே (339)

ஒவ்வாத வாடை யிடவேகம் மெத்த
ஒகோகோ பொடியிலே கொஞ்சம் தொட்டு
ஒவ்வாத நினைத்த பேர் மேலே போட
உத்தமனே யதுமன்னி சொலக்கேளு
ஒவ்வாது மேல்பூசி யகலச் சொல்லு
உத்தமனே சித்த குணக்கினையோ சொல்லே (340)

யிணையாக யின்னமொரு விதத்தைச் சொல்வேன்
என் மக்காள் செருப்படி பொற்கையான் ரெண்டும்
கணையாக உலைந்து நன்றாயி தூளாயி பண்ணி
கண்டிடைக்கி முன்பொடியும் சமனாயி கூட்டி
பனையான சிவந்ததொரு சீலையிலே யூட்டி
பாவகமாயி திரியாக திரித்துக் கொண்டு
அணை ஆகு அகிலிட்டு தீபமேத்தி
யப்பனே காரெள்ளின் தயிலத்தி லெறியே (341)

---

339. இந்திரக் கோபம் முதலியவை சேர்த்து முன் பொடியில் பாதிக் கொட்டி மோகணத்தை லட்சம் உரு செய்து வைத்துக் கொள்க.

340. சிறிது உடலில் போட்டால் நல்வாடை அகலாது

341. சிறு செருப்படி பொற்றலை கையாந்தகரை இரண்டையும் உலர்த்தி தூளாக்கி முன் பொடி சமன் கூட்டி சிவந்த துணியில் ஊட்டி தீபம் ஏற்றி.

எரித்துமே புச்சட்டி தூரிலேதான்
மிதமான மத்தமசாற் மேனியிலைச் சாறும்
பரித்திடவே தடவி நன்றாயி மூக்கவுரின் மேலே
பாங்காக சட்டி வைத்து எரித்து வாங்கு
தெரிந்திடவே மோகணமந்திரத்தை சொல்லி
சிவசிவா பணம் போலே திலர்தமிட்டு
எரித்திடுவாயி வேண்டினபேர் ரெதிரே சொல்ல
மேவுவார் விட்டு முன்னைப் பிரியார் தானே (342)

தானாக யின்னமொரு வித்தை கேளு
சாத்துறேன் சொக்கிவிக்கு மதிதமாகும்
தானான தேசியுட மண்டை வாங்கி
தனையுடைத்து பாற்பதற்க்குள் கமலம் போலே
தானாக யிறுக்குமதை யெடுத்துக் கொண்டு
சாதியாங் குளிநிரின் பச்சை மண்டை
தானான பச்சோந்தி புளிமேல் பல்லி
சாதகமா யிணையரிந்து அன்றில்தானே (343)

அண்டிலான தலையொடு பறவை செய்யான்
அந்தணவ ராந்தையொரு கழுகின் மண்டை
அண்டிலான கொம்பிழந்தக் கலையின் மண்டை
ஆகாச மூலிமதி மயக்கித்துடரி மூலம்
அண்டிலான பதினொன்றும் சமனாய்க் கொண்டு
அப்பனே நிழலுத்தி தூளாய் பண்ணி
அண்டிலான யிந்திடையில் முன்பொடியை கூட்டி
யழைக்கவே லக்ஷசமுறு சேவிப்பாயே (344)

---

342. மேனி இலை சாறு தடவி மேல் மூடியைக் கவிழ்த்து எரித்து வாங்கி மோகன மந்திரத்தைச் சொல்லி திலகம் இட்டாள் எதிர் நிற்போர் பிரியாமல் வசியமாவர்.

343. தேசீ மண்டை என்று மறைத்துக் கூறப்பட்ட பொருளுடன் பரிபாஷையாக பாடலில் கூறப்பட்ட பொருள்களைச் சேர்த்து

344. கழுகின் மண்டை என்று கூறப்பட்ட மூலிகைகளை தெரிந்து எடுத்து. முன் பொடியை சம எடை சேர்த்து அகரஷனம் லட்சம் உரு செய்து

சேவிப்பாய் சோடச உபசாரத்தோடு
செயமாக மோகினி தோத்திரத்தை செய்து
சேவிப்பாயி பொடியிலே பணவிடைதா னெடுத்து
சிகபான சுண்டுவிரல் நிகத்துள்ளாக்கி
ஆவிப்பார் வேண்டினபேர் மேலே போட்டு
ஆருந்தான் காணாமலப்பால் செல்லே (345)

செல்லவே பின்துடர்வாரப்பா சொன்னேன்
செப்பாதே சொக்குபொடி யதீதம்பாரு
செல்லவே திரும்ப அவர் போக வென்றால்
செப்புகுறே னமுரிதன்னை கையில் வாங்கி
செல்லவே யேதிக்கு முச்சாடணத்தை சொல்லி
திறமாக யிவர் முகத்தில் மூன்று திறம்விசு
செல்லவே கருவில்லா தொன்றுமில்லை
தேசத்தி லிப்புதுமை செப்பார் கேளே (346)

கேளுநீ கருவொடு குருவும் வேணும்
கெடியாக முலிகை தியானம் வேணும்
வாளுநீ சாத்திரத்தில் ஒவ்வொன்றை
மறைத்ததினால் சித்தியில்லை யேங்கினார்கள்
னாளுநீ வெளியாகச் சொன்னேன் மைந்தா
நலமான னூல் கண்டால் சித்தி முத்தி
வேளுநீ காமிக்கு உகந்தாயானால்
விண்ணிலிடி விழுந்துதலை தெரிக்குந் தானே (347)

---

345. பூசை செய்து பிறரை நல்வழி படுத்த இதனை மேலே போட்டால்

346. அவர்கள் பின் தொடர்வார்கள். இந்த மயக்கம் நீங்க உச்சாடணத்தை சொல்லி அமுரியை முகத்தில் மூன்று முறை தெளிக்கவும்.

347. இவை யாவும் சித்திக்க சன்மார்க்கிகளுக்கு கருப்பொருள் குரு அருளால் விளங்கு ம் உலக பற்று உடையோருக்கு இந்நூல் கொடுத்தால் தலையில் இடி விழும்.

எட்டு வகை கற்மத்துக்கு மை

தெறித்திடா மையொன்று சொல்லக்கேளு
　　திறமான அஞ்சனமும் வசியமாத்தம்
விறுத்திடா யெட்டுவகை தொழிலும்மாட
　　பேசுகிறேன் பிதுர் சேருங் கதிர்னாள் தன்னில்
குறித்திடவே சுந்தரியொ ன்ரடித் துலத்தி
　　கூறான முள்ளெலியு மொன்றுங் கூட்டி
கறுத்திடா துற்கையிட கோயில் வாசல்
　　கயறு சுத்தி யாடுவா ருதிரம் வாங்கே　　(348)

உதிரமாம் துள்ளு மரிறத்தத்தோடு
　　உத்தமனே ரெண்டு மொன்றாயி உலத்திக் கூட்டி
எதிரமாம் புகையூறல் தூளும் கூட்டி
　　யிடுகாட்டில் முளைத்தெழுந்த கீழாநெல்லி
மதுரமாய் பேய்தும்பை உலத்தி தூளாயி
　　மகத்தான யிவையெல்லாம் சமனாயி கூட்டி
கதிர மென்று முன் பொடியை சமனாய் கூட்டி
　　கன்னியர்கள் முன்றுதிரச்சீலை வாங்கே　　(349)

சீலையிலே பொடி நன்றாய் பரத்தியேதான்
　　திரியாகச் சிறுவனுட மண்டை யோட்டில்
பாலையாம் சீவிட்டு தீபமேத்தி
　　பகுறுவேன் கழுதை நெயி சித்தெரண்டெண்ணை
காலையாங் காரெள்ளின் னெண்ணையோடு
　　கலந்து விட்டு தீபமதை கண்டித்தேத்தி யானையாம்
ஆனைக்கண் சட்டித்தூரில்
　　அப்பனே யெரித்து நீ மையை வாங்கே　　(350)

---

348. எட்டு வகை கர்மத்திற்கும் அஞ்சனம் சொல்வேன். பாடலில் குறிப்பிட்டக் காலத்தில் பரிபாஷையாக கூறப்பட்ட பொருள்களை சேர்த்து

349. கீழாநெல்லி, பேய்த்தும்பை முதலியவற்றை முன் பொடியுடன் சமமாகக் கூட்டி

350. பாடலில் கண்டவாறு தீபம் ஏற்றி மை செய்து

வாங்கியே தாய்பாதத்தில் பூசை பண்ணி
வளமான சிமிளதனிலே வைத்துக் கொண்டு
ஓங்கியே நெத்திதனில் காரமிட்டு
உண்ணவே உலகமெல்லாம் வசியமாகும்
பாங்கியே நகாரமிட்டு ஊணிப்பாற்க
பகரறிய தம்பனமும் மோகனமுமாகும்
தேங்கியே மகாரமிட்டு ஊணும்போது
செப்பரிய பேதனமு மாரணமு மாமே (351)

ஆமப்பா வகாரமிட்டு ஊணிப் பார்க்க
அழைப்பதற்கு வெகு சுறுக்கு அதிதமாகும்
ஆமப்பா வகாரமுடன் அகாரம் சேரில்
அப்பனே வித்து வனமு மாகும்
ஆமப்பா கண்ரெண்டும் யிறுகமூடி
அகாரமுடன் மவுனத்தால் சுழியிலூணு
போப்பா ஒருவருக்கும் தெரியாதுண்மை
புகழான கரத்திலாட அஞ்சனமுமாமே (352)

அஞ்சனமாம் மையிலொரு சூட்சங் கேளு
அணுவளவு மையெடுத்து கண்ணில் சூழ
அஞ்சனமாம் மேல்சிமுட்டி ரோமத்திட்டு
ஆருக்கும் வேண்டின பேரழைக்க வென்றான்
அஞ்சனமா மனத்துறுதி நினைத்துக் கொண்டு
ஆவாவா வென்று கண்ணை விழித்து மூடு
அஞ்சனமாம் நினைத்தபே றெல்லா முந்தான்
அடியிணையை வணங்கிடுவா ரின்னந் தானே (353)

---

351. நல்ல சிமிழில் வைத்துக் கொண்டு நெற்றியில் அணிந்தால் உலகம் வசியமாகும் நகாரமிட்டு பார்த்தால் தம்பணம் மோகனம் ஆகும். மகாரமிட்டு பார்த்தால் பேதனம் மாறணம் ஆகும்.

352. வகாரம் இட்டு பார்க்க அழைப்பு ஆகும். வகாரம் உடன் அகாரம் சேர்த்தால் வித்துவேடனம் ஆகும். இருக் கண்களும் மூடி மௌனத்தால் சுழி முனையில் நின்றால் உருவம் தோன்றாது,

353. இந்த மையில் அணு அளவு எடுத்து கண்ணில் தீட்டி ஒருவரை வேண்டி அழைத்தால் அவர்கள் தோற்றம் தெரியும்.

திண்ணாமாம் நினைத்ததெல்லா மழைக்கலாகும்
செப்பாதே கசடர்க்கும் துர்ச்சினர்க்கும்
திண்ணமாங் கருவினா லெல்லா மாச்சு
திறமான முள்ளெலியதித வித்தை
தின்னமாங் கருவித்தை கோடா கோடி
செப்பரிது யென்னாலே செப்பொணாது
திண்ணமா யடக்கி வெகு சூட்சமாக
தெளிவாக சூத்திரமாய் செப்பினேனே (354)

செப்பவே யின்னமொன்று சொல்லக் கேளு
தேசிகனார்வத்தியோடு பண்ணி விட்டை
செப்பவே வேம்பின் மேல் காக்கை கூடு
சிறப்பான மூஞ்சிறு யில்லத் தூளும்
செப்பவே முப்பான முப்பின் மண்ணும்
திகழான சுழல் துரும்பும் மாமை யோடு
செப்பவே காஞ்சுரை பேயின் பீர்க்கு
திரமான கவதும்பை காயா வெண்ணே (355)

காயவே யிவையெல்லா மோர் நிரையாக் கொண்டு
கடுகவே யிடித்து நன்றாயி தூளு பண்ணி
ஆயவே முன்பொடியை சமனாய் கூட்டி
யரைந்திடுவாய் சமமான தோல் குளி நீர் விட்டு
தூயவே குழந்தை போல் பண்ணிக் கொண்டு
தூம்புறமாம் சீலையிலே யூட்டி யூட்டி
மாயவே ரவியிலிட்டு காய்ந்த பின்னே
மைந்தனே திரியாக திரித்துக் கொள்ளே (356)

---

354. இந்த வித்தையை அறிவில்லாதவர்களுக்கும் உயிர் இறக்கம் இல்லாத கொடியவர்களுக்கும் சொல்லக்கூடாது. முள்எலி என்று பரிபாஷையாக கூறப்பட்ட பொருளில் வித்தை கோடானு கோடியாகும். இதை எல்லாம் சுருக்கி மிகவும் சூட்சமாக சொன்னேன்.

355. பாடலில் கூறப்பட்ட பொருள்களை ஓர் எடையாக எடுத்து

356. தூளாகிக் முன் பொடியை சம அளவுக் கூட்டி துணியில் ஊட்டி காய்ந்த பின் திரியாக்கி

கொள்ளவே திரியைநீ தேசியூணில்
குறிப்பாக தோய்த்தனலை கொளுத்தி யாத்தி
கொள்ளவே புகையை நீ கபாலத்தேத்த
கூறுவோம் சன்னியொடு சுரங்கள் தோஷம்
கொள்ளவே விஷங்க ளெல்லாமோடிப் போகும்
கூறியதோர் ருக்ஷக்ஷாடனத்தை கூறி நில்லே (357)

நில்லென்ற யிதுவெல்லாம் நிலையாதோடும்
நீக்கரிய பிசாசு முதல் பூதகெணமெல்லாம்
வெல்லென்ற ஆலையங்கள் விதிகாட்ட
வெருண்டோடு மையனோடு காளி துர்க்கி
வெல்லவே அஞ்சனங்கள் பார்க்கும் போது
வெருளாதே யித்திரியில் தீபமேத்து
அல்லலே யுந்தனக்காய் சொன்னேன் மைந்தா
ஆச்சரியம் யின்னமொன்று அறையுறேனே (358)

அறையுறேன் முன்பொடியி லின்னமொன்று
அப்பனே மாறணத்துக் காதியாக
அறையுறேன் அந்தந்த யினத்தை சேர்த்து
அருத்தவே யுள்ளுக்கு தாக்கு தாக்கு
அறையுறேன் மாறணத்தை யுண்ணித் தாக்கு
அரிந்தியதோ ரின்னபடி யேத்திக் கொல்லும்
தினறமறவாய் சொல்லயில்லை யினந்தா னென்ன
தேசத்தி லுள்ளவர்க்கே திறமாம்பாரே (359)

---

357. தேசி ஊணில் ஏரிய விட்டு புகையை பிடிக்க சன்னி, சுரங்கள், தோஷங்கள் விஷங்கள் எல்லாம் தீரும்.

358. பிசாசு, பூதகணங்கள் ஓடும். ஆலயங்களில் ஐயனார், துர்க்கை, காளி இவர்களுக்கு இந்தத் திரியில் தீபம் ஏற்ற விசேஷமாகும்.

359. முன் பொடியில் உரிய பொருளைச் சேர்த்து மாரணத்தை ஓதினால் தீமைகள் விலகும்.

திறமான செந்து முதல் செடிகள் பூண்டு
செப்பரிய மண்ணோடு கல்லு புல்லு
திறமான தாதுவகை யேது னாலும்
சேத்திடவே அவ்வண்ணம் சிறந்து காணும்
திறமாக முறையை நீ செய்யும் போது
சீக்கிரத்தில் கொல்ல வென்றால் செப்பக் கேளு
அறமான கெவுரியோடு யெட்டி வித்து
அப்பனே கருநாபி மூன்றுஞ் சேரே (360)

சேர்த்தே தாரைச் சிணத்தல் சென்று கொல்லும்
செய்யாட்டால் வெகுதுன்பம் செல்லு நாள்தான்
மாத்துமே மாத்தென்ன வென்றாயியானால்
மகத்தான அகத்தியர்தன் குழம்பை யூட்டு
போத்துமே பேதியாம் பின்பு கேளு
புனைமுருங்கை பட்டையொடு அவிரி வேரும்
யேத்துமே முளகொடு அரைத்து நன்றாய்
எருமையிட தயிர்தனிலே குழப்பி தாக்கே (361)

தாக்கவே தயிர்விட்டால் கடியாகும்
கண்ணுமே பேதியொடு ஆயாசம் தீரும்
தாக்கவே யிடுகரத்தாள் தெறித்துப் போகு
மதனையல்லா யின்னமதிற் களங்க முண்டாம்
தாக்கவே நல்லெண்ணை மத்தஞ் சாறும்
தருவான பழச்சாறும் மூன்று மொன்றாயி
தாக்கவே படிமுக்கா லளந்து விட்டு
சாத்து குறேன் நண்டினிட கொழுப்பை த்தானே (362)

---

360. தன் உள்ளத்தில் வாழும் விஷ உயிர்களாகிய கெட்ட எண்ணங்கள் நீங்கி சிறப்பு உண்டாகும். விரைவில் பலன் தெரிய வேண்டுமானுல் கௌரி எட்டு வித்து கருநாபி

361. முதலியன சேர்த்து செய்ய வேண்டும். இதற்கு மாற்று அகத்தியர்க் குழம்பு பேதி அதிகமானுல் புனல் முருங்கை, பட்டை அவுரி வேர், மிளகு, சேர்த்து அரைத்து தயிரில் கரைத்து தந்தால்

362. பேதி களைப்பு தீரும். நல்லெண்ணெய். பழச்சாறு, ஊமத்தஞ்சாறு முதல்

கொழுப்பான யீயோடு கூழ்ப்பாண்ட வித்து
கூட்டியே வகை வகைக்கு களஞ்சி வீதம்
கொழுப்பான ஆவினொடு கடுக்காயி பூவும்
கொஞ்சமாய் வகைக்கு அரைக்களஞ்சி வீதம்
கொழுப்பான மிவை யெல்லா மெண்ணையிலே போட்டு
குமறவே காச்சிவிடு மெழுகு பதமாக
கொழுப்பான யிவை யொன்றில் வைத்துக் கொண்டு
கொஞ்சமா யுள்ளுக்கு குடுத்திடாயே (363)

கொடுத்திடவே தயிலமது களஞ்சியிடை போதும்
கூறியதோ ரிட்டு வகை யெல்லாம் தீரும்
கொடுத்திடவே சயரோகம் ஈளைகாசம்
குலைந்தோடும் பத்தியமாயி கொள்ளு கொள்ளு
கொடுத்திடவே னாகபற்பம் அரிதார பற்பம்
கூட்டியிதில் னாற்பது னாள் கொள்ளு கொள்ளு
கொடுத்திடவே யுலகத்தில் பிள்ளைகளுக்காக
கூறினேன் வெளியாக கூறினேனே (364)

சிமிள் வித்தை

கூரான சிமிள் வித்தை சொல்லக் கேளு
குறிப்பான சுக்ரவாரமான னாளில்
பேரான மத்தியத்தில் சுழிவில் சென்று
புகழான பொலிபூசை நடத்தியேதான்
ஒரான இருபுரமும் தரித்துப் போட்டு
உடலுக்குள் பாய்ந்திருந்த கட்டை வாங்கி
வேரான கேட்டை பக்கம் அமாவாச தன்னில்
வெகுளாமல் வெட்டுவகை சிமிள்தான் செய்யே (365)

---

363. கூழ்பண்ட வித்து முதலாக பாடலில் சொல்லப்பட்ட பொருள்கள் எல்லாவற்றையும் சேர்த்து தைலமாக எரித்துக் கொண்டு

364. தினமும் களஞ்சி எடைக் கொண்டால் மருந்தீடு. சயரோகம், ஈளை, காசம் ஆகியவை தீரும். பத்தியம் காக்க வேண்டும். நாகபற்பம், அரிதாரபற்பம் ஆகியவை கொள்ள வேண்டும்.

365. வெள்ளிக்கிழமை பிற்பகல் கடந்த பின் பாடலில் கண்ட பொருளை கேட்டை நட்சத்திரம் கூடிய அமாவாசை நாளில் எடுத்து எட்டு வகை சிமிள் செய்க.

செய்யவே சிமிவெட்டும் மூடித் தானும்
சிரப்பான சிமிள்தோரும் நடுவே சேரு
மைத்திட்ட யெட்டுவகை காமத்திரக்கும்
மைந்தனே யந்தந்த முதலெழுத்தை நாட்டு
கைத்திட்ட கருவூரார் முன்னூற்றுள்ளே
காட்டினார் அஷ்டகாம மூலியெட்டும்
மெய்த்திட்ட மூலியதை வாங்கி வந்து
விதமான அங்காய கருவைப் பூசே (366)

பூசியே தனித்தனியே வசிய மாடி
புகழான சிமிள்தோரும் போட்டு மூடு
மாசியே சிமிளை யெல்லாம் துவாரம் போட்டு
வளமான சுழிவினிட நரம்பில் கோத்து
வாசியே முன்சொன்ன வாரந் தன்னில்
மவுனமுடன் உச்சியிலே மசான மேவி
தேசியே வடமுகமாயிருந்துக் கொண்டு
சிறப்பாக ருத்திரனை சேவிப்பாயே (367)

சேவிப்பாயி ரெண்டு லஷசம் முருதான் மைந்தா
தீர்க்கமாய் சோடசத்தோ டெட்டும் சேர்த்து
ஆவிப்பா ருன்னைத்தா னாருங் காணார்
அப்பனே யில்லத்தை வந்து புக்கு
பாவிப்பாய் பரம்பொருளே யென்ற மையங் கொண்டு
பாங்காக புசித்து பதனமாக
சேவிப்பாயி நினைத்ததொரு கற்மத்துக்கு
சிமிள் தனையே மந்திரத்தால் திறந்து மூடே (368)

---

366. பாடலில் கண்டபடி கருவூரார் முன்னூற்றில் காட்டிய அஷ்டகர்ம மூலிகையை வாங்கி வந்து ஐங்காய கருவை பூசி

367. சிமிள்களில் போட்டு அதில் தூவாரம் இட்டு உச்சியில் மயாணத்தில் வட முகமாய் அமர்ந்து ருத்திரனை

368. லட்சம் உரு ஜெபித்து வீட்டிற்கு வந்து நினைத்த கர்மத்திற்கு

மூடவே அஷ்ட்ட கற்மம் மெட்டெட்டுந் தான்
முக்கியமாயி நினைத்தபடி யாரும் பாரு
வாடாதே உனக்கெதிரி யுண்டோ சொல்லு
வணங்குவ ருலகத்தோ ருன்னை கண்டால்
தேடாதே பொருள் தேடியேயலையே வேண்டாம்
சித்தென்ற சித்தெல்லா மிதிலே யாச்சு
ஆடவென்றால் சிமிளுடைய வித்தை மைந்தா
அண்டரண்டம் தாண்டியே யாடும் பாரே (369)

பாரடா மசானத்தில் கருமஞ் செய்யில்
பரிவான அஞ்சனங்கள் மூலி வாங்கி
வாரடா அடங்காத பிசாசு பூதம்
மைந்தனே உனக்கெதிரே வந்துதானால்
ஆறடா மயங்காதே மனதுறுதி கொண்டு
அப்பனே மந்திரத்தை சொல்லக்கேளு
காரடா அங் ரங் சிங் வங் சீயாவென்றே (370)

எண்ணவே வலக்கரத்தால் சிரத்தை சுத்தி
யிடக்கரத்தால் மூன்று விசை கட்டி யோத
பண்ணவே பிசாசோடு பூதகண மெல்லாம்
பதறியே ஓடிவிடும் எதிர் நில்லாது
தன்னலே சூக்ஷரதி சூக்ஷமாக
சாஷ்திரத்தில் வெகு னூலை யாராய்ந்து பாத்து
விண்ணமில்லா சூஷ்திரத்தில் வெளியாய் சொன்னேன்
வீணே நீ திரியாதே விரைந்து பாரே (371)

---

369. அந்தந்த சிமிளை திறந்து மூடி அஷ்டக்கர்மம் முடிக்கலாம். இந்த வித்தை அண்டாண்டம் கடந்து ஓடும்.

370. மயானத்தில் செபிக்கும் போது அஞ்சனங்கள், மூலிகைகள் வைத்து அடங்காத பிசாசு, பூதம் வந்தால் அங் ரங் சிங் வங் சீ ஆ என்று மன உறுதியுடன் சபித்து

371. வலக்கரத்தை மூன்று முறை தலையைச் சுற்றி கட்டி இருந்தால் பூதகணங்கள் யாவும் ஓடும். பல நூல்களை நுணுக்கமாக ஆராய்ந்து இந்த நூலை சொல்லி இருக்கிறேன்.

விரைந்து பாருலகத்தில் பாசாண்டி மெத்த
விள்ளாதே யின்னூலை யவரரறி யாதே
விரைந்து நீ கசடருக்கு கண்ணில் காட்டார்
காட்டினால் ரவிகோடி நரக மெய்தும்
பரந்துநீ பரத்துக்கு மடுக்க மாட்டாய்
பரம் பொருள்தான் கிட்டாது பலன் காணாது
ஓரைந்து மனத்துருமையாயி ஒண்ணை
பத்தியோ ரறிவாயி பூரணத்தி லுரைத்துப் பாரே (372)

பாரடா பூறணமே தெய்வமல்லாமல்
பலபலவாயி சொன்ன தெல்லாம் மொன்று மில்லை
காரடா வரிவு குருவல்லாமல் வேறே
காசினியில் குறுவேறு காண்பதில்லை
ஆரடா யெனைப் போலே உனக்கு மைந்தா
அறிவான புத்திதனை அறிப்பாரார்
கூறுடனே விதியுண்டாயி மதியும் சேரும்
கூர்ந்து பார் கறுவை யெல்லாம் கூறினேனே (373)

கூறினேன் துர்மார்க்க சண்டாளனோடே
கூடியே கூறுகெட்டு அலைய வேண்டாம்
ஆறியதோர் பெரியோரை யடுத்துக்காரு
அனுதினமு மவர் பதத்தில் தொண்டு பண்ணி
பேறுபெற வேணுமென்றால் தாயைப் பூசி
பேசாதே மவுனத்தை யறிவிலூண
தேறவே யென்னூலை தெனிந்து பாரு
செகமெல்லாம் மெய்க்க ஒரு கறுவையைக் கேளே (374)

---

372. இந்த நூலை விரைந்து பார்த்து பயனடைக. குற்றம் உடையோர்க்கு இந்த நூலைக்காட்டினால் நரகம் எய்தும். ஒரு பலனும் கிட்டாது. பூரண கலையிலிருந்து இந்நூலின் உண்மையை அறிவாயாக.

373. பூரண கலையே தெய்வமாகும். அதுவே குருவுமாகும். இதை புத்தியினால் ஆராய்ந்து பார்ப்பாயாக.

374. துன்மார்க்கம் புரியும் இழிந்தோருடன் சேரவேண்டாம். பெரியோர்களை அடுத்து அவர் திருவடிக்குத் தொண்டு செய்து மௌன வித்தையை அறிந்து இந்த நூலை பார்ப்பாயாக.

கேளப்பா ஆலவிழுது நத்தைக் சூறி
கெடியான நரிமிரட்டி கீழ்க்கா நெல்லி
நானப்பா அமுக்கு ஞங் கிழங்கி னோடு
நன்னாறி வெண்கொழுஞ்சி யெட்டுங் கேளு
வேளப்பா தனிதனியே காப்புக் கட்டி
விளங்காதோர் நிற்வாண தூபமாக
சூழப்பா முப்பொலியும் பூசை யேத்தி
சுகமான தீபமொடு தூபங்காட்டே (375)

காட்டியே சாபத்தை நிவர்த்தி செய்ய
காட்டினாற் குருமுனிவர் பூரணத்தில்
மூட்டியே மூலியெட்டும் வேரறாமல்
பிடங்கியே பதனமாயி வைத்துக் கொண்டு
தீட்டியே கிருணந்தான் தினமும் போது
செப்பியதோர் மூலியெல்லாம் முன்னே வைத்து
னாட்டியே சோடச உபசாரத்தோடே
நலமான சாமமெல்லாம் நிவர்த்தி செய்யே (376)

செய்யவே புதுசட்டி தன்னிவிட்டு
சிறப்பாக கரிக்கியதை யெடுத்துக் கொண்டு
உய்யவே மண்ணுளி பாம்பினூணும்
உறுதியாய் கேசறத்தும் முறக்கருவும் கூட்டி
மையாக மத்தித்து சிமிளில் வைத்து
மாயிதிறோதாயி பதம் வைத்து போற்றி
வெய்யவே தம்பனந்தா லஷ'முறு வேத்தி
விளங்கவே வதனத்தில் நங்கென்றாணே (377)

---

375. பாடலில் கண்டபடி ஆலம் விழுது முதலியவற்றை காப்புக்கட்டி தீபதூபம் காட்டி

376. அகத்தியமுனிவர் பூரணகாவியத்தில் சொன்னவாறு வேருடன் எடுத்து வந்து பூஜை செய்து சாப நிவர்த்தி செய்து

377. புது சட்டியில் இட்டு கருக்கி மண்ணூலிப்பாம்பு என்று மறைத்துச் சொல்லப்பட்ட மூலிகை முதலியவற்றை சேர்த்து மத்தித்து சிமிளில் வைத்து தம்பணம் இலட்சம் உரு ஓதி திலகம் இட்டுக்கொண்டு நங் என்று வாசியை நாட்ட

நங்கென்று னாட்டிடவே னாடா தொன்றும்
நலமான பீரங்கி வல்லையமுக கத்தி
அங்கென்ற ஆயுதங்கள் ளொன்றும் னாட
ஆச்சரியம் மண்டலத்தில் யிடிகள் வீழா
சிங்கென்றால் மிகமொடு பிசாசு பூதம்
சிதரியே யோடிடுவார் சத்துருக்க ளெல்லாம்
வங்கென்றால் கலகமெல்லாம் வசியமாகும்
மைந்தனே சுழினையிலே மாட்டிப்பாரே (378)

மாட்டிப்பா யின்னமொரு சூஷசம் சொல்வேன்
மகத்தான வித்தையடா மாட்டிப்பாறு
னாட்டிப்பார் தேன்காலி யிந்திரகோபம்
நலமான திகைப்பூட்டு பூச்சிதானும்
யீட்டிப்பார் வேட்டுவனே டைந்துங் கேளு
யினந்தோறும் மவைவைந்தா யெடுத்து வைத்து
ஆட்டிப்பார் ஆதியாம் பெத்திரந்த பாலன்
அரிந்திட்டு மண்டைக்குலி அரையக் கேளே (379)

அறையுறேனதி னுள்ளே காமிஷங்கள்
அகத்தியே தலைகீழாய் வைத்ததற்குள்
பறையிறேன் சொன்ன கருவைந்துங் கேளு
பாச்சுவாய் கண்டத்தின் வழியதாக
நிரையான வில்வத்தின் குருவி பித்து
னேறான கருமத்து எட்டி மூலம்
மரையுரேன் கருஞ்சுரை சமனாய்க் கொண்டு
அங்கத்தின் ணளிநாலே ஆட்டிவாங்கே (380)

---

378. பீரங்கி முதலிய ஆயுதங்கள் தாக்க சக்தியற்றுப் போகும். இடிகள் வீழா. பிசாசு, பூதம் எதிரிகள் ஓடுவர். வங் என்று செபிக்க வசியமாகும். சுழி முனையில் உறுதியாக நிற்பாயாக.

379. தேன் காலி இந்திரகோபம் முதலாக பரிபாஷையாக சொல்லப்பட்ட பொருள்களை அடுத்து

380. பாடலில் கண்டவாறு செய்து

வாங்கியே யதினுள்ளே யொக்கப் போட்டு
வளமான னாதவிந்து தக்கவிட்டு
பாங்கியே பக்குவாய் யடைத்து மூடி
பரிவான சோடசமாம் பூசை பண்ணி
தாங்கியே பக்ஷணியி லக்ஷசமுரு வேத்தி
தனத் திருந்த காளி கோட்டத்தடியில் தாக்கு
ஓங்கியே நித்தமொரு மண்டலமே சென்றால்
உறுதியாயி பொலிபூசை நடத்துவாயே (381)

நடத்தியே கருவை நீயெடுத்துப்பாரு
நலமான மண்டையது வெளுத்துக் காணும்
முடத்தி யதினுள்ளே வைத்த கருவையெல் லாம்
மொன்றாக ரேசித்து வுருவாயி நிற்கும்
திடத்தியே கருவதற்குள் யிறுந்த மாற்கம்
செப்பாதே யில்லரத்தே சென்று புக்கு
படைத்துமே தீபமொடு தூபங்காட்டி
பராபரை முன் வைத்தனை பணிந்து போத்தே (382)

போத்தியே யக்ஷ்ட்ட கற்மத்தி லெட்டும்
புகழான பக்ஷசணியும் சேத்து வூது
யேத்தியே யெட்டு லக்ஷசமுருந்தா னோடு
என் மக்காள் கருவித்தை யினிமே லுண்டோ
னாற்திசையு முன்னை வெல்லப் போகாதப்பா
நவகோடி சித்துமொரு னொடியிலாடும்
நேத்திரமா நக்கருவை நெஞ்சிலுண்ணி
நினைத்தாலும் கற்மமெல்லாம் நிசமாம் மென்றே (383)

---

381. நாத விந்து சேர்த்து சோடஷ பூஜை செய்து பக்ஷணி இலட்சம் உருசெய்து இவ்வாறு ஒரு மண்டலம் செபித்தால்

382. கரு உயிர் பெறும். இதை தீப தூபம் காட்டி

383. அட்ட கர்மங்கள் எளிதில் செய்யலாம். நவகோடி சித்துக்கள் ஒரு நொடியில் ஆகும்.

நிசமான கருவாலே யெல்லாம் சித்தி
நீலகண்ட ருத்திரனும் பக்ஷசணியுமுந்தர்ன்
வசமாகும் னாதாக்கன் வார்த்தை சொல்வார்
மவுன நந்தி குருவந்து உபதேசிப்பார்
தசமான பூரகமாம் ரேசகத்தி னோடு
தருவான கும்பகமு மூன்று மொன்றாயி
யசைவான யசவையிலே மேல் னோக்கிப் பார்
...று விதிகடந்து நீயப்பால் செல்லே (384)

செல்லவே யின்னமொரு சேதி கேளு
செகச்சால மாடுதர்க்கு செய்யச் சொல்வேன்
மெல்லவே சூதமொறு சீலையும் லிங்கம்
வெள்ளையென்ற பாஷாணம் ஊசிகாந்தம்
கல்லலே கஸ்தூரி மருளுமத்தின் வித்து
கடிதான வெள்ளை காக்கனத்தின் வேரும்
யல்லவே வகை வகைக்கி பணந்தானொன்று
யடைக்கலந்தான் குருவியிலே யறையக் கேளே (385)

கேளப்பா உயிரோடே பிடித்து வந்து
சிறியதின் வயத்துள் மருந்தை யிட்டு
தாளப்பா னூலிழையால் தைத்து மூடி
தருவான பாண்டத்துள் தாக்கப் பின்பு
வேளப்பா வஷ்துவொரு படிதான் மூன்று
விட்டதிலே மேல்மூடி சீலை செய்து
வாளப்பா அடுப்பேத்தி எரித்து நீயும்
வாகான குழம்பு போல வறுதல் காணே (386)

---

384. நாதாக்கள் வார்த்தை சொல்வர் நந்திக்குரு உபதேசம் செய்வார். பூரகம் ரேசகம் கும்பகம் மூன்றும் ஒன்றாகும்.

385. சூதம் மனோசிலை லிங்கம் வெள்ளைப் பாடாணம் ஊசிக்காந்தம் கஸ்தூரி மருள் ஊமத்தை வித்து வெள்ளைக் காக்கரட்டான் வேர் இவை வகைக்கு பனை எடை எடுத்துக் கொண்டு

386. அடைக்கலங்குருவி என்று சொல்லப்பட்ட வயிற்றில் மருந்தை பாண்டத்தில் வைத்து அடுப்பேற்றி எரித்து குழம்பு பதத்தில்

வருதல் கண்டு கருகாமல் லிறக்கியேதான்
வாகான கல்வத்தி லிட்டுக் கேளு
யிருதல் காண னாகாச முட்டை யொன்று
யியப்புலியீயு மதனிடையே சேர்த்து
கருதல் காணாடை யோட்டி சுழல் நீர்வண்டு
கருவான திகைப்புண்டு முறகருவும் கூட்டு
உறுதல் காண பேய்பீற்குச் சாறு மூட்டி
உத்தமனே வெண்சாவல் லுதிரத் தாட்டே (387)

ஆட்டியே மெழுகு பதமான பின்பு
அப்பனே உண்டை செய்து நிழலுலத்தி
கூட்டியே தன்னுக்குள் வேர்வை யாதல்
குருவான வமுரிவந்து வாய் நீராதல்
ஊட்டியே பஞ்சமலஞ்சும் சேத்து
உரைத்துறுட்டி உளுந்துனிட பிறமாணமாக
தாட்டியமா யறுசுவையி லிட்டுத் தாக்கு
தாறணியில் மாதறெல்லாம் தனதா மென்றே (388)

தனதாக யதின்மோக மாகிப்போவார்
தள்ளவென்றால் பிர்ம லபிதள்ள வேணும்
தனதாக யாறாலும் தீர்க்க கூடா
சளமான பெண்மாய்கை சண்டாளரப்பா
தனதாகு மாய்கையினால் யழுந்தினாக் கால்
தருவான ஞான வழி தவறிப் போகும்
தனதாகி மாசையென்ற பாசந்தள்ளி
சார்வான பொறிவைந்தும் தாக்கிப் பாரே (389)

---

387. கல்வத்தில் ஊற்றி ஆகாசமுட்டை திகைப்பூண்டு முதலியனவும் சேவல் இரத்தம் என்ற மூலிகை சாறையும் சேர்த்து அறைத்து

388. மெழுகு பதமானபின் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி அமுரி சேர்த்து உளுந்து அளவு உருட்டிக் கொண்டு

389. அறுசுவையில் தர ஞானம் என்றும் மாது வசமாவாள். தவறான பொருள் செய்து மாயையில் அழுந்தினால் ஞானவழி தவறும்.

தாக்கவே பொறிவைந்து மாற்கமென்ன
தன்னை யரிந்தா லவர்க்கு சார்பு தோணும்
தாக்கவே காயசித்தி பண்ண வேணும்
காமனோய் கொள்ளாம லிருக்க வேணும்
பார்க்கவே பராபரையின் பூசை வேணும்
பக்தி முத்தி வயிராக்கியம் பத்த வேணும்
மாறகவே குருச் சொல்லவறிய வேணும்
மல்லாட்டால் காண்பதரி தரிதாம்பாரே (390)

பிண்டத் தைலம்

அரிதாக யின்னமொரு கருவைக் கேளு
மாதியாங் கடுஞ்சூலில் பெத்திறந்த மைந்தன்
அரிதான சமூலம்தான் நிழலுலர்த்தி
யப்பனே குழித்தயிலம் யிறக்கியேதான்
வரிதான கலசத்தில் வேடுகட்டி யெடுத்து
நீ பதனமாயி வைத்துக் கொள்ளு
வரிதான தயிலத்தில் புனுகு பூரம்
யனைத்துமே சூடனொடு வீரம்னாலே (391)

வீரமாம் பொடித்தந்த தயிலத்திலிட்டு
விதமான சரக்கை யெல்லாம் தோய்த்து வாட்ட
காரமாங் கூட்டியது மெழுகுமாகும்
கடிதான தயிலத்தை றவியில் வைக்க
யாரமாம் முப்பாகும் வேதை பாரு
வழலையிட போக்கிலிது சுறுக்கு மெய்த்த
வீரமாம் சூக்ஷசமடா சொல்லப் போகா
விள்ளாதே யாடுகுற வித்தைகேளே (392)

---

390. தன்னை அறிந்தவர்க்கே இந்த நூலின் உண்மை தோன்றும், காயத்தை சித்தி செய்து காமநோய் தவிர்த்து தேவியை வழிப்பட்டு பக்தி, முக்தி, வைராக்கியம் கொண்டு குருவின் உபதேசத்தை அறிந்து தவம் செய்யவேண்டும்.

391. ஆதி கருவாக உள்ள முப்பூவை நிழலில் உணர்த்தி குழித்தைலம் வாங்கி புனுகு, பூரான் சூடம், வீரம் சேர்த்து

392. ஆகியவற்றை பொடிந்து தைலத்தில் போட்டு சரக்குகளை தோய்த்து வாட்ட மெழுகு ஆகும். தைலத்தின் ரவியில் வைத்தால் உப்பாகும். இதனால் வேதை செய்யலாம்.

வித்தையிலே கருவித்தை யதீதமப்பா
விளம்புகுறேன் மத்ததெல்லாம் வித்தையல்லா
மெத்தவே மந்திரத் தியான மூலம்
மேலான சக்கரங்கள் அஷ்ட்ட கற்மம்
கொத்தான கருவினில் லாடுங் கூத்து
கூறுவேன் னுடலோடு உயிருமாச்சு
வித்தையாம் தொட்டிடவே சகலவித்தும்
விளையாடும் மெந்தெந்த கற்மஞ் செய்யே (393)

செய்யவே கருத்தொட்டு சூக்ஷசமாக
செப்புறேன் னஞ்சனத்தை செப்பக் கேளு
செய்யவே சாதிக்காயி பண்ணிக் கொம்பு
தேவாங்கு பித்துடனே கழுதை கண்ணும்
செய்யவே மின்வெட்டி சமனாய் கொண்டு
சிறப்பான தயிலத்தா லரைத்து மைபோல்
செய்யவே முன்சீலை தன்னிலூட்டி
திரித்துமே காரெள்ளின் னெண்ணை கேளு (394)

எண்ணைதனை வார்த்ததினில் தீப மேத்தி
யிதமான யானைக்கண் சட்டித்தூரில்
யுண்ணவே பாதாள மூலிச் சாத்தை
ஆட்டியே முக்கவுரின் மேலே வைத்து
பண்ணவே மையெரித்து வாங்கும் போது
அஞ்சனா தேவியைநீ தோத்திறமே செய்து
விண்ணிலுள்ளோர் கொண்டாட மையை வாங்கு
மேதினிலுள்ள தெல்லாம் காணுங்காணே (395)

---

393. இந்தக் கருவித்தை மிகவும் மேலானது. கரு சேர்ந்தால் உடல் உயிர் போல் எல்லாம் சித்துக்களும் ஆடலாம்.

394. சாதிக் காய் முதலாக பாடலில் பரிபாஷையாக கூறப்பட்டுள்ள பொருள்களை சம எடை எடுத்து தைலத்தால் அரைத்து சீலையில் ஊட்டி எள் எண்ணெயில்

395. தீபம் ஏற்றி மேல் சட்டியில் பாதாள மூலீ சாறு தடவி கவிழ்த்து மூடி தேவியை வணங்கி மையை எடுத்துக் கொள்வாயாக

காணவே யார்கையி லிட்டாலும் ஓடும்
கறுப்பான கம்புளியை மூடிப்பாரு
பூணவே வெகு சுறுக்கு அஞ்சனந்தா னப்பா
புகலாதே பூமிதனிலுள்ள பேர்க்கு
யாணவே யஞ்சனங்கள் முதலாயுள்ள
அப்பனே யேதொரு கற்மஞ் செய்யில்
காணவே யுலகத்திலுள்ள பேர்கள்
காணாமல் லுருமாத்தங் கருவைக் கேளே (936)

உருமாற்றக் கரு

கேளப்பா குழியானை தேசிபித்தம்
கெடியான கலத்தேரை பொடியுங் கூட்டி
வேளப்பா யிலை மூன்றும் சமனாய் கொண்டு
விருதான கல்வத்தி லிட்டுக் கேளு
சூளப்பா தயிலத்தி லரைத்து வைத்து
சுகமான சீலையிலே ஆட்டியேதான்
வாளப்பா திரியாக திரித்துக் கொண்டு
மைந்தனே சித்தாமை யோடு வாங்கே (397)

ஓடதனை வாங்கியதில் சித்தெரண்டத் தெண்ணை
யூத்தியே தீபத்தை யேத்தி நன்றாயி
யாடதனை கருகூளை சட்டி தன்னில்
அப்பனே பேய்ப்பீற்கம் சாத்திலூட்டி
வாடதனை முக்கவரின் மேலே வைத்து
வளமாக யெரித்து நீமை வாங்கி
கேடதனை யம்மென்று திலதம் போட
சிவ சிவா யுருமாத்தம் செப்பொ ணாதே (398)

---

396. இதை அணிந்தால் எல்லாப் பொருள்களும் தெரியும். இனி உருமாற்று மையை கேட்பாயாக.

397. தேசீ ரத்தம் முதலான மாற்றுப் பெயர்கள் குறிக்கும் உண்மையாக பொருள்களை எடுத்து கல்வத்தில் இட்டு ஆட்டி சீலையில் ஊட்டி

398. சிற்றாமணக்கு எண்ணெய் தீபம் இட்டு பேய்பீர்க்கு சாறு தடவிய சட்டியால் மூடி மையை எடுத்து திலகம் இட்டால்

உண்ணாது தேவர் முதல் ரிஷிகள் சித்தர்
ஓகோகோ காணரிது காணவென்றால்
நன்றா ஆள்காட்டி மையை நீயும்
னாட்டிடவே காணுமப்பா நலமாஞ் சொன்னோம்
பண்ணான பண்ணறிந்து மையைப்பாரு
பரியாச மென்றுலகில் பகரவேண் டாம்
எண்ணாத கவலை யெண்ணி யிருக்க வேண்டாம்
என்னூலை பாத்து மக்காள் பிழைத்திடீரே (399)

பிழைத்திடவே மக்களுக்காயி வேண்டி வேண்டி
பிலமான சித்தருடன் வாது பேசி
பிழைத்திடவே யவர்களிட சாபம் தீர்த்து
பேணியே னான் வெளியாச் சொன்னேன் மைந்தா
பிழைத்திடவே மைத்தமைத்த னூலைப் போலே
பிதறாதே முன்சொன்ன கருவைப் பாரு
பிழைத்திடவே யின்னமொரு மாற்கம் சொல்வேன்
பேறான கரும்பூனை தன்னைக் கேளே (400)

தன்னையே யுலகத்தில் மெத்த மெத்த வுண்டு
சாதகமா யாறாய்ந்து பாத்து நீயும்
மன்னையே தற்சாய்கை யில்லா வண்ணம்
மறிந்துநீ பூனையொன்று பிடித்து வந்து
நன்னையே நற்கதவி கிழங்கினோடு
நலமான யேரளிஞ்சி மூலம் வாங்கி
தன்னையே வாகையிட பிசினுங் கூட்டி
தருவாக யிவையெல்லாம் நிழலுலர்த்தே (401)

---

399. தேவர், சித்தர் முதலியோரும் உருவத்தைக் காண முடியாது. ஆள்க்காட்டி மையை அணிந்தால் மீண்டும் உருவத்தைக் காணலாம்.

400. சித்தர்களின் சாபத்தைப் போக்கி இந்நூலை செய்திருக்கிறேன். பரிபாஷையால் மயங்காமல் கருத்தைலத்தை எவ் உயிர்க்கும் தீங்கு செய்யாமல் செய்து முடிப்பாயாக.

401. கரும் பூனை என்று மறைத்து சொல்லப்பட்ட மூலிகையை எடுத்து வந்து வாழைக் கிழங்கு, அழிஞ்சில் விதை, வாகை பிசின். இவை சேர்த்து நிழலில் உலர்த்தி

உலத்தியே சமனாகப் பொடித்து தூளாயி
உத்தமனே முன்தயிலம் தன்னாலாட்டி
யலத்தியே மயனம் போலாட்டி வாங்கி
யப்பனே சற்வாங்கம் பூசிச்செல்ல
நலத்தியே தற்சுறூபம் மாருங் காணா
நலமான பூனையைப் போல காணும் போக்கு
பிலத்தியே கருங்குரங்குதனை யவ்வண்ணம்
பேறாக உலத்தி முன்தயிலம் கூட்டே (402)

கருங் குரங்கு

கூட்டியே யரைத்து மேல்பூசிச் செல்ல
குரங்கென்றும் குவலையத்தோர் கூறுவார்கள்
மேட்டியே தற்சுறூபம் மாகக் கேளு
விதமான கடுகோடு கூள்பாண்ட வித்தும்
யாட்டியே யாள்காட்டி மூன்று மொன்றாயி
யப்பனே உலத்தியே தயிலம் வாங்கி
பூட்டியே தூவாலையிட்டு சிலத்தில் மூழ்க
வொளியாது காணுமுன் தேகமாமே (403)

தேகமாம் சொல்லுகுறேன் யின்னங்கேளு
செப்பாதே தம்பனமாம் திலரதம் பாரு
யூகமே நிலக்கூடை யுளமாங் காடை
வுத்ததொரு பொற்கையான் விஷ்ணுக கிருந்தி
பாகமே கட்டிக் கொடி மூலி ஐந்தும்
பரிவாக நிழலுத்தி தூளாயிப் பண்ணி
தேகமே முன்தயிலம் தன்னாலூட்டி
சிவந்ததொரு சீலையிலே யூட்டி யூட்டே (404)

---

402. முன் தைலத்தால் ஆட்டி உடம்பில் பூசிக் கொள்ள தன் உருவம் பிறர்க்கு பூனையைப் போல் தோன்றும். இது போல் கருங்குரங்கு என்னும் மூலிகையை முன் போலவே தைலத்தில் பக்குவம் செய்து

403. உடலில் பூசிக் கொள்ள தன் உருவம் குரங்கு போல் தோன்றும். கூழ் பாண்ட வித்து முதலியன சேர்ந்த தைலத்தை தேய்த்து நீரில் மூழ்கினால் பழைய உருவம் தோன்றும்.

404. நீலக்கூடை முதலான மூலிகைகளை நிழலில் உலர்த்தி முன் தைலத்தால் ஆட்டி

ஊட்டியே திரியாக்கி யகவிட்டு
யுயர்வான நல்லெண்ணை தீபமேத்தி
மாட்டியே கபாலத்தில் மையெரித்து
வாங்கு மைந்தனே தாயபதத்தில் வைத்துப் போத்து
னாட்டியே மந்திரந்தான் நங் மங் கென்று
நலமான லக்ஷமுறு வோதி நீயும்
மாட்டியே நெத்திதனில் திலரதம் தீட்டவர்கள்
உலகமெல்லா மடங்கிப் போமே (405)

மோடி வித்தை

அடங்குமே அடங்குமே புவியடங்கும் சபையடங்கும் மைந்தனே
மண்ணும் விண்ணுமடங்கிப் போகும்
மடங்குமே மிருகமொடு பிசாசு பூதம்
மடங்காத சத்துருக்க னடங்குவார்கள்
யடங்குமே வெளியடங்கி யொளிதான் வீசும்
யப்பனே மதம் மடங்கி போதம் பாறு
திடங்கியே கருவித்தை யாரும் சொல்லார்
திரமான சிஷசருக்கு தெரியச் சொல்லே (406)

தெரியவே யின்னமொன்று சொல்லக் கேளு
தேசத்தார் ரறியாத மோடி வித்தை
தெரியவே யறுபத்து னாலு வித்தை
செப்பினாரதில் தெளிந்து செப்பக் கேளு
தெரியவே சித்தர் தான் செய்யும் மோடி
திரமான னாலுவகை செப்பக் கேளு
தெரியவே மோடி செய்யும் வித்தை யெல்லாம்
செப்புறேன் கருத்தோடு திரமாய்ப்பாரே (407)

---

405. நல்லெண்ணெயில் தீபம் ஏற்றி மை எடுத்து நங், மங் என்று லட்சம் உரு செய்து திலகம் இட உலகம் அடங்கும்.

406. புவி அடங்கும், சபை அடங்கும், மிருகம், பீசாசு, பூதம், சத்துருக்கள் அனைவரும் அடங்குவர். நீ மதம் அடங்கி வாழ்வாயாக. கரு வித்தையின் உண்மையை அருள் நெறியில் நிற்கும் சன்மார்க்க சீடர்களுக்கு மட்டுமே சொல்லுவாயாக.

407. இனி மூடி வித்தை ஒன்றை கேட்பாயாக. அறுபத்து நான்கு வித்தைகள் இதில் உண்டு. இதில் சித்தர்கள் செய்யும் முக்கியமான நான்கு வித்தைகளை கருத்தோடு கேட்பாயாக.

திறமான மோடியிலே கருவைக் கேளு
    தீபாஞ்ச கன்னியிட சாம்பல் வாங்கி
குறமான குசவனிட சூளைச் சாம்பல்
    கூட்டியே கலந்துந் வேறே வைத்து
வறமான யின்னமொன்று சொல்லக் கேளு
    வப்பனே பச்சோந்தி திசை மயக்கி பூண்டு
நலமான தேளோடு நட்டு வாக்கால்
    நலமான கருங்குளவியாம் குளவி யெண்ணே (408)

குளவியாம் வண்டோடு தும்பி யெல்லாம்
    கூட்டியே தயிலத்தில் பிசறி நன்றாயி
குளவியாம் ரவியிலிட்டு உலர வைத்து
    குமறவே யிடித்துநீ தூளாய்ப் பண்ணி
குளவியாம் செந்தொட்டி பூனைக்காலி
    தொட்டிதான் செம்டுருச் சுனையினோடு
குளவியாம் கடலான சொரியும் வாங்கி
    குறிப்பான பொடியிலே சேத்துக் கொள்ளே (409)

கொள்ளவே மோடி செய்யும் கருவிதாச்சு
    கூறுவேன் முன்சொன்ன மசன சாம்பல்
மெள்ளவே சமனாக சேத்துக் கொண்டு
    விதமான குடுக்கையிலே யடைத்து வைத்து
உள்ளபடி யின்னமொன்று சொல்லக் கேளு
    யுத்தமனே பத்திரகாளி மிதில்
கொள்ளவே மேல்சேந்த வழுக்கினோடு
    குறிப்பான பெலி பீடத்து திரம் வாங்கே (410)

---

408. தீ பாய்ந்த கன்னி என்னும் மூலிகையின் சாம்பல், முதலாக பாடலின் மறைவாக சொல்லப்பட்ட மூலிகைகளை

409. தைலத்தில் கூட்டி ரவிபில் உலர்த்தி செந்தொட்டி முதலியவைகளை சேர்த்து

410. முன் சொன்ன மயான சாம்பல் சேர்த்து குடுக்கையில் அடைத்து வைத்து பத்திரக் காளி பலி பீடத்துள் உதிரம் என்ற மூலிகை சாறு சேர்த்து

வாங்கியே சுடுகாட்டு கரியினோடு
வளமான தயிலத்தா லரைத்து முன்போல்
பாங்கியே சிமிள்தன்னில் வழித்து வாங்கி
பரிவான சிரசோட்டில் காளி செய்து
தாளியே தம்பனத்தை சுத்திகட்டி
சார்வாக வோரிடத்தில் தாவித்தே தான்
வோங்கியே வதின் மேலே யிருந்து சேவி
உத்தமனே மத்தபேர் வித்தையாடே (411)

வித்தையாம் மரவாக யிறுந்து சேவி
விதமான பேர்களுக்கு சொல்லக்கேளு
வித்தையாம் சபைக்கட்டு திலரதம் போடு
மெய்யெல்லாம் கருத்தொட்டு விபூதி பூசு
வித்தையாம் சாறாய மேரு வாங்கு
விதமான பெலிபூசை நடத்தியேதான்
வித்தையாம் யெறுவிலே தகடு வைத்து
வேணவே பொருள் வைத்து யெடுக்கச் சொல்லே (412)

உலகத்து மோடி

சொல்லலே யெதிருளி வருவானால்
சுருதியாம் புளியிலையும் கூழாங் கல்லும்
மெல்லவே பச்சரிசி மூன்று மொன்றாயி
வரவியே முன்பொடியில் கலந்து வீசு
யல்லவே யுச்சாடணத்தை சொல்லி வீசு
அப்பனே தேன்காலி வண்டு தும்பி
சொல்லவே மேலையெல்லாம் பறந்து கொட்டும்
துடிதுடித்து நில்லாமல் ஓடிப் போவான் (413)

---

411. கருத்தைலத்தால் அறைத்து சிமிளில் வைத்து காளி உருவம் செய்து ஓர் இடத்தில் தாபித்து

412. அருள் அமுதம் கொண்டு பூசை செய்து எருவில் தகடு வைத்து ஒருவரை எடுக்கச் சொன்னால்

413. அவர் வரும் போது புளி இலை கூழாங்கல், பச்சை அரிசி, மூன்றும் கலந்து முன் பொடியில் சேர்த்து உச்சாடணத்தில் சொல்லி வீசினால் தேனீ வண்டு, போல் கொட்டும்

ஓடாமல் பின்னுமவன் வந்தானாஞல்
உறுதியாயி பொடியிலே நஞ்சை யூட்டி
வாடாதே மாறணத்தை சொல்லி வீசு
வந்த வந்த பேர்களெல்லா மாண்டு போவார்
னாடாதே னான் திடவான் னென்று சொல்லி
னாடிவந்தால் மோடியை நீ பார்க்கச் சொல்லி
ஆடாதே காளிதனை யுச்சாடிக்க
யக்ஷிக்குங் கொண்டேரும் மலைவர தானே (414)

அலையவே யெண்திசையுங் கொண்டு மீண்டு
யடியிலே பதித்த சிறு கோட்டுக் குள்ளே
மலையாதே கொண்டுவந்து மறைத்து வைக்கும்
மகத்தான சித்தர்களும் காண மாட்டார்
சிலையான எதிராளி சிந்தை னொந்து
தியங்கியே கனகாலில் தெண்டன் செய்து
கடையான கடைப்பிள்ளை யென்று வந்தால்
கருத்துகந்து நீயவர்களுக்கு காணச் சொல்லே (415)

காணவே உலகத்தோர் வைக்கும் மோடி
கருதி நீயெடுக்க வென்றால் கருவைக் கேளு
பூணவே யெட்டியோடு பெய்தேதான் பட்டை
புகழான திகைப்புண்டு மறுகம் வேறு
மாணவே முறகறுவும் மசான சாம்பல்
மப்பனே தேசிரத்தம் மாட்டிப்பூசி
பூணவே முறகருவும் பந்தஞ் செய்யது
உறுதியாயி மோடியை நீயெடுத்திடாயே (416)

---

414. மேலும் அவன் பொருளை எடுக்க வந்தால் மாரணத்தை ஓத அவர்கள் எண்ணம் மாறும்

415. காளியை உச்சாடணம் செய்தால் நீ கேட்டப் பொருளை கொண்டு வந்து சேர்க்கும். அதை சித்தர்களும் காண மாட்டார். உன்னை நயந்து அவர் வேண்டினால் காணச் செய்வாயாக.

416. மற்றவர்கள் வைக்கும் மூடியை எடுக்க பேய்தேத்தான் பட்டை முதலிய பொருள் களை சேர்த்து முறிக்கருவை செய்து வெற்றியுடன் எடுப்பாயாக

எடுத்திடவே யின்னமொரு மோடிவித்தை
யியம்பிறேன் யென்மக்காளதித மாகும்
எடுத்திடவே காஞ்சுரையின் மரத்தை வாங்கி
யிதமான கழுவொன்று செய்யது நீயும்
எடுத்திடவே குழிவெட்டி தூபதீபம் யேத்தியே
தம்பனத்தால் கழுவை னாட்டி
எடுத்திடவே பண்ணியொன்று பிடித்து வந்து
யிடித்திடுவாய் கழுமுனையிற் யிறுத்திப் போடே (417)

யிடித்திடவே யென்திசையும் ஆடு கோழி
யியல்பான பெலியிட்டு யியம்பக்கேளு
பரித்திடவே கழுவின் மந்திரத்தை யோதி
பச்சையா மண்கலசமெட்டு வாங்கி
ஒருத்திடவே கருவை யதின்னுள்ளே பூசி
யூட்டி வைத்த பொடியிலே கொஞ்சம் போட்டு
யிருத்தியே ருத்திர தியான மோது
வியல்பான கலசத்தி னுருத்தானூறே (418)

னாறாகு மோதியே கழுவை சுத்தி
னோக்கியே யெண்திசையும் வைத்துப் பின்பு
வீறான கழுவுக்கு வியல்பாய் கேளு
விறுதான யெட்டுவெடி சமாதி செய்யது
வாறான கருத்தொட்டு பூசை செய்யது
மைந்தனே யரையளவு குழிதான் வெட்டி
யாறுதானது நிரைய சிவத்தை வாற்து
யறையிறேன் வெடியெட்டும் புதைத்திடாயே (419)

---

417. பாடலில் கூறப்பட்டபடி காஞ்சுரை மரம், பன்றி என்று மறைமுகமாக கூறப்பட்ட மூலிகைகளையும்

418. தீய எண்ணங்களை விலக்குதலாகிய வலியை இட்ட பின் பச்சை மண் கலசத்தில் முன் பொருளை வைத்து

419. பாடலில் கண்டவாறு அரை அளவு குழியில் சிவத்தை வார்த்து நாட்டி

புதைத்திடவே முகமெல்லாம் தெரிய னாட்டு
புகழான வதுக்கம் பால் திரனைப் போட்டு
விதத்திடவே வினாயகனை யதின் மேல் வைத்து
விதமான தீபநெய்வேத்தியம் செய்து
மதித்திடவே யெரிசுடலைக் கொள்ளி வாங்கி
மைந்தனே தீக்கொனத்தி முன்னே போடு
வுதித்திடவே யதுக்கப்பால் சொல்லக்கேளு
உத்தமனே மூன்று குடமொன்றா வையே (420)

ஒன்றான பச்சையாக யுறுதியாய் வாங்கி
நீ கருவைப் பூசி
பண்டான குடந்தோறும் மசானச் சாம்பல்
பரத்தியே யறுகோணமிட்டு நீயும்
நன்றான ருத்திரி தியானமோது வந்திருப்பார்
நவகோடி கணங்கள் சூழ
நன்றான குடத்திலே ருத்திர பார்வை
னாட்டியே பெலிபூசை நடத்தி லையே (421)

வைக்கவே குடத்தின் மேல் குடத்தை வைத்து
வரிசையாய் ஆயுதங்கள் சூழ னாட்டி
யெய்க்கவே எதிராளி வந்துன் மீது
எத்துமே கழுமோடி எடுப்பானாகில்
உய்க்கவே மசானத்தில் சாம்பலோதி
உறுதியா யவன்மேலே யெறிந்து நில்லு
செயக்கவே கலசமெட்டும் தெரித்து போகும்
செந்துகளா யதிலிருந்து சிதறும் பாரே (422)

---

420. வினாயகனை வைத்து நைவேத்தியதுடன் வழிபட்டு

421. பாடலில் கண்டவாறு குடங்கள் வைத்து

422. நாட்டிய பின் எதிராளி வத்து எடுத்தால் கலசங்கள் உடைந்து விஷ ஜெந்துக்கள் வெளிபடும்.

சிதறுமே வண்டுமுதல் குளவி தும்பி
    தேளோடு கடந்தையள தான் சென்று கொல்லும்
பதறியே திருப்பியவன் வாது பேசி
    பாத்திடவே கழுவந்து தொட்டானாகில்
கதறியே மாண்டிடுவான் உதிரம் சிந்தும்
    கழுவிட்டு மிப்புறத்தால் வந்தால் கேளு
சதிராக வினாயகனை தனமோடி வாங்கில்
    சாத்துகுறேன் வெடியெட்டும் சமாதமாமே (423)

சமாறதமாயி வந்தவர்கள் சாவார் பாரு
    தாண்டியே குடமோடி தன்னை வாங்கில்
சமார்தமாயி பின் சாம்பல் தன்னை வீசு
    கண்ணுமே யாயுதங்கள் கண்ணுமப்பால்
சமாற்தனதான் தொட்டிடவே குடந்தான் மூன்று
    மதகரந்து விடும் பூதகணம்தான ரெம்புந்
திமிற்தமாம் செத்திரந்து போவார் சொன்னேன்
    திறமாகும் மோடிவித்தை செய்யதுபாரே (424)

ஆகாச மோடி

பாரப்பா பாவை செய்யது பார்க்கும் லோகம்
    பதினாலும் தேடுகிலோர் காண மாட்டார்
ஊரப்பா சுடுகாட்டில் ஒளிக்கும் பாலை
    ஒகோகோ உன்னையவன் வணக்கம் செய்தால்
காணப்பா ருத்திர தியானத்தாலும்
    கருவான மையாலும் காணச் சொல்லு
ஆரப்பா யின்னமொன்று சூஷமாக
    அறையிறேன் னாகாச மோடிதானே (425)

---

423. மீண்டும் சென்றால் மனம் மாறும்

424. மயக்கம் உண்டாகும். பூத கணங்கள் தெரியும்

425. பாவை செய்து பார்த்தால் உலகத்தோர் காணமாட்டார். ருத்ர தியானத்தால் கருமையால் மட்டுமே காணலாம்.

மோடியாம் தகடு முதல் கோழி முட்டை
முளையான யெலுமிச்சம் பழத்திலாதல்
னாடியே கருவாலை யுருவைச் செய்து
நலமான தியானத்தில் பரக்கச் சொல்லு
ஓடியே பரந்தாலும் யெடுக்க மாட்டான்
உத்தமனே சிரசோடு கையிலேந்து
யாடியே காளிகா தேவி யோது
யனைத்திடவே சிரசோட்டின் மோடி தானே (426)

காணயிலே வாரியெறைக்கும் கட்டாகச் சொல்லுருகிறேன்
கருதிக்கேளு ....
பூணலே கட்டு கொடியிலையி னோடு
யுத்தமனே தவளநுறை யொண்ணாயி கூட்டி
பூணவே முன் தயிலம் தன்னாலாட்டி
பூசியே வாறுதியில் சென்று நீயும்
தோணவே செலத்திலே தம்பனமே செய்து
சொல்லுவேன் மேருவொடு பாலை கேள் (427)

அக்கினி மோடி

பாவையை நிறுத்தி யதின்மேலே நீயும்
பருவான மேருவைத்து யெடுக்கச் சொல்லு
தேவையே தேவனா மெடுப்பார் பாரு
தேசத்தில் மானிடரோ செய்யப் போறார்
மேலவே அக்கினியன் மோடி கேளு
விதமான தழலெரிப்பாய் விசாலமாகத்
தாவே யெண்ணையொரு நெய்தான் சாடி
தாக்கவே அக்கினியின் ணாடுவே தானே (428)

---

426. வாலை உருவை தகடு முதலியவற்றில் செய்து காளிகா தேவி மந்திரத்தை ஜெபித்து...

427. வாரி இறைக்கும் முறையைச் சொல்லுகிறேன் ...... தவளையின் நுரை முதலியவற்றை முன் தைலத்தால் ஆட்டி நீரில் தம்பணம் செய்து

428. பாவையை நிறுத்தி வைத்தால் அதனை யாரும் எடுக்க முடியாது

தானென்ற அக்கினியின் னடுவே மோடி
 தாக்கியே மானிடரை யெடுக்கச் சொல்லு
யேனென்ற வுலகத்தோ ரெதுத்துலந்தால்
 யெடுப்பாரே யின்னமொரு சூக்ஷசங் கேளு
பானென்ற கல்தாழை வேரினோடு
 பரிவான பச்சோந்தி சமனாய்க் கொண்டு
கானென்ற யிடித்துலத்தி தயிலம் வாங்கி
 கருவான முன்தயிலம் கலந்து கொள்ளே (429)

கொளவே சறுவாங்கும் பூசியே தான்
 குறிப்பான வக்கினி தம்பனத்தை யோதி
மெள்ளவே அக்கினியில் நடக்கலாகும்
 விறுதான மோடி சென்று யெடுக்கலாகும்
துள்ளவே திறகமெல்லாம் யெண்ணைச் சீலை
 சுத்தியே தீக்கொளத்தி விட்டாலுந் தான்
கொள்ளவே காது குளுந்து காணும்
 கூறுவோ மக்கினி தம்பனமுமாமே (430)

ஆமப்பா யின்னமெத்த மோடியுண்டு
 யமந்தாரே சாலவித்தை யதீதமாகும்
னாமப்பா மோடி செய்யும் வித்தையெல்லாம்
 னாட்டினோம் கருத்தோடு நன்றாய் பாரு
தாமப்பா கருவுடைய சூஷசம் கண்டால்
 சாத்தியதோர் அஷ்ட்ட சித்தும் தானேயாடும்
காமப்பா சித்தர் செய்யும் வித்தை யெல்லாங்
 காட்டினேன் உலகத்தில் கருதிச் சொல்லே (431)

---

429. இது போல அழலின் நடுவில் வைத்தாலும் யாரும் எடுக்க மாட்டார். கற்றாழை வேர் முதலியன சேர்த்து தைலம் வாங்கி முன் தைலத்தோடு சேர்த்து.

430. உடலில் பூசி அக்னி தம்பணத்தை ஓதி அக்னியில் நடக்கலாம். மோடி எடுக்கலாம். எண்ணெய் ஊற்றி கொளுத்தி விட்டாலும் உடல் எரியாது

431. இது போல அநேக வித்தைகளும் உண்டு. எந்த உயிரையும் கொலை செய்யாமல் மறைபொருளாக கூறப்பட்டுள்ள கரு தைலத்தை செய்து முடித்தால் இவை அனைத்தும் சித்தி ஆகும்.

கருதியே சொல்லுகிறேன் வாய்வு தம்பனங்
காரணமாய் சூக்ஷசமடா கண்டு பாரு
சுருதியே முன்தயிலம் பச்சோந்தி தயிலம்
சூட்டியே மெய்யெல்லாம் பூசியேதான்
பருகியே பூமியிலே மசானச் சாம்பல்
பரத்தியே மேலிருந்து வாசி மூலம்
வுருகியே யாகாச மூலி வாயி
லூட்டியே செபித்திடவே உயரத் தூக்கே (432)

தூக்கவே யாச்சரியம் வித்தை மைந்தா
சொல்லியதோர் பச்சோந்தி யெல்லாங் காணும்
தூக்கியே யின்னமொரு வித்தை கேளு
துடியான எலுமிச்சம் பழத்தை வாங்கி
தாக்கியே சூதமுடன் தயில மூட்டி
சொல்லரிய விபூதி தொட்டு முன்னே போட
ஆக்கியே சபையிலே குதிகொண்டாடும்
மாகாகா ருத்திர தியான மோதே (433)

தியானமாம் சுடலையிலே யாடும் மாய்கை
செப்பாதே யிருந்து போராடுவார்கள்
மசானமாம் சாம்பலிலே தம்ப மூட்டி
மாயிடவே நங் மங்ஙென் றோதே
யபானமாம யழங்கி கூடும் கூத்தாடாது
மப்பனே வறுணசல மழைக்ககேளு
தீயானமாங் கபாலத்தில் சிலத்தை வாங்கி
சிறப்பான முறகருவாம் தயில மூட்டே (434)

---

432. இது போல் பச்சோந்தி என்று கூறப்பட்ட மூலிகையின் தைலத்தை உடம்பெல்லாம் பூசி வாசியை மேல் இழுத்து ஆகாச மூலியை வாயில் அடக்கி வாயு தம்பணத்தை ஜெபிக்க உயரத் தூக்கும்.

433. எலுமிச்சை பழத்தில் சூதம் கருத்தைலம் சேர்த்து சிறப்பாக சொல்லப்பட்ட விபூதியில் தொட்டு முன்னே போட்டால் கொதிக்கும் ருத்ர தியானம் ஓதுக!

434. நங், மங் என்று தம்பணத்தை சபித்தால் கூத்தாடாது. இனி மழை நீர் வருவிக்கும் வித்தையைக் கேட்பாயாக.

தயிலமாம் பச்சோத்தி தயிலத்தோடு
தருவான குரும்பை நீர் தவளை நீரும்
பயலாமாம் பூதியதில் கொஞ்சம் போட்டு
யழைத்திடவே வருண மந்திரத்தை யோதி
கயிலாமாம் நீர்வாரி யுசர வீசி
கண்டபேர் வறுணசலம் பொழியு தென்பார்
மயிலமாம் வித்தையிது கண்டு பாரு
மகாரமிட்ட பூமியினா லடிங்கிப் போமே (435)

அக்னி வினோதம் மானவினோதம்

அடங்கியே முப்புரத்தை யெரித்த மூலி
யப்பனே பச்சோந்தி தயிலனோடு
துடங்கியை மின்வெட்டி புழுகுங் கூட்டி
சொல்லியதோர் முன்தயிலம் ஊட்டித் துளாயி
தடங்கியே மசானக்காட்டு சாம்பலூட்டி
சாலித்தி காளிகா தேவி யோதி
யடங்கவே சாத்திலே பொடியைத் தூவி
வப்பனே யக்கினி தானுரைக்கும் பாரே (436)

உரைக்கவே நினைத்த விடமெல்லாம் பத்தும்
ஓகோகோ உலகமெல்லாம் பத்து தென்பார்
யரைக்கலே முன்சொன்ன பொருளினாலே
யடங்குமே யின்னமொரு வதிசியங் கேளே
உரைக்கவே முன்சொன்ன பூதி வாங்கி
யூட்டியே முன்தயிலம் பச்சோந்தி தயிலம்
நரைக்கவே தம்பனமாங் காளியோதி
னாற்திசையு மாகாச மண்ணில் போடே (437)

---

435. கருத் தைலத்துடன் பாடலில் மறை பொருளாக சொல்லப்பட்ட பொருள்களை சேர்த்து வருண மந்திரத்தை ஓதி நீரை மேலே வீசினால் மழை நீர் தோன்றும்

436. முப்புறத்தை எரித்த மூலிகை முதலியவற்றோடு தைலம் சேர்த்து மயாணச் சாம்பல் ஊட்டி காளிகா தேவி மந்திரத்தை ஓதி எரிந்தால் அக்னி பற்றும்

437. முன் சொன்ன விபூதியில் காளி மந்திரத்தை ஓதி ஆகாசம் மண் ஆகியவற்றில் போட்டால்

பாவை வினோதம்

போடவே புவியடங்கும் சபையடங்கும்
புகழான கண்கட்டு வித்தையாகும்
ஆடவே களரியிலே யிருந்தோரெல்லாம்
ஆச்சரிய மவுனவித்தை யதீதமென்பார்
பாடவே பாவையொன்று பண்ணி நீயும்
பரிவான சிவந்திருந்த சீலை வாங்கி
நீடவே தயிலத்தை தோய்த்து நன்றாயி
நீதானமாய் பாவையின் மேல் போத்திடாயே *(438)*

போத்துமே பரித்தியிலை செம்பருத்திப் பூவை
புகட்டியே பாவையைத்தான் வெட்டும் போது
யறிந்திடவே யுதிரமது யாறு போலே
மய்யனே ஆளை வெட்டி போட்டே னென்பார்
பகுந்துமே வாழையிட தண்டை வாங்கி
பகருவேன் முன்போலே கருவைப் பூசி
யறிந்து நீ செம்பருத்தி பூவை யூட்டி
உத்தமனே கத்தி கொண்டு அறுத்திடாயே *(439)*

அறுத்திடவே செந்துவைப் போல சுரூபங் காணும்
யுறைகிறேன் யின்னமொரு வித்தை மைந்தா
யறுத்திடவே முப்பிரி னூல் தன்னை வாங்கி
மகத்தான கருத்தொட்டு மாட்டிப்பூசி
கருத்திடவே யடியோடு நுனியும் பாரு
கசக்காதே மேல்நோக்கி பூசு பூசு
யறுத்திடவே பச்சோந்தி வாலினோடு
யாகாச மூலியும் நீ வளையமாகு... (440)

---

438. சபை வசமாகும். பாவை ஒன்று செய்து தைலத்தில் நனைத்த துணியை அதன் மேல் சுற்றி

439. செம்பருத்தி பூவை புகட்டி வெட்டினால் ரத்தம் ஆறுபோல் ஓடும் வாழைத் தண்டில் முன் கருவைப் பூசி செம்பருத்தி பூவை ஊட்டி கத்தியால் அறுத்தால்

440. விஷ ஐந்து போல் முப்பபுறி நூலில் கருத்தைலம் பூசி பாடலில் கூறப்பட்ட மூலிகை களை கட்டி

வளையமாம் னூலதிலே மாட்டியேதான்
　　மைந்தனே பெருவிரலில் மிதித்துக் கொண்டு
வளையமா மிந்தனூல் தன்னை சுத்தி
　　மாசத்த பூதியுடன் கைக்குள் வைத்து
வளையவே கேசரமாம் வீரகாளி
　　மசான ருத்திர தியானத்தை யோதி
வளையவே போவென்று உச்சாடித்து
　　மைந்தனே மேல்நோக்கி யெறிந்து வூதே (441)

ஊதவே னூலேணி மேலேணிற்கும்
　　ஒளியாமல் சூக்ஷசத்தை யுரைப்பேனப்பா
நீதலே செந்துவிலே கருவைக் கூட்டி
　　நிதமான பூதியினா லோதிப்போட
கோதலே ஆளெறியப் போகுதென்பார்
　　கூகூகூ வெகு முயற்சை யாகு தென்பார்
ஓதவே கரத்தோடு கரத்தான் தட்ட
　　ருத்திரனார் பூதகணம் தொழில் செய்வாரே (442)

செய்யவே வேட்டுவனாம் புழுவை வாங்கி
　　சிறப்பான பச்சோந்தி வாயினுள்ளே
உய்யவே ஒவ்வொன்றாயி பத்து மட்டும்
　　யூட்டியே முன்தயில மேலே பூசி
வெய்யவே கத்தி கொண்டு துண்டு துண்டாய்
　　வீசியே மேல்னோக்கி யெறிந்து போட
வையோநீ சொன்னதைத்தா னாற்பத்தாலும்
　　யானையோடு சேனைபரி தாணென்பாரே (443)

---

441. வீரக் காளிமந்திரத்தை செபித்து மேலே எரிந்தால்

442. நூல் ஏணிப் போல் நிற்கும். கைகளை தட்டினால் பூதக் கணங்கள் ஏவல் கேட்கும்.

443. பாடலில் கண்டபடி பொருள்களை அடுத்து தைலம் பூசி சிறு துண்டுகளாக்கி மேலே எரிந்தால் யானை, குதிரைப் படைகள் தோன்றும்.

தானென்பார் சிவகளை வித்வேசிக்க சாத்துகுறேன்
வெகு அளவு சார்ந்து கேளு
தானென்பா ரொன்று முதல் லொன்று சூஷசம்
சாத்தியதோர் கருவாலே யெல்லாமாச்சு
தானென்பார் செடிபூண்டு விறுஷசமாதல்
தருவான சென ... லோடு சாத்தக் கேளு
வூனென்பா ரிந்த வகை வித்து வாங்கி
வூணியே சொல்லவினி உபாயங் கேளே (444)

செடி முளைக்க

உபாயமா வித்துயிட்டு முளைக்க கேளு
வூட்டியே தயிலமென்ற கருவைப் பூசி
உபாயமாயி சொல்லுகுறேன் பிள்ளைப் பூச்சி
உலத்தியே பொடித்து நீ மசானச் சாம்பல்
உபாயமாய் புத ......ண சமனாய் கூட்டி
வுத்ததொரு சிறசோட்டி விட்டுக் கேளு
உபாயமாயி விதத்திலே போட்டு நீயும்
அப்பனே மண்ணிட்டு சிலத்தை (445)

சிவமாகும் வித்வேக்ஷணத்தை நன்றாயி
செப்பியே மாறாமல் வாரு வாரு
பிலமாகும் வேறூன்றி முளைத்தெழுந்து
வேறாகப் பூதுமூத்து காயும் காய்க்கும்
குலமாக யிப்படியே செய்த்தல்லால்
கூறுகிறேன் யின்னமொன்று கூறக் கேளு
பிலமாகு மழைப்பு வித்தை வாயா வித்தை
பேசுகிறேன் நன்றாக பேணிப்பாரே (446)

---

444. எல்லாம் கருத் தைலம் என்ற சூழ்ச்சத்தால் ஆகும். மரங்களின் குத்துக்களை வாங்கி

445. கருத் தைலத்தை பூசி பாடலில் கண்டவாறு பூமியில் இட்டு நீர் வார்த்து

446. வித்து வேடணத்தை சபித்தால் உடனே முளைத்து பூத்துக் குலுங்கும்.

பேணியே கருவோடு மசானச் சாம்பல்
பிலமான பச்சோந்தி தயிலங் கூட்டி
னாணியே விரவி நன்றாயி வைத்துக் கொண்டு
நலமான சிறிச்சன தியான மோதி
யூணியே காளிகா தேவி தன்னை
ஓதியே வாவென்று திக்குப் போட
பேணியே நினைத்த மெல்லாம் வருகும் பாரு
பேறான கருவித்தை பேதமாமே (447)

பேதமாம் பச்சோந்தி பாச்சைப் பாம்பு
பிறியா திகைப்புண்டு பூச்சியோடு
நீதமா மிடித்து நன்றாயி தூளாயிப் பண்ணி
நிதமான கருவொடு மசானச் சாம்பல்
சூதமாங் கலந்துநீ வைச்சுக் கொண்டு
துடியான காளிகா தேவியென்று
நீதமா யொருவர் மேல் கொட்டுப் போட
நிதமான பாம்பு தேள் காவியெண்ணே (448)

விநோதம்

காலியொடு உலகத்தில் புழுவேதண்டோ
கலிக்குமே யொன்று பத்து னாளும் பாரு
நீலியொடு பஷசணியாம் நீலிகாளி
நினைத்தபடி யாட்டுவாள் தியானத்தாலே
மூலியாங் கருவொடு குருவும் வேணும்
மூவுலகும் மொன்றாகும் முடிக்கலாகும்
மாலியாம் பிசாசு முதல் பூதகெண மெல்லாம்
மவன் சொன்னபடி யாடும் மரிந்து பாரே (449)

---

447. இனி அழைப்பு வித்தை ஒன்றை சொல்லுகிறேன். மயாணச் சாம்பல் முதலியப் பொருள்களை சேர்த்து காளிகா தேவி மந்திரம் ஓதி எட்டு திக்குகளிலும் போட்டால் நினைத்த பொருள்கள் வந்து சேரும்.

448. பச்சோந்தி முதலாக மாற்றுப் பெயர்களால் கூறப்பட்ட பொருள்களை மயாணச் சாம்பலுடன் சேர்த்து காளிகா தேவியை வணங்கி ஒருவர் மீது போட்டால்

449. பாம்பு, தேள், முதலியன தோன்றும் கருத் தைலம் முதலியவற்றை எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாது. குருவின் அருளால் முடித்தால் பிசாசு முதல் பூதக் கணங்கள் அடங்கி சொன்னப்படி கேட்கும்.

பாரே நிச்சைதனிலே சென்று மிக்க
பகரரிய வித்தைகள் தான்னாடும் போது
னேரேநீ முன்சொன்ன நிலை பேராதே
நிகழாதே தியானத்தா லுரைத்து நில்லு
சேரேநீ சூக்ஷக்ஷ மெல்ல........... முன்னாக
செய்து கொண்டு வந்தாடா தீர்க்கமாகும்
காரேநீ காளிதுட்டு யாடும் கூத்து
கருவென்ன வுலகத்தோர் காணும் வாரே (450)

வாருகே ளின்னமொரு வித்தை மைந்தா
வளமாக கருவோடு மசானச் சாம்பல்
வாருகேள் பச்சோந்தி தைலம் சேர்த்து
மைந்தனே சீலையிலே னால்மூலை யூட்டி
வாருகேள் நடிவிலையு மூட்டி பின்பு
மகத்தான காளிகா தேவி சொல்லி
கூறுகே ளுயரவே வீசிப் போட்டு
குடை பிடித்து வருகுரேன் குரியென் பாரே (451)

கரிக்காய் வினோதம்; சோரு வேகாத வினோதம்

குரிப்பான வழுக்குரானத்தைச் சூரி
கூரான வீத்து முன் தையிலத்தாலாட்டி
னெரியான வாழக்காய் வழுதலங்காய்
னேரான பரிங்கிக்காய் மீதில் பூசி
பிதி ... தம்பனமாம்தியான மோதி
பேரான கத்தி கொண்டு வெட்டிப் பாரு
குரிப்பாக யெய்தாலும் வெட்டொணாது
கூரியதோர் கோழியிட வண்ட... ங்கே (452)

---

450. இந்த வித்தைகளைச் செய்யும் பொழுது நீதி தவறாமல் தியாணத்தில் உறுதியாக நின்று குரு அருளால் நுணுக்கங்களை அறிந்து செய்தால் எல்லாம் சித்திக்கும்.

451. பாடலிவ் கண்டபடி ஒரு துணியில் தைலத்தை ஊட்டி அதை தலைக்கு மேல் வீசி நடந்தால் குடை போல் பிடித்து வரும்.

452. முன் தைலத்தை வாழைக்காய் முதலியவற்றை பூசி தம்பணத்தை ஓதி கத்தியால் வெட்டினால் வெட்டு படாது. கோழி முட்டையின் மீது பூசி

அண்டமா மிக்கருவை யதிலே பூசி
யானைக்கால் தன்னிலிட அசையா தப்பா
தண்டமாம் பச்சோந்தி.... னோடு
தருவான வூனகொடியும் வளையமாடி
உண்டிடவே சமைக்கின்ற அடுப்பில் போட
உத்தமனே கறிசோரு வேகாதென்று
கண்டமா வெள்ளாவி யடுப்பில் போட
கலங்கியே வண்ணாருன் காலில் விழுவாரே (453)

காலிலே விழவொரு வித்தைச் சொல்வேன்
கருவான சூளையிலே வேகாப்பாண்டம்
சேலிலே வாங்கியதில்லிஞ்சி மூலம்
சிறப்பான கட்டிக் கொடி மூலங் கூட்டி
மாலிலே முன்தயிலத்தாலே யாட்டி
மைந்தனே பாண்டத்தினுள்ளே பூசி
சாலிலே தண்ணியதில் நிறைய வாத்து
சாதகமாயி கட்டிநீ உயரத்தூக்கே (454)

உயரவே தூக்கியே மேலோடெல்லாம்
உடைத்துநீ வாங்கிவிடு உபாயமாக
உயரவே யந்தரமாயி தண்ணீர் மட்டும்
முறைந்துமே கட்டியது நிற்கும் பாரு
உயரவே யின்னமொரு சூக்ஷசங் கேளு
ஒகோகோ தலைமயிற்தான் னொன்று வாங்கி
வுயரவே கல்லூரிச் சூரிவித்து யாலவிழுது
முல தயிலத்தூட்டிப் பூசே (455)

---

453. யானைக் காலில் போட்டாலும் உடை படாது. கருத் தைலத்தை இட்டு சோறு சமைத்தால் சோறு வேகாது

454. சூளையில் வேகாத மண்பாண்டத்தை வாங்கி பாடலில் கூறப்பட்ட பொருள்களை வாங்கி கருத் தைலத்தில் ஆட்டி பாண்டத்தின் உள்ளே பூசி தண்ணீர் நிறைய ஊற்றி

455. பாண்டத்தை உடைத்தால் தண்ணீல் கட்டி நிற்கும் தலைமயிர் என்ற மூலிகை முதலான பொருள்களை தைலத்தில் சேர்த்து

பாராங்கல் வினோதம்

பூசியே பச்சோந்தி தயிலங் கூட்டி
புகழான கல்தாழை பூவை வாங்கி
காசியே யிக்கருவை பூவை புவிலோட்டி
கனமான பாரமாங் கல்லிலூட்டு
தூசியே பூவிலந்த மயிறை கட்டி
தூக்கி விடயந்திரமாயி துலங்கும் பாரு
நேசியே சாலவித்தை யின்ன மெத்த
நினைத்த தெல்லா மாடலாங் கருவா மென்றே (456)

கருவாலே யிந்திர சாலம் யெந்திர சாலம்
காட்டினார் கும்பமுனி யாயிரத்தில்
துருவான சாலமாயி சொன்னாரையோ
சூட்சமாம் மலருடைய பக்ஷசணியைப் பாரு
பருவான பக்ஷசணியின் முதலாயி யுள்ள
பகரரிய சித்திரிடனா........ல்லா
....றுவான பொருளோடு வரறுளுந் தேர்ந்து
கருக்கிடையும் குருக்கிடையும் காட்டினேனே. (457)

காட்டினே னென்னூலை ன.... பேறும்
கல்லாமல் செவிக்குறார் கேட்ட பேரும்
னாட்டான கறுவிடைய மரிந்ததுக் கொண்டு
புதுமையுள்ள சித்தரெல்லாமாடச் செய்வார்
வீட்டிலே யிறுந்து கொண்டு வேதை பார்த்து
விருதான குளிகை கட்டி பார்க்கச் செய்வார்
சூட்டினே னுலகிலுள்ளோர் நல்லோர் செய் வாா
சுணங்கலோ யலைகுரது துஷ்ட்டர் கேளே (458)

---

456. கல்தாழைபூவில் ஊட்டி தலைமுடியை பூவில்க்கட்டி கல்லுரளில் இட்டு தூக்க உயரும்

457. இவை போன்ற ஜால வித்தைகள் கருத்தைலத்தால் ஆகும். அருளான பொருள் சேர்த்து இந்த முறைகள் எல்லாம் பாடினேன்

458. இதனை முறையாக உணர்ந்த நல்லவர்கள் ரசவாதம் குளிகை முதலியன செய்து சித்தியடைவார்கள்.

துஷ்டருக்கு யீய்ந்த உடனேது செய்வார்
துரையறி யான் முரையறியான் முன்பின் பாரான்
துஷ்டனென்ற புத்தியினால் நூலைப் பார்த்து
தொல்லுலகில் மகாகொடுமை செய்வான் பாவி
துஷ்ட்டனவன் சண்டாளன் செய்த பாவம்
சூழலே உன்னை வந்து துடறும்பாறு
துஷ்ட்டனென்ற பாவிகளை ஆத்தாள் பாத்து
தூக்கியே வன்னரையில் போடென்பாரே (459)

போடென்பா யின்னமொரு வித்தை மைந்தா
பூதலத்தில் ராஜாக்கள் பகைத்தா சன்மேல்
ஆடவே அவருடைய சேனைதலை மெல்லாம்
ம.... ணத்தில் பொடிபடவும் அரையக் கேளு
நீடவே வேகாத சூடந்தா னொன்று
நிதமாக வாங்கி முன்மசானச் சாம்பல்
போடவே புத்து மண்ணும் சூலைச் சாம்பல்
கட்டியதில் சக்கரத்தை வரைந்திடாயே (460)

வரைந்திடவே யறுகோணும் சத்திரமூலம்
மாட்டியே சிறுசின்னி வெண்கொதிஞ்சி
விரைந்திடவே செம்முள்ளி வேரினோடு
விதமான பச்சோந்தி பாலும் கூட்டி
பரைந்திடவே கறுதொட்டு வளையமாடி
பாரரிய குடத்தினுள்ளே வைத்து நீயும்
மரைந்திடவே பேதன உச்சாடணத்தை ஓது
யசாத்தியத்தால் க்ஷச முறு வரிந்து பாரே (461)

---

459. பிற உயிர்களுக்கு தீங்கு செய்யும் கொடியவர்களுக்கு இந்த நூலில் கூறியுள்ள கரு முறைகள் தோன்றாது. கொடியவர்களுக்கு இந்த நூலைத் தந்தால் அவர்கள் செய்யும் பாவம் நூல் தந்தவர்களையும் சேரும். கொடுமையான நரகம் எய்தும்.

460. உயிர்களின் நன்மைக்காக நீ செய்யும் காரியத்தை மன்னர்கள் எதிர்த்தால் அவர்கள் படை சிதறுவதற்கு ஒரு வித்தைகயை இனி சொல்லுவேன். வேகாத சூடம் முதலியப் பொருள்களை எடுத்து சக்கரத்தை வரைந்து.

461. அறுகோணத்தில் சித்தர் மூலத்தை எழுதி பாடலில் சொல்லப்பட்ட பொருள்களை சேர்த்து ஒரு குடத்தில் வைத்து பேதனத்தை ஓதி

நில்லென்று கோடசமாம் பூசையோடு
நெரியான தீபநெய் வேத்திய செய்து
வல்லவே யய்யனோடு துர்கை காளி
வாசலா மவன் சேனை வாசல் முன்னே
மெல்லவே குடத்தனை நீ ....டக்கும் போது
வெகு கோடி பூதகென ருத்திர மூர்த்தி
அல்லவே யவர் கெடிகள் தூளாயி போகும்
மகத்தான சேனையாம் மாண்டு போமே (462)

தெய்வ வணக்கம்

போமென்ற வித்தையொன்று சொல்லக் கேளு
பூதலத்தில் தெய்வமெல்லாம் புத்தி கேழ்க்க
வேமென்ற மறுகோணி சமூலம் வாங்கி
விதமான குழித்தயி மிறக்கியேதான்
னாமென்ற ... திப்பிம் தயில மூட்டி
யப்பனே வத்தித்து வைத்துக் கொண்டு
போமென்ற நெத்தியிலே திலர்தம் போடு
புகழான சிரசோடு ... தன்னை வாங்கே (463)

தன்னையே வாங்கி யெதிர்ச் சாத்தக் கேளு
தறுவான முன்சொன்ன மையைக் கீறி
தன்னையே யெண்கோணமங் னங்சென்றிட்டு
னல ... ஓங்காரம் சுத்தி கட்டி
யன்னையே கட்டிவோ குடத்தை வாங்கி
யாதியாங் கறுத் .... முன்னே வைத்து
ன்னவே யெவ்வாக்கறு க்ஷசுணத்தையும் நீ
மைந்தனே சாத்தியத்தாலக்ஷசம் ஓதே (464)

---

462. சோடச பூசை செய்து படையின் முன் குடத்தை உடைக்க புடை சிதறும்.

463. பாடலில் சொல்லப்பட்ட மூலிகையின் சமூலம் எடுத்து குழிக் தைலம் வாங்கி மற்ற பொருள்களை சேர்த்து நெற்றியில் திலகம் இட்டு.

464. பாடலில் கண்டவாறு சக்கரங்கள் அமைத்து ... ... லட்சம் முறை ஓத

லக்ஷசமா மோதிடவே பிசாசு பூதம்
னிகரரி யவையளு துர்க்கி காளி
....ச்சமாந் தேவதைக ளெல்லாம் வந்து
.... கட்டி னிற்க்கும் பாறு....
....ச்சமாந் குடத்தடங்க தம்பமுட்டு
மகத்தான கவசமட்டுங் கட்டிப்பின்பு
கச்சமாஞ் சிரசோடு கவிழ்த்து மூடி
கல்லிட்டு மேல் பாருங் கண்டித்தேத்தே (465)

ஏத்தியே குழிவெட்டி தாவித்திட்டு
யெடுத்ததொரு கற்மங்கள் செய்தாலும் நீ
பாத்த பேர் பயப்படு....... கர........ ரொன்றும்
பகையாது பல்லோடு னாலேமும்
பாக்ஷத்தான் வலையங்கள் தெய்வமில்லை
கூடிப் போச்சு தென்றுலகங் கூறுங் கூறுங்
பேத்தியே முறகருவு செய்யத் தொன்று
யெடுக்கலாம் வைப்பு முதல் லெடுக்க லாமே (466)

எடுக்கவே உலகத்தி லெதிராளி யில்லை
யிப்புவியில் ராசபல மில்லை தள்ளு
யடுக்கவே யாறாலும் வெல்லப் போகா
யரிதரி........ சொல்லுகுறே னந்தித வித்தை
கடுக்கவே யுன்னையவர் கையை யேந்தி
கனகமென்ற திரவியத்தை கையி லீந்தால்
தடுக்கவே யாருந்தா னரியா வண்ணம்
தாவித்த பொருளை யெல்லாம் வெளியில் வாங்கே (467)

---

465. பிசாசு பூதம் முதலியவைகளும் துர்க்கை, காளி முதலிய தேவதைகளும் .... நிற்கும்.

466. தெய்வங்களை தரிசித்தோம் என்று உலகம் கூறும்

467. உனக்கு உலகத்தில் எதிரிகள் இருக்க மாட்டார். உன்னை யாரும் வெல்ல முடியாது.

வெளியாக வலையததில் சென்று புக்கி
வித்திருக்கும் தேவதை னான்னென்று சொல்லி
வெளியாக வேணதெல்லா யீவாரப்பா
விதமான சிவகணங்கள் பண்ணலாகும்
வெளியாக விளம்பினேன் விபரமாக
மேதினியி லின்னமொரு வித்தை கேளு
பணியாதே லேசாக சிவகணங்கள் பண்ணி
பகருவேன் பச்சோந்தி மணைச்சல் பரே (468)

பினைச்சலிலே ரெண்டையு மோரடியாய் கொண்டு
பேசாதே யதின்வாயில் சொல்லக்கேளு
யினைச்சாய வெவ்வேறே பணத்தை வைத்து
எல்லையாம் சுடுகாட்டில் புதைத்து போடு
யினைச்சலாங் .... டுதலை மாடாக பாவியே
மேலந்த சாம்பல் போட்டு
யனைச்சலாயி அதன் மேல் மண்ணிட்டு மூடி
யப்பனே மறு ....ஏனனெறம் பாரே (469)

யன்னேரம் மறிந்துநீ யெடுத்துப் பாரு
யாகாகா வெவ்வேறே வைத்த பொருள்ரெண்டு
முன்னேரம் மொருவாயில் சேர்ந்திருக்கும்
முகியாதே வந்த பொருள எடையாளம் பாரு
நன்னேரம் ரெண்டையுந்தான் முடிந்து வைத்து
னாடிவந்த பொருளைநீ சிலவுக்கீய
வுன்னேரங் கொடுத்த பொருள் கையில் சேருங்
யூழு .... காலமும் நீ சிவனங்கள் பண்ணே (470)

---

468. வேண்டிய பொருளை உனக்கு தருவார்கள். பச்சோந்தி என்று சொல்லப்பட்ட மூலிகையில்

469. பாடலில் சொல்லப்பட்ட மறை மொழியை குரு அருளால் உணர்ந்து மூலிகையின் வாயில் பணத்தை இட்டு புதைத்து மண்ணிட்டு மூடி

470. மறு நாள் எடுத்து பார்த்தால் ஒரு வாயில் பணம் யாவும் சேர்ந்து இருக்கும். ……….. இதை வைத்து தவங்கள் செய்வாயாக.

பண்ணவே திருடருக்கு சிறந்த சுடலாவாரையை
செப்பக்கேளு எவனங்களானதொரு
எல்லை காட்டிலிருக்கவே மெத்த நன்று
யில்லாவிட்டால் காவனங்களான தொரு
காடுதன்னில் தனித்திருந்த மூலி சென்று
கதிரனாள் தன்னில் சிவனங்கள்
பண்ணவே காப்புக்கட்டி சிவசிவா
மைத்தானாள் சென்று கேளே (471)

சென்று நீ தீபமொடு தூபங் காட்டி
செப்பரிய சாபமும் நிவற்றி செய்து
நன்று நீயறாதபடி வேரை வாங்கி
நலமான கருத்தொட்டு னாடிப் பின்பு
அன்று நீ கதிர் திரண்டு மரவு னாடல்
யயத்தாலே சூளாகியப் போலே
பண்ணிக் கொண்டு பண்டுள்ள மூவி கண்டாவுபாத்து
பாச்சியே யதனுள்ளே யடைத்திடாயே (472)

அடைத்திட உச்சாடணமாம் லக்ஷச மோதி
யப்பனே யிருபுரமும் யடைத்து மூடி
படைத்து நீ பதனமாயி வைத்துக் கொண்டு
பகறுவேன் கவைதனைக் கொள்ள வேண்டி
யெடுத்துமே யிறுமாதத்திலர்தம் போடு
யில்லாட்டால் கரும்பூனை தயிலம் பூசு
கடைத்திடவே சொல்லுநீ கன்னக் கோலாம்
கலவிடு கல்லரைகள் கதவு பூட்டே (473)

---

471. சுடல் ஆவாரை என்னும் மூலிகையை ஞாயிற்றுக் கிழமை காப்புக்கட்டி மறுநாள்

472 தீபதூபம் காட்டி சாப நிவர்த்தி செய்து பாடலில் கண்டபடி செய்து

473. உச்சாடணம் லட்சம் ஓதி சென்றால்

பூட்டான வாங்குமச்சு மாளிகைக் கெல்லாம்
புகழான கன்னக்கோல் வைச்சுப்பாரு
பூட்டான பூட்டெல்லாம் திறந்து போகும்
பூட்டி வைத்த கதவு ரெண்டாகும் புண்டுபோகும்
பூட்டான கல்கோட்டை துருவமாதல்
புகுதலாம் பொருள்வேண தெடுக்க லாகும்
பூட்டான காலிலிட்ட விலங்குமப்பா
பொடிப் பொடியாயி தெரித்துவிட்டுப் போகும் பாரே (474)

போகுமே கருவிலொரு யீடு சொல்வேன்
புகழான நவாச்சாரம் பல்லி முட்டை
தாகுமே சூழல் வண்டு செந்தொட்டிக் காயும்
சாரித்து முதையிலம் தன்னாலாட்டி
போகுமே உண்டை செய்து நிழலுத்தி
பகராிய பஞ்சமல மஞ்சுங் கூட்டி
ஒகோகோ யமுறிவிந்து வாய்நீராதல்
யுரைத்திடுவா யுளுந்திடைப் பிறமாணம் தானே (475)

பிறமாண மாகவே தாம்பூலத்தில்
பேறான வருகலையி லிட்டுத் தாக்க
பிறமாணமாகவே விரகமிரி பித்தது
—சாம னோயி கொண்டு யேங்கி
பிறமாணமான தொரு அன்ன சுத்தம்
பிறிந்துன் மேலாசை கொண்டு பேதையாகி
நிற்மாண மாகவே தலைகள் சோர்ந்து
நிலவழிந்து வறிவழிந்து நேசிப்பாரே (476)

---

474. திறக்காத மாளிகை பூட்டுகள் யாவும் திறக்கும்.

475. நவச்சாரம் முப்பு முதலியப் பொருள்களைச் சேர்த்து பாடலில் கண்டபடி உளுந்து அளவு உருட்டி

476. தாம்பூலத்தில் சேர்த்து தர மாதர்களுக்கு மாறாத நேசம் உண்டாகும்.

நேசிப்பார் பெண்களுக்கு யீடு சொன்னேன்
நிதமான புருஷருக்கு செய்ய வேண்டில்
யாசிப்பார் மத்தையோடு கீழ்காய் நெல்லி
யப்பனே புல்லா மணக்கும் வேரும்
தூசிப்பார் பாரு சீலைமுன் சீலையினோடு
சுடரிலே மாண்டு விழுவும் புழுவுங் கூட்டி
நேசிப்பார் முன் தயிலத்தா லாட்டி மைபோல
நெகிழாம லூரண்டை செய்யது நிழலுத்தே (477)

உலத்தியே யவனுடைய கருவைக் கேளு
உத்தமனே மாதர் விடை மூன்று னாளும்
..... த்தியே சீலையிலே முடிந்து கட்டி
பேசாதே யோனிதனிலுள்ள வைத்து
நலத்தியே நாலானாள் யிப்பால் வாங்கி
நலமாக பதனமாயி வைத்துக் கொண்டு
மலத்தியே தாம்பூலம் நெய்பா லன்ன
மப்பனே ய . . . றுசுவையு மாமே (478)

சுவையான குண்ணியிடை பிரமாணம் போட்டு
சுணங்க னென்ற நாயி போலே சுத்தி சுத்தி
அபைய முனக்கடைக்கலம் னான் னென்று சொல்லி
யனுதினமுமவள் வசம் பாத்து நிற்ப் பான்
வுபையமா மருந்தி...தீர்க்க வேண்டி
வுறைக்குறேன் சீவனார் தன்வேம்பின் வேரும்
... மையான கடுக்காயி பூரெண்டுங் கூட்டி
தேங்காயின் பாலுண்ண தீர்க்கமாமே (479)

---

477. ஆடவர்களுக்கு ஊமத்தை முதலியப் பொருள்களை சேர்த்து உருண்டை செய்து, நிழலில் உலர்த்தி

478. குரு அருளால் மாது நாதத்தை அறிந்து அதில் ஊற வைத்து தாம்பூலம் முதலிய வற்றில் தர

479. வசியமாவர். இதை மாற்ற சிவனார் வேம்பு வேர், கடுக்காய் பூ ஆகியவற்றை தேங்காய்ப் பாலில் தரவேண்டும்.

தீர்க்கமா மரணத்தின் மைதானொன்று
செப்புகிறேன் தேசிலத்தி கருனாய் பல்லும்
பார்க்கவே நெறிவிழமும் சமனாயி கூட்டி
யவித்து முன்சீலை தன்னிலூட்டி
யாக்கியே தரியாக்கி நிமபெண்ணை தீபம்
மாட்டியே சிரசோட்டில் மை வாங்கி
சேர்க்கவே லொக்கவிடு கருவைக் கேளு
சிறப்பான வரசுநஞ்சு செங்கொட்டை நஞ்சே (480)

மாரண வித்தை

நஞ்சான புலிக் கண்ணும் பூச்சியொடு
நலமான முறகருவும் சுடுகாட்டுக் கரியும்
அஞ்சாதே சமபாகம் நிறுத்திக் கொண்டு
அப்பனே முன் மருந்தோடக்கச் சேத்து
வஞ்சகமே சொல்லயில்லை தில்லைப் பாலும்
வனகுலையால் மரித்தவர்க ளுணுந் தாக்கே (481)

ஊணான கொசுகுர தேன் மெழுகுங் கூட்டி
உத்தமனே மத்தித்து உறுதியாக
தேனான யெட்டியுட சிமிளில் வைத்து
செப்பியதோர் மாரணத்தில் லக்ஷசமுறு வேத்தி
வாறணாமாம் மாறணத்தின் மையாச்சு
வகான சுடலை யென்றும் பேரதாச்சு
தோணவே மசான மெழுகென்று சொல்வார்
சொல்லாதே மாரணத்தின் சுறுக்காம் பாரே (482)

---

480. பாடலில் மறைபொருளாக கூறப்பட்ட பொருள்களை சேர்த்து,

481. சமபாகம் எடுத்து தில்லைப் பால் முதலியன சேர்த்து.

482. தேன் மெழுகு கூட்டி மத்தித்து எட்டி சிமிளில் வைத்து.

சுறுக்காக யிறுக்க வென்றால் கழுவின மண்டை
　　சொல்லியதோர் மையாலே யுடலைக்கீரி
நறுக்காக னாடியதோர் கருவுந்தொட்டு
　　நலமான பெலிபூசை நடத்தியேதான்
தறுக்காதே மாறணத்தின் சாத்தி...... ம....ரை
　　சாத்தியமே மசிமசி நீயென்று ஓது
மறுக்காதே மசான.. தி க்கியே தான்
　　மாறணமாம் சத்துருக்கள் மாண்டு போமே (483)

போமென்ற மண்டைதனை மறுபடியு மெடுத்து
　　புகழான நீர்விட்டு கழுவிப் போட்டு
தாமென்ற சாம்பராணி தீபதூபம்
　　சாத்தியே பதனமாய் வைத்துக் கொள்ளு
யானென்ற யெதிறினுக்கு யில்லை சொன்னேன்
　　னானாலும் உன்னை வெல்லப் போகாதப்பா
னாமென்ற மையாலே போட்டுப் போட்டு
　　நலமான வஞ்சனமும் மாகும் பாரே (484)

பாரேநீ கருவுருவை சொல்வேன் மைந்தா
　　பகராதே வுலகத்தில் பழியொ ..த்த
தாரேநீ தனங்கோடி யீந்திட்டாலும்
　　சாத்திரத்தை யீயாதே கருச் சொல்லாதே
யேராதே...ருவ....ன வீண் பேசாதே
　　எட்டும் ரெண்டும் ஒண்ணான பொருள் சொல்லாதே
கூறாதே முன்சொன்ன பிண்டம் தன்னை
　　கொத்தோடே வாங்கியே கூறக் கேளே (485)

---

483. பூசையிட்டு மாறணத்தை ஓதினால் பகைவர்களுக்கு பகை உணர்வு மாறும். மசி, மசி என்று ஓதி தியானித்தால் சத்துருக்கள் மாறுவர்.

484. எதிரிகளால் வெல்ல முடியாத வித்தை இதுவாகும். இதை பத்திரமாக காப்பாற்று வாயாக.

485. இந்தக் கரு வித்தையின் ரகசியத்தை கோடி தனம் கொடுத்தாலும் பிறர்க்கு கொடுக்காதே எட்டும், இரண்டும் சேர்ந்து ஒன்றான பொருளை வெளிவிடாதே. முன் சொன்ன பிண்டத்தை எடுத்து

கேளப்பா வசம்புள்ளி கடுகு காயம்
கெடியான வெந்தியமுங் கஸ்தூரி மஞ்சள்
வேளப்பா சவ்வாதோடு புழுகு பூரம்
விதமான திவையெல்லாம் சமனாய் சேர்த்து
னாளப்பா பேய்பீற்கின் மத்தஞ் சாரும்
நரிநெய்யும் விட்டாட்டி குழம்பா ண்ணி
சூழப்பா பிண்டத்தை தோய்த்துத் தோய்த்து
சுகமான னாற்பதுனாள் நிழலுணத்தே (486)

உலந்ததொரு பிண்டத்தை சுக்கிற வாரம்
முன்மையாயி நடுசாமமசான மேவி
நலந்தர சோடச உபசாரத் தோடே
நன்றாக வடமுகமா யிருந்துக் கொண்டு
களந்து சிவருத்திர தியானம் தன்னை
கட்டாக ரெண்டு லக்ஷசமுருந் தானோது
மலர்ந்துநீ போகாதே மந்திர மென்னே
மங் ரங் ரிங் சிவய நமவென்றே (487)

எண்ணவே ருத்திரனும் ருத்திரியு மாச்சு
எடுத்ததொரு கற்மமெல்லா மிதிலே யாகும்
தன்னவே முறகருத்தான் உருவுமாச்சு
சாதகமாயி முறகருவும் கோடிதான் மூலம்
கன்னவே சித்தருட னூல்கயெல்லாம்
காட்டாமல் லொளித்த கரு வெளியாய் சொன்னேன்
மன்னவே யாடுகுற வித்தைக் கெல்லாம்
மைந்தனே கருத்தொட்டு மாட்டி யாட்டே (488)

---

486. வசம்பு, உள்ளி, கடுகு, காயம் வெந்தயம், கஸ்தூரி மஞ்சள், சவ்வாது, புனுகு, பூரம் இவைகளை சமன் எடையாக சேர்த்து பேய்பிற்கு, மத்தஞ்சாறு, நரி மிரட்டி முதலியன சேர்த்து அரைத்து குழம்பு பதத்தில் எடுத்து பிண்டத்தை தோய்த்து, தோய்த்து நாற்பது நாள் நிழலில் உலர்த்தவும்.

487. வெள்ளிக் கிழமை சோடச உபசாரத்துடன் நடு சாமத்தில் வடமுகமாய் இருந்து ருத்ரதியானம் மங் ரங் ரிங் சிவய நம என்று இரண்டு லட்சம் ஓதினால்

488. கரு உருவாகும் இதை சித்தர்கள் மறைத்தார்கள் இந்தக் கருவை தொட்டு எல்லா வித்தை ஆடலாம்

ஆடவே சகலசித்து மிதுக்குள்ளாச்சு
அறியாட்டால் சவுக்கார வழலை போச்சு
ஆடவே வழலை விட்டால் வாதம் போச்சு
ஆகாச மெடுத்தொடுங் குளிகை போச்சு
யாடலே பூறணத்தி லமுற்தம் சிந்தில்
லமரததில் லொளிகாரை சடரப்பா
ஆடவே யிதை மறைத்து சித்தரெல்லா
மாசுவாயி கருவுறு வெண் றறைந் திட்டாரே (489)

அறைந்திட்ட வாயிரத்தில் விரித்துச் சொன்னேன்
அப்பனே ஒவ்வொன்றில் லவர்கள் கோடி
தரிந்திட்ட சரக்கு வைப்பும் கார சாரம்
தருவான மனிதனுக்கு சாரணையின் திட்டம்
கறந்திட்ட கைமுறைகள் ஆற்ப்பின் பாகம்
கடிதான சத்துறுவு மித்துருவு மினரும்
நரைந்திட்ட னாற்பத்து முக்கோண மேவி
நலமான சிதம்பரமும் னாட்டினேனே (490)

னாட்டினேன் சரியையோடு கிரிகை யோகம்
நலமான தவ்விடத்தில் கருவுங் காட்டி
சூட்டினேன் பொருளெல்லாம் மொன்லாயி நின்ற
சூஷாதி சூஷமும் நீ சொல்லிக் காட்டி
யேட்டிலே எழுதாத தெல்லாம் சொன்னேன்
....யென்ன னூதனமாம் சொன்னா லுண்டோ
பாட்டான பெருனூலினடக்க மெல்லாம்
பரிவான சூசமா படித்திட்டேனே (491)

---

489. இதை அறியாவிட்டசல் சவுக்கார வழலை தெரியாது. வழலையை அறியா விட்டால் வாதம் செய்ய இயலாது. குளிகை முடியாது. பூரணத்தில் அமுதம் சிந்தி ஒளிகாண முடியாது. இதை சித்தர்கள் மறைத்து வைத்தார்கள்.

490. என்னுடைய நூல் ஆயிரத்தில் இவை எல்லாவற்றையும் விரிவாகச் சொன்னேன். காரசாரம் சரக்கு வைத்து சத்துரு மித்துரு கைபாகம் செய்பாகம் நாற்பத்து முக்கோண பூசை சிதம்பரபூசை

491. சரியை, பிரியை யோகம் எல்லாப் பொருள்களும் ஒன்றாகி நின்ற சுஷ்சம் முதலியவற்றை பெரு நூலில் சொன்னேன்.

படித்திட்டேன் னின்னமொன்று சொல்லக் கேளு
பகருவேன் சாத்திர த்தினுள்ளே
நலதிட்ட வித்து மேல்த்தோடும் தள்ளி
நற்காயம் மதினுடைய நஞ்சு வாங்கி
கடித்திட்ட விஷ நஞ்சு அரவுநஞ்சு
நலமான கருநாபி செங்கோட்டை நஞ்சு
கருத்திட்ட கெவுரி வெள்ளை பாக்ஷாணத்தி னோடு
கறுத்த மரவட்டையது கண்டு கொள்ளே (492)

கண்டு கொள்ளு பேய்பீர்வின் வித்தின் மூலி
கடிய சென்னவேருடனே யவறி வேரும்
பண்டு கொள்ளும் பாக்கினுட புழுவும் கூட்டி
பரிவாக யிவை யெல்லாம் சமனாய் கொண்டு
விண்டு கொள்ளும் நல்லெண்ணை கள்ளிப் பாலும்
விதமான தேசியிட யூணுங் கூட்டி
கண்டு கொள்ளு முன்மருந்தில் விட்டு ஆட்டி
கசகாதே மெழுகு பதமானா வாரே (493)

வாறான மருந்து தன்னை சிமிளுக்குள்ளே
வைத்து நீ மாரணத்தை தியானமோது
வேறான வகையேது சத்துருக்க ளேது
விள்ளாதே யறுசுவையில் லேத்திப் பாரு
பாறாக யிதைதீர்க்க மாத்தோ யில்லை
யறக்ஷணத்தில் தீருமடா யதீதம்பாரு
வேறான திம்முரைதான் னாறுந் சொல்வார்
வளமான கருவாலே யெல்லாம் மாச்சே (494)

---

492. நலதிட்ட வித்து மேல் ஓடு நீக்கி பாடலில் சொல்லப்பட்ட பொருள்களை சேர்த்து

493. சம எடையாக எடுத்து நல்லெண்ணெய் கள்ளிப்பால், முதலியனவிட்டு மெழுகு பதமாக அரைத்து.

494. மருந்தை சிமிழ்க்குள் வைத்து மாறணம் ஓதி அருசுவை உணவில் வைத்து கொடுத்தால் சத்துருக்கள் வசிகமாகும். இதற்கு மாற்று இல்லை

வில் வித்தை

ஆச்சென்ற வில்வீத்தை சொல்லக் கேளு
ஆகாகா தேசியிட விலாவெலும்பில்
ஆச்சென்று கழுவினிட நரம்பை பூட்டி
யறைந்திட்ட சிறசோட்டின் மீது வைத்து
வாச்சென்ற தகட்டினுடல் சக்கரத்தை கீறி
மசாத்தியமா மஞ்சு வகை கருவும் பூசி
யாச்சென்ற வில்வின் மேல் தகடு கேளு
யண்டமுடன் தேங்காயும் பழத் தோடைந்தே (495)

ஐந்துமே போதுமடா ஒன்றோ டொன்று
அப்பனே கருப்பூசி வைப்பாய் நீயும்
ஐந்துமே மாரணத்தில் லக்ஷச மோதி
யரிவான மாரணத்தா லுன்னிவெட்டு
ஐந்துமே யிறுகூறாய் யத்துப் போகுமப்பா
... லபோ சத்துருக்களத்தார் பாரு
ே...... ந்துமே மாரணத்தின் வகைதான் னெட்டும்
சொல்லி விட்டேன் சூக்ஷாதி சூக்ஷச மாமே (496)

சூக்ஷசமாம் யின்னமொரு வித்தை கேளு
சொல்லுகுறேன் முப்பக்கம் கதிர்னாள் தன்னில்
சூக்ஷசமா முள்ளெலிதான் பிடித்து வந்து
தூக்கியே தலைக்கீழா சாபம் தீற
சூக்ஷசமா தினந்தோரு முருதான் னூரு
சொல்லிவிடு சாபத்தின் னிவர்த்தி தன்னை
சூக்ஷசமா மருபடி முன் சொன்ன பக்கம்
சொல்லியே வெண்தாமரை கிழங்கு வாங்கே (497)

---

495. தேசி எலும்பு என்று சொல்லப்பட்டப் பொருளை எடுத்து பாடலில் கண்டவாறு வைத்து சக்கரம் வரையப்பட்ட தகடை அதன் மேல் வைத்து, தேங்காய் முதலியன வைத்து

496. கருப்பூசி மாறணத்தை லட்சம் ஓதி வெட்டினால் பகை தீரும். மாரணத்தின் வகைகளை மிகவும் சுஷ்டச்சமாக சொல்லி விட்டேன்.

4'7. மூன்றாவது பஷ்டசமாக முள்எலி என்ற சொல்லப்பட்ட மூலிகையை பரித்து சாப நிவர்த்தி செய்து வெண்தாமரை கிழங்கு சேர்த்து

வாங்கியே ரெண்டையுந்தா னுலத்தி தூளாயி
மைந்தனே கிழங்கதிலே களஞ்சி கூட்டி
வாங்கியே கிறாம்பினிட யந்திர கோபம்
வளமான முறகருவும் கொஞ்சம் தொட்டு
வாங்கியே முன்சீலை தன்னிலூட்டி
வாகாக நிறுத்து நன்றாயி கனலிவிட்டு
தேங்கியே யாவின் நெயிதிரியு மேத்தி
செஞ்சூளை சட்டியின் மேல் கையின் சாரே (498)

சார்தனை விட்டுமே சட்டித்தூரில்
சாதகமாயி முக்கவரின் மேலே வைத்து
பேரதனால் லாத்தாளை தோத்திரமே செய்யது
பேசாதே மைநீ யெரித்து வாங்கு
கூரதனை புழுகு கோறோசனையினோடு
கூட்டியே மத்தித்து சிமிளில் வைத்து
தேர்தனை .... யத்தில் லக்ஷசமோதி
சிவசிவா வதனத்தில் திலர்தம் போடே (499)

சிலர்தமா வுலகமெல்லா வசியமாகும்
தேசத்தல் ராஜாக்கள் தெண்டன் செய்வார்
வலதளிக்கு மாதரி .... கற்ப மெல்லாம்
மயங்காதே ...... த்தான் மறுவு வ... ள்
பலவிதமாயி சுக்கிலத்தை கீழே விட்டால்
பலனென்ன வதினாலே வறுவதேது
குல ...... றம் ...... துதனை கட்டி மேலே
கோணமேத்தும் சிகத்திலே கொடிதா மெண்ணே (500)

---

498. உலர்த்தி தூளாக்கி கிராம்பு, இந்திரக் கோபம் முன் கூறப்பட்ட கரு ஆகியவை சேர்த்து சீலையில் ஊட்டி ஆவிநெயில் தீபம் ஏற்றி கையான் சாறு

499. தடவிய மேல் சட்டியில் மையை வாங்கி புனுகு, கோரோசனை சேர்த்து தேவியைப் போற்றி வசியம் லட்சம் ஓதி திலகமிட்டால்

500. உலகமெல்லாம் வசியமாகும். அரசர்கள் வணங்குவர், மாதர்கள் மயங்குவர். அதில் மயங்காமல் சுக்கிலத்தை முக்கோணமாகிய புருவமத்தியில் ஏற்றுவாயாக.

கொடிதான மையாவே யனேக வித்தை
 கூறாதே யக்ஷட்ட கர்ம மெட்டி னோடும்
கொடிதான மையிரு கடைக்கணமீது
 கொண்டதொரு சுழி மீதிலிட்டு நீயும்
கொடிதான யில்லம் விட்டு அப்பால் சென்று
 கூறுவே மவுனத்தை யிருந்து பாரு
கொடிதான அ...னோடு பரைய முன்னே
 கூப்பிட்டு வார்த்தை சொல்லுங் கொள்கை பாரே (501)

பாரேநீ சரஸ்வதி திறதம் செய்வாள்
 பகரரிய அஷ்ட்ட லஷ்சிமியும் வந்திருப்பார் பாரு
பாரேநீ ரிசிகள் முதல் சித்தர் தேவர்
 பரிவுடைய கின்னரர் கிம்புறுஷசர் தானும்
பாரேநீ கண்ணாலே பார்கத் தோணும்
 பாத்தே னானான்னெ றுலகில் பகர்ந்தா யானால்
நேரேநீ தலைவெடித்து தெறித்துப் போவாயி
 நீமவுனமா யிருக்க நிஷ்டையாமே (502)

நிஷ்டையாம் தேவாங்கி லின்னமொன்று
 நிகழ்த்துகுறேனதித வித்தை நிசமாய்ப் பாரு
நிக்ஷ்ட்டையாம் தேவாங்கு பிடித்து வந்து
 நேயமாம் பாண்டத்தி லிட்டு நீயும்
நெக்ஷட்டையாம் மேனிச் சார்படி தா னொன்று
 நீக்கரிய பாண்டத்தி லொக்க விட்டு
நெக்ஷட்டையாம் மேல்மூடி சீலை செய்து
 நிலையான யடுப்பேத்தி தீயை மூட்டே (503)

---

501. இந்த மையை இரு கடைக்கண்ணிலும் இட்டு சுழி முனையிலும் நின்றால் பரை வார்த்தை சொல்வாய்.

502. சரஸ்வதி நடனம் செய்வாள் எட்டு லட்சுமியும் வசிப்பார்கள். ரிஷிகள் சித்தர்சுள் தோற்றம் தருவார்கள். இந்த முறையை வெளியில் சொல்லி சாபம் எய்தாமல் மௌனமாய் இருந்து தியானம் செய்வாயாக.

503. தேவாங்கு என்று சொல்லப்பட்ட மூலிகையை எடுத்து வந்து ஒரு மண்பாண்டத்தில் இட்டு மேனிச் சாறு ஒரு படி இட்டு மேல்சட்டி மூடி அடுப்பேற்றி

தீமூட்டி சாறெல்லாம் வத்து மட்டும்
சிறப்பாக தீயெறித்து பதத்தைப் பார்த்து
தீய்மூட்டி யிறக்கியே யாறவைத்து சென்று
ரவிதன்னி.......டுந் துளாக்கி
தீயான சீலை வடிக்கொண்டு நன்றாயி
தேங்காயின் குடுக்கையிலே யடைத்து வைத்து
தீயான கருவொன்று சொல்வேன் மைந்தா
சிறக்கவே யாதளையின் முத்து வாங்கே (504)

ரசமணி

முத்து நீ வேண்டியது வாங்கி மைந்தா
முசியாய் கரியுப்பு பதினாறி லொன்று
வித்தோடே சேத்திடித்து யெண்ணை வாங்கி
வெங்கலமாம் கவசத்தில் வைத்துக் கொள்ளு
யத்தான சூதமொரு பலந்தான் தூக்கி
யப்பனே சுத்தி செய்து வைத்துக் கொண்டு
வித்தான யண்டிவிரை ... ... லத ...ட்டி
வெண்ணையாம் வழித்து வொரு சட்டியில் போடை (505)

போட்டுமே சூதத்தில் னாலும் வாங்கி
புகழான தேவாங்கு பொடி மேல் போட்டு
ஆட்டுமே ஆதளையின் யெண்ணை படிதானொன்று
அளந்திட்டு ஆடுதொடா மூலிச் சாறும்
மாட்டுமே மணக்காடை நெய்தான் சேரே
கலந்து விட்டு மேல்மூடி சீலை செய்து
போட்டுமே கருவெல்லாம் விறகு கொண்டு
புகழான தீபம் போ லெரித்திடாயே (506)

---

504. சாறு சுண்டும் வரை தீ எரித்து ஆற வைத்து ரவியில் உலர்த்தி சீலையில் வடிகட்டி தேங்காய் குடுக்கையில் வைத்துக் கொள்க ஆதளை வித்தும்

505. கரியுப்பு பதினாறில் ஒன்று சேத்து தைலம் வாங்கி வெங்கலப்பாத்திரத்தில் வைத்துக் கொண்டு சூதம் ஒரு பலம் கல்வத்தில் வைத்து இந்தத் தைலம் விட்டு வெண்ணெய் போல் அரைத்து ஒரு சட்டியில் வைத்துக் கொண்டு

506. தேவாங்குபடி ஆதளை எண்ணெய் ஆடுதோடா இலைச்சாறு மணக்காடை நெய் விட்டு மேல் சட்டி மூடி தீபம் போல

எரித்திடவே யிரவுபகல் பன்னிரெண்டு சாம
மிறக்கியே யாறவிட்டு யெடுத்துப் பாரு
யெடுத்திடவே ரசமணிதான் னென்ன சொல்வேன்
னிடைபோகாரவினிட காந்தி யொவ்வாய்
எரித்திடுவே...... ல் வைத்து யுரிக்கிப் பாரு
யென் மக்காள் வெள்ளி பொன் போல கண் விட்டாடும்
எரித்திடவே சாறணையால் கெவன மோடும்
மினமரிந்து செய்திடியலோர் வேதை பாரே (507)

வேதையாம் மூலியொடு நவலோகத்தில்
விதமான தயிலத்தா லக்ஷட்ட சித்து மாமே
வேதையாம் சூதத்தை விரித்துச் சொன்னால்
விண்ணேது மண்ணேது விளம்புவேன் யான்
வேதையாம் வெவ்வேறே விரித்துப் பாரு
விள்ளுறேன் னின்னமொரு வித்தை கேளு
வேதையாம் ரசத்தினிட மனிதானொன்று
விதமான கஸ்தூரி மஞ்சள் வேரே (508)

வேறான மலைதோரும் பறவைக் கீறி
மெத்த வுண்டு யதின்தோலை யுரித்து வந்து
வேறான மூன்றுமதில் பொதிந்து நன்றாயி
மேலான பரித்தகட்டில் யெந்திரம் செய்து
வேறான மேல்பொதிந்த குளிசமாடி
விளங்கவே தம்பனத்தா லக்ஷச முரு வேத்தி
வேறான சோடச உபசாரத்தோடு
வேத்தியா மயிர் முடியில் கட்டு கட்டே (509)

---

507. பனிரண்டு சாமம் எரித்து ஆறிய பின் எடுத்து பார்த்தால் ரசம் மணியாகி இருக்கும். சாரணை செய்தால் கெவுனம் ஓடும். இனம் அறிந்து செய்தால் வேதையாகும்.

508. தைலத்தால் அஷ்டசித்து ஆகும். ரசமணியின் பெருமை எல்லை இல்லாமல் விரியும். ரசமணி கஸ்தூரி மஞ்சள் வேர்

509. மலைதோறும் காணப்படும் பறவை, கீறி, என்னும் பெயருடைய மூலிகையில் உள்ளே வைத்து தங்கத் தகட்டில் எந்திரம் செய்து குளிசம் கட்டி தம்பணம் லட்சம் உரு ஓதி சோடச உபசாரத்துடன் பூசை செய்து முடியில் கட்டிக் கொண்டால்

கட்டியே வெடிவைத்து சுட்டுப் பாரு
கலங்காதே யுண்டை ய்து விலங்கிப் போகும்
ஒட்டியே பிரங்கி வெடித்துப் போகும்
உத்தமனே பாணங்கள் விலங்கியோடும்
யட்டியே யிடிவிலங்கி லுயரப் போகும்
மாச்சரியம் தேவாங்கி லதீத வித்தை
தெட்டியே சூதத்தில் கோடா கொடி
செப்பினேன் சித்தரெல்லாம் தியங்கினாரே (510)

தியங்கினார் கருவையெல்லா மொளித்து வைத்து
திருடாக சாத்திரத்தை சொன்னதாலே
மயங்கினா ருலகத்தில் மக்காள் தானேன்று
மனத் தங்கி சூஷ்திரத்தில் சுருக்கமாக
மயங்காதே சூஷத்தில் சூக்ஷசமாக
மடக்கி வைத்த கருவை யெல்லாம் வெளியாய் சொன்னேன்
தயங்காதே பலவிதமா யறிவைப் பாற் ...
தாக்கிப்பார் பொருளெல்லாம் யொன்று தானே (511)

ஒன்றான பொறுடைங்கும் வெளியிற் குள்ளே
உத்து நின்று பிரித்ததல்லால் மத்தொன்றில்லை
ஒன்றான கறுமதுவுறுவு மாச்சு
ஒகோகோ சிவகளையு ..... று மாச்சு
ஒன்றான முற்ப்பனமும் மொடுக்கினமு மாச்சு
ஒயர்ந்து நின்ற சுத்தி சிவம் ரெண்டு மாச்சு
ஒன்றான மூலமெல்லா மதுக் குள்ளாச்சு
உறுதியாய் மனமுறைத்து காணுங்காணே (512)

---

510. பீரங்கி குண்டு விலகும். இந்த வித்தை மிகவும் ஆச்சரியமானது.

511. சித்தர்கள் உயிர்க் கருவை ஒளித்து சொன்னதால் நான் சூத்திரத்தில் மிகவும் நுணுக்கமாகவும் உண்மையை சொல்லி வைப்பேன்.

512. பொருள்கள் ஒன்றாகி வெளிக்குள் நிற்கும் பூரணமே கருவும், உருவும் ஆயிற்று சிவகலையும், சக்திகலையும் ஆயிற்று. உற்பத்தியும் ஒடுக்கமும் ஆயிற்று. சக்தியும் சிவமும் ஆயிற்று. உலகம் யாவும் இதற்குள் அடங்கியது.

காணவென்றால் கடுவென்ன புருவமைபம்
கடைக்கண்ணை தேத்துருட்டி பாரு பாரு
தானுவென்ற வட்டமாயி காணும் காணும்
தன்னுக்குள் பஞ்சவற்ணம் தானே தோணும்
மானுவென்ற வஞ்சுக்குமப்பால் பாரு
யகண்ட வெளி தீபவொளி யணுபோல் காணும்
கோணாமல் மனக்கண்ணை யதிவே பத்து
கூறுவா ரருனை மேவி கொள்ளைபாரே (513)

கொள்ளுவார் ஷக்ஷச... த்தை சொல்லக் கேளு
குறிப்பான செம்பருந்து கண்ணும்பித்தும்
விள்ளவே கிரிகித்து பித்தினோடு
விதமான திகைப்பூண்டு ......ச்சிதானும்
கள்ளவே வெளருக்கின் வேரினோடு
கடிதான சிறுநங்கை சிங்கி வித்து
தள்ளவே பாளையொடு புண்ணாக்கு மூலிதலை
சுருளி மேனி வேர் சமனாய் தூக்கே (514)

தூக்கியே முளகோடு துருசு காந்தம்
சுகமாக வகை வகைக்கு களஞ்சு கூட்டு
யாக்கவே காட்டு பண்ணி பித்துங் கூட்டி
யழகான பேய்பீற்கன் தயிலத்தா லாட்டி
பார்க்கவே மெழுகு போலாட்டி னன்றால்
பருவமாயி னிழலுலத்தி உண்டை செய்து
தாக்கவே வாசுகியின் மூலமோது
தப்பாது உண்டையை நீ பதனம் பண்ணே (515)

---

513. இந்தக் கருவை தெரிந்துக் கொள்ள இரண்டு கண்களையும் புருவ மையத்தில் செலுத்துவாயாக. அட்டமான ஒளியும் பஞ்ச வண்ணமும் தோன்றும். இதற்கு அப்பால் அகண்ட வெளியில் தீப ஒளி அணுபோல் கானும். மனக் கண்ணை அதில் செலுத்தி அருளை அடைந்து இன்பம் பெருவாயாக.

514. செம்பருந்துக் கண் என்று மறைத்துக் கூறப்பட்ட மூலிகை முதலானவற்றை பாடலில் கண்டபடி சம எடை எடுத்து

515. மிளகு, துருசு, காந்தம். கூட்டி பேய்பிற்கு தைலத்தால் ஆட்டி மெருகு பதத்தில் உருண்டை செய்து வாசுகி மூல மந்திரத்தை ஓதி

பண்ணவே வெத்திலைச் சார்தனி னுரைத்து
பரிவாக விக்ஷந்தீண்டி வருவோர்க் கெல்லாம்
கண்ணவே யிட்டிடவே விக்ஷங்கள் போகும்
கடிதான பிசாசி முதல் பூதகணமு மோடும்
விண்ணிலே போனதொறு விடிந்தான் னாலு
மீண்டு விடு மாத்திரை தான ....ண்டமோது
னன்னியே சனிதோஷம் சுறங்கள் போகும்
னாட்டாத கருவை யெல்லாம் நாட்டி னேனே (516)

னாட்டினேனே தென்றால் சொல்லக் கேளு
னதாக்களேல் லோருங் கூட்டியே தான்
வீட்டிமையா யவரவர்கள் பெறுமை சொன்னார்
வீறாகி யென்னூரலை லெளியாய் சொன்னேன்
பாட்டிலே சொன்னதினாலாவ தென்ன
பலிக்குமோ பலியாதோ வென்றெண்ணாதே
சூட்டியே சீஷ்னுக்குபதேசம் போலே
சொன்னதெல்லாம் வெளி தோணச் சொன்னேன் பாரே
(517)

சொன்னதினால் சித்தரெல்லாம் பகைத்தேன் மேலே
சூட்டினார் சாபத்தை யேகமாக
சௌன்னதினா லப்படியே சேதியென்று
பரையோடு சிவன்பாதம் பணிந்து போர்த்தி
தன்னதினால் சாபமெல்லாம் நிவர்த்தி செய்து
தள்ளிவிட்டே னென்னூலுக்கு சாபமில்லை
கன்னத்தினால் சித்தரெல்லாம் னோக்கமாக
கைலாச கிரிகோடி முரையிட்டாரே (518)

---

516. விஷம் தீண்டி வருவோர்க்கு வெற்றிலை சாற்றில் உரைத்து தர விஷங்கள் நீங்கும். செத்த உயிர் மீளும் பிசாசு பூதகணங்கள் ஓடும். சன்னி, தோஷம் சுரங்கள் தீரும்.

517. நாதாக்கள் மறைத்துச் சொன்னப் பொருளை எல்லாம் நான் வெளிப்படையாக சொன்னேன்.

518. அதனால் சித்தர்கள் பகைத்து எனது நூலுக்கு சாபம் தந்தார்கள். நான் சிவனை பணிந்து சாபங்களை நிவர்த்தி செய்தேன். சித்தர்கள் எல்லோரும் கைலாசம் சென்று

முறைசெய்தார் பரையோடு பரனும் பாத்து
முண்மையாய் பாடினதால் மோசமில்லை
திரை செய்தார்தனது சிந்தை கூர்ந்து
சித்தரிட பூட்டெல்லாம் திரக்கவே தான்
உரை செய்தார் திறவுக்கோல் பதனமென்று
உத்தமனே சித்தரெல்லா மொப்புக் கொண்டார்
கரை செய்தா ரின்னூல்தா னாறுக்காகும்
காசினியில் சிவயோகி சித்தர்க்காமே (519)

சித்தர்களுக்காகவே யின்னூல் சொன்னேன்
சிவயோகிக்காகவே யின்னூல் சொன்னேன்
பக்தறாய் குருவுக்கு தொண்டு பெண்ணி
பன்னிரண்டு வருஷமவர் பாதம் போத்தி
காத்தார் மென்றிருந்து பிள்ளைக் காகும்
கல....யரிவுள்ளே...கு பீயலாகும்
மைத்துள்ளோர்க் கின்னூலை யீயந்தாயானால்
மாண்டிடுவாய் மகத்தான சாப மெய்தே (520)

யெய்துமே கொடுத்தோறும் வாங்கி னோரும்
யேழேழு சன்னமுந்தான் நரகில் விழுவார்
யேத்துமே காமிக்கும் சண்டாளர்கும்
மிடங்கெட்ட மடையருக்கும் பசுக்களுக்கும்
யெய்துமே சூனியர்க்கும் கறுச் சொல்லாதே
யெதிர் நின்று யவறுடனே மொழி பேசாதே
யெய்துமே வேதாந்த மகக் தோயாத
மிறஞ்சியே பூரணத்தி லோதிப் பாரே (521)

---

519. சிவன் ஊமையிடம் நூலின் திறவுக்கோல் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கூறி முறையிட்டார்கள் நானும் இந்த நூல் சிவயோகி சித்தர்கள்

520. ஆகியோருக்காகவே இந்த நூலை சொன்னேன். அருள் குருவுக்கு பனிரண்டு ஆண்டுகள் தொண்டுகள் செய்து தூய்மை அடைந்த பிள்ளைகளுக்கே இந்த நூலை கொடுக்கலாம். அவர்களே இதன் உண்மைகளை அறிவார்கள்.

521. இப்படி இல்லாமல் நூல் கொடுத்தோரும் பெற்றோரும் நரகில் விழுவார்கள் காமிக்கும் உயிர் கொலை புரியும் சாண்டாளர்களுக்கும் அறிவிலிகளுக்கும் ஆணவம் முதலிய குற்றங்கள் உடையோருக்கும் கல்லம் உடையோர்க்கும் இந்த நூலின் கருவை சொல்லாதே அவருடன் மொழி பேசாதே

பார்க்கவே ஆத்தாளை தொழுதி ரஞ்சி
    பரிவான சின்மயத்தின் பாதம் போத்தி
சேர்க்கவே யாதி குரு பாதம் போற்றி
    செப்பரிய னாதாக்கள் பாதம் போற்றி
ஆர்க்கவே ......ாத்து சிலவானர் சொன்னேன்
    அனுபோகி யானாக்கா லரிவா னென்னூல்
மார்க்கமாய் மத்த மத்த னூலைப் போலே
    மைந்தனே வெளிக்காட்டாமரைத்து வையே (522)

வைய்யான சகலகலை சேதியெல்லாம்
    வளமாக யடக்கியே தெளிவாய் சொன்னேன்
அய்யமென்று நினையாதே பொய் பேசாதே
    ஆத்தாளை யனுதினமு மறவாதே நீ
செய்யாதே தீவினைதான் கொடிது பாவம்
    சேர்ந்து வெல்லா மீசனென்று தெளிந்து காணு
மெய்யான குருபதத்தை பணிந்து போற்றி
    வருந்தினேன் கறுக்கிடை சூஷத்திரந்தான் முற்றே (523)

---

522. தேவியை தொழுது அறிவே வடிவான இறைவனின் திருவடியைப் போற்றி ஆதி குருவாகிய நந்தியின் திருவடியைப் போற்றி சித்தர்கள் பாதம் போற்றி இந்நூலை சொன்னேன். அருள் உடையோர் இந்நூலின் பொருளை எளிதில் உணர்வார்கள் இந்தநூலை தூற்றாமல் பத்திரப்படுத்துவாயாக.

523. எல்லாக் கலைகளையும் இதில் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இதில் ஐயப்பட வேண்டாம். பொய், உயிர்க்கொலை, புலால் உண்ணுதல், பிற மாதரை விரும்புதல் முதலிய கொடிய பாவங்களை செய்யாது தேவியை மறவாமல் தவம் செய்வாயாக குருவின் திருவடியைப் பணிந்து எல்லா உயிரும் எல்லா நலம் பெற முடிக்கின்றேன்.

சிவகடாக்ஷசம் உண்டாக வேணும். மனோன்மணி பாதமே துணை உண்டாகவும் இராம தேவர் பாதமே துணை யிருந்து ரக்ஷிக்க வேணும் சிவமயம்.

இராம தேவர் அருளிய

அஷ்ட்டாங்க பக்ஷணி

இராமதேவர் அருளிய அஷ்ட்டாங்க பக்ஷணி

ஆதியிலே வாங்கிமன மாத்தா கூவி
அக்ஷத்திட்டு ஆதியந்தம் மறியச் சென்னாள்
சோதியிலே கருவுருவை உண்ணிப்பாரு
... ... லவே எண்ணா ஆதி செயங்கள் தானே தோத்தும்
நீதியிலே சதாநந்தி யென்னைப் பெத்தார்
நீள் திசையில் லுள்ள சித்தர் மெச்சிக் கொள்ள
வாதியென வந்தோற்கு திறவுகோல் போல
வசனித்தேன் பத்துமொரு யெட்டும் ரெண்டாய் (1)

ரெண்டாகிநீ ஒன்றான கருவைத் தொட்டு
நீண்டதடா ஆதியந்தம் நிலைக்கவே தான்
ஒன்றான றூபமடா ஆறுக்குந் தோணா
உண்மையடா மவுனியடா வாலைப் பெண்தான்
நின்றாளே நகரமேல் மகாரங்கியே
நிறுவி கற்ப்பச் சமாதியென நின்றவாமி
கொண்டாளே ஆதியந்த மரியவென்று
....சகமய மேதினிப் பூசி திலர்த பூண்டாள் (2)

பூண்டவள்தான் வீதியிலே நடனம் கொண்டாள்
புதுமையுள்ள சித்தர்மெத்த போதனர்கள் கூடி
ஆண்டவளோ அல்ல வென்றால் வாற்ப் பெண்ணோ
அறிந்தவளாசை நிறுத்த வந்தஊமப் பெண்ணோ
தாண்டவத்தில் சிவனை வென்ற தாயோ வென்று
தவமுனியும் சிவமுனியும் தானே கூடி
வேண்டுவதுக் கிவளுடைய நிதானங் கண்டால்
வேண்டலா மென்று சொல்லி மயங்கினாறே (3)

---

1. தேவி என்னை அழைத்து ஆதி அந்தம் என்பதை உபதேசித்தாய் கரு உருவான இதனை கண்டால் எல்லா அதிசயங்களும் தோன்றும் சித்தர்களுக்கு திறவு கோலான எட்டும், இரண்டும் பத்தான விவரத்தை இந்நூலில் சொல்லுகிறேன்.
2. யாருக்கும் தோன்றாத ஆதி அந்தத்தை மௌன வடிவான வாலைப் பெண் சொன்னாள் இவள் மௌன கர்ப்ப சமாதியில் நிற்கும் வாமியும் ஆவாள்.
